
www.tamilarangam.net

# தேசம்

SHANKAR
231 NORTHOLT RD. S. HARROW

சர்வதேச தமிழ்ச் சஞ்சிகை ● இதழ் 2 ● ஜனவரி - மார்ச்





- தொடரும் யுத்தம் தாங்குமா பொருளாதாரம் ?
- அபிவிருத்தியும் சூழல் பாதுகாப்பும்
- சர்வதேச அரங்கில் ஈழவிடுதலை போராட்டம்
- ஆன்மீகம் - சாது செல்லப்பாவுடன் நேர்முகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# IMPORTERS & EXPORTERS OF INDIAN AND SRILANKAN COMMODITIES

## GROCERY, OFF LICENCE & NEWS AGENTS

KRS

# K.R.S.ENTERPRISES

KRS

Whole Salers & Retailers Of

Indian, SriLankan & Continental Food

537 High Road, Wembley, Middx, HA0 2DJ

**Tel : 0181 903 9252**


**Fax : 0181 902 0199**

## QUALITY & COMPETITIVE PRICES! PLEASE COME & VIEW!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

சர்வதேச தமிழ் சஞ்சிகை
# தேசம்









## பாதுகாப்பு


**தளரும் பிடி..........................................06**

(6,7,12,13,59,60 ஆகிய பக்கங்களை பார்க்க)
யாழ் தீபகற்பத்தை தம் இராணுவக் கட்டுப்பாட்டினுள் வைத்துள்ள இலங்கை அரசிற்கும் தீபகற்பத்தை மீட்க போராடும் புலிகளுக்கும் இடையிலான இராணுவ, அரசியல் களம்.

## பிரதேச வேறுபாடு


**Ramiy Records Forever (for) Jaffna People..........................................14**

ஈழத் தமிழ் மக்களை பீடித்திருக்கும் பிரதேச வேறுபாடுகளின் தாக்கம் அந்நிய மண்ணிலும் அதன் தன்மைகளை காட்டுகின்றது. யாழ் மேலாதிக்கத்துவத்தின் சொச்சங்கள் வளர்க்கும் ஏற்றத் தாழ்வுகள்.


சுதந்திர தினம்.........16 குண்டு வெடிப்பு........16


## பொருளாதாரம்


**தொடரும் யுத்தம் தாங்குமா பொருளாதாரம்..........................................17**

15 ஆண்டுகளாக வெற்றிகான முடியாத உள்நாட்டு யுத்தத்தை நடத்தி; சுதந்திரத்தின் போது ஆசியாவின் Tiger Economy என்று பெயர் பெற்ற நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்த ஆட்சிகள் நடத்தும் யுத்தம்.

## தென் ஆசியா


**சர்வசே அரங்கில் ஈழ விடுதலை......23**

தமிழீழ விடுதலைப் போராட்டமானது அதனை முன் எடுத்தவர்கள் செய்த தவறான அணுகு முறையினால் சர்வதேச ஆதரவை இழந்து வருகின்றது.

## சமூகம்


**கேள்வியும் நிரம்பலும்..........................40**

ஈழத்திலிருந்து கடல் தாண்டியும் சீதனம் மேற்குலகு வரை தன் கொடிய கால்களை பதித்துள்ளது. விவா-கச்சந்தையில் பெண்கள் அனுபவிக்கும் துயர், இது பெண்ணடிமைத் தனத்தின் இன்னுமோர் பக்கம்.

## மொழி


**தமிழியல் வெளியீட்டுத் தொடர்பகம்.43**

உலகின் வெவ்வேறு பாகங்களில் இருந்து வெளியாகும் தமிழ் வெளியீடுகளை அனைவரிற்கும் கிடைக்க கூடிய வகையில் சந்தைப்படுத்தும் களஞ்சியப்படுத்தும் செயல் திட்டம்.

## சூழல்


**அபிவிருத்தியும் சூழல் மாசடைதலும்.46**

21ஆம் நூற்றாண்டின் பாரிய பிரச்சனையாக உள்ளதும் தமிழ் சமூகத்தினால் கருத்திற்கு எடுக்கப்படாததுமான ஓர் சுற்றாடல் பிரச்சனை.

## ஆன்மீகம்


சாது செல்லப்பா உடனான நேர்முகம்.52

திரைவலம்..........................................55

விளையாட்டு..........................................57

விஞ்ஞான விளக்கம்..............................58

ஆசிரியர் தலைப்பு..................................08

தேர்தல் கவிதை....................................10

வாசகர் கவிதை-இது என் தேசம்.....51


தலதா மாளிகை - இலக்கு..................60


தேசம் J.R Print 57 Boundary Rd, Waltamstow, London, E17 8NQ பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






**இலங்கை அரசானது இராணுவம், தமிழ் குழுக்கள், தமிழர் விடுதலை கூட்டணி போன்றவற்றின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி; சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்கு முனைகின்றது. ஆனால் புலிகளின் தாக்குதலானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன.**

# தளரும் பிடி

குடா நாட்டிற்காக, விரியும் போர்க் களம்.

அ.கிருஷ்ணா

யாழ்ப்பாண தீபகற்பம் இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பில் அடங்கி சுமார் 20 மாதங்கள் ஆகிவிட்டது. இலங்கை அரசானது இராணுவம், தமிழ் குழுக்கள், தமிழர் விடுதலை கூட்டணி போன்றவற்றின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவதற்கு முனைகின்றது. யாழ்ப்பாணத்தில் சகஜநிலை திரும்பிவிட்டது என்று இராணுவமும் இலங்கை அரசும் பிரச்சாரத்தை மேற்கொண்ட போதிலும் புலிகளின் தாக்குதலானது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது என்பதை அங்கிருந்து வரும் செய்திகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இது தொடர்பாக இலங்கை

www.tamilarangam.net

## பாதுகாப்பு

இராணுவத்தால் யாழ்குடா நாட்டை எவ்வளவு காலம் தொடர்ந்து இராணுவ கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும் என்பது இராணுவ ஆய்வாளர்கள் மட்டுமல்ல பொது மக்களும் அன்றாடம் எழுப்பும் கேள்விதான். ஆனால் இதற்குரிய விடைதான் பலரும் தம்முடைய அறிவு, அனுபவம், விருப்பு, வெறுப்பு போன்ற பல காரணங்களுக்கேற்ப உருவகித்துக் கொள்கின்றார்கள்.

யாழ் தீபகற்பத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதற்கு மிக முக்கியமானவை:-


1) புவியியல் கட்டுப்பாடு அல்லது பௌதீக நிலை
2) கடல் கட்டுப்பாடு
3) பொதுமக்கள் ஆதரவு
4) சர்வதேச ஆதரவு
5) இராணுவ மனநிலை
6) அரசியல் தீர்வு

போன்றவற்றின் மூலமே யாழ் தீபகற்பத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும். யாழ்குடா நாட்டை தம் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க விரும்பும் எந்த ஒரு சக்தியும் முதலில் கட்டுப்படுத்த வேண்டியது கடற்பகுதி ஆகும். ஏனெனில் யாழ் குடா நாடு இலங்கைத் தீவுடன் இரண்டு மெல்லிய பகுதிகளால் இணைக்கப்பட்டுள்ளது.ஒன்று ஆனையிறவு, மற்றையது கிளாலி. இரண்டுமே மிகவும் இலகுவாக கண்காணிக்கவோ கட்டுப்படுத்தவோ கூடியது. யாழ் தீபகற்பத்தின் ஏனைய பகுதிகள் கடல் சூழ்ந்த பகுதிகள் ஆகும். யாழ் தீபகற்ப கடல் பகுதியானது இராணுவ சிவில் போக்குவரத்து, ஆயுத தளபாட விநியோகம் போன்றவற்றிற்கு இன்றியமையாததாகும்.

யாழ்குடா நாட்டை கைப்பற்றும் எந்த படையினரும் தம் முழு ஆள் ஆயுத தளபாட விநியோகத்தை சிறிய இணைப்பு பகுதியினூடாக நகர்த்துவது என்பது இராணுவ ஆய்வாளர்களின பார்வையில் தற்கொலைக்கு ஒப்பானது. எனவே கடலினூடாகவே எந்தவொரு பாரிய இராணுவ நகர்வும் செய்ய முடியும். அவ்வாறே யாழ் குடாநாட்டிற்குள் ஊடுருவுவதற்கும் கடற்பகுதிதான் இன்றியமையாததாகும். யாழ் தீபகற்பத்தைச் சூழவுள்ள கடற்பகுதி ஆழம் குறைந்த பகுதியாகும். இதில் பாரிய போர்க் கப்பல்கள் மூலம் மேற்பார்வை செய்யலாமே ஒழிய கடற்பகுதியை கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதோ, ஊடுருவல்களைத் தடுப்பதோ என்பது இலகுவான காரியம் அல்ல. அதற்கு பாரம் குறைந்த இலகு சண்டைப் படகுகள் வேண்டும். இலங்கை கடற்படையிடம் உள்ள இஸ்ரேலியத் தயாரிப்பான டோரா விசைப்படகுகள் இவ்வகையைச் சார்ந்தவை. ஆனால் இலங்கைக் கடற்படையிடம் யாழ் தீபகற்பத்தைச் சுற்றியுள்ள கடற் பகுதியை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்குமளவு போதுமான டோராப் படகுகள் இல்லை. இதனால் இலங்கைக் கடற்படையால் புலிகளின் ஊடுருவலை மட்டுப்படுத்தலாமே ஒழிய கட்டுப்படுத்த முடியாது.

அத்துடன் புலிகள் கடல் ரோந்து செல்வது போல ஜாடை செய்து படையினரை தாக்குவதால் இப்போது படையினர் புலிகளைத் துரத்திச் சென்று தாக்குவது என்பது புலிகளின் பொறிக்குள் மாட்டுப்படுவது போன்றே படையினருக்குத் தெரிகின்றது. இதனால் வெளியே கூறாவிட்டாலும் பெரும்பாலும் விசைப் படகுகள் புலிகளைத் துரத்திச் சென்று தாக்குவதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. எனவே புலிகள் இலகுவாக குடா நாட்டிற்குள் ஊடுருவுகின்றனர்.

யாழ் தீபகற்பத்தில் உள்ள கடல் நீர் ஏரிகள் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால் யுத்தத்தில் ஈடுபடும் இரு பகுதியினரும் இதன் பயன்பாட்டை முழுமையாகப் பயன்படுத்தவில்லை.



பருத்தித்துறை கடலை கண்காணிக்கும்helicopter gunship

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**Editor**
**Thesam**
The International Tamil Magazine
**73, Oakdale Rd**
**E11 4DJ**
**Britain.**

**50வது சுதந்திர தினம்**

# ஐந்து பூச்சியங்கள்

பெப்ரவரி 04 1948ல் இந்தியா சுதந்திரம் பெற்ற ஆறாவது மாதம் இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது. தியாகங் களோ அர்ப்பணிப்புக்களோ இல்லாமல், இந்தியாவே தம் கையை விட்டுப் போய்விட்டது என்ற நிலையில் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கியது பிரித்தானிய முடியாட்சி. அதனால் இந்தியாவில் பல்வேறு இன, மத, சாதிய, பிரதேச வேறுபாடுகள் இருந்தும், அங்கு ஓர் இந்திய தேசிய உணர்வை கட்டி எழுப்பினார் காந்தி. ஆனால் நூவின மக்கள் வாழும் இருமொழி பேசும் இலங்கையில் இலங்கை தேசிய உணர்வை கட்டி எழுப்ப முடியவில்லை. காரணம் அந்நிய ஆட்சிக்கு எதிராக போராட வேண்டிய அன்றைய சூழ்நிலையில் தமக்குள்ளேயே முரண்பட்டு மோதினர் இலங்கையர். பௌத்த மறுமலர்ச்சி, சிங்கள முஸ்லீம் கலவரங்கள், மலையாளி எதிர்ப்பு என முரண்பாடுகள் வளர்ந்தது. தூரநோக்கற்ற சிங்கள அரசியல் வாதிகள் பிரச்சனையின் அடிப்படையை ஆராயாமல் எழுந்தமானமான காரணங்களை வைத்துக்கொண்டு சிறுபான்மை இனங்கள் மீது பழிபோட்டு சிங்கள மக்கள் முன் பெரும் தலைவர்கள் ஆயினர்.

இதே நிலைதான் சுதந்திரத்தின் பின்னும் நிலவுகின்றது. அயல் நாடான இந்தியாவில் 1950ல் மொழி வழி மாநிலங்களை அன்று உருவாக்கி இருக்காவிட்டால் இன்று இந்தியாவை வரைபடத்தில் வில்லைகளை வைத்துத்தான் பார்த்திருக்க முடியும். ஆனால் இருமொழி பேசும் இலங்கையில் அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள முன்வராத சிங்கள அரசுகள் இன்று தம் சுதந்திர தினத்தை சுதந்திரமாகவா கொண்டாடுகின்றார்கள்? சுதந்திர இலங்கையை தன்னால் பாதுகாக்க முடியாதுள்ளதால் தனது பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து விலக இராஜினாமா கடிதம் கொடுத்துள்ளார் அனுரத்த ரத்வத்த. அன்று பாராளுமன்றத்தில் ஒரு மொழி இருநாடா? இருமொழி ஒருநாடா? என்ற கொல்வின் ஆர்.டி.சில்வாவின் கேள்விக்கு தகுந்த பதிலை அளித்திருந்தால் அழகிய இலங்கைத் தீவில் இன்று மரண ஓலங்கள் கேட்குமா?

தமிழ் மக்களின் தலைவர்களாக பாராளுமன்றம் சென்ற தலைவர்கள் தமது கடமையை சரிவரச் செய்தார்களா? பிரித்தாளும் பிரித்தானியாவின் தந்திரத்தால் இப்படி நிகழ்ந்தது என்றால், அதனை பகுத்தறியும் ஆற்றல் இல்லாமல் எதற்காக இவர்கள் அரசியலில் இறங்கினார்கள். நீதி மன்றத்தில் பொய்களையே மெய்களாக்கும் இவர்களுக்கு ஏன் பாராளு மன்றத்திற்கும் உலகிற்கும் உண்மையைக் கூறி, உரிமை-களைப் பெற முடியாமல் போனது. இவர்களது பகுதி நேர

www.tamilarangam.net

நேர்மையற்ற அரசியல் வழிநடத்தல்கள் ஈழத்தமிழ் சமூகத்தின் வாழ்க்கையையே போராட்டமாக்கியுள்ளது.

அன்று அரசியல் வாதிகளை குறை கூறிக் கொண்டு களம் புகுந்த இளைஞர் குழுக்கள் இன்று என்ன செய்கின்றனர். அரசியல் வாதிகள் மக்களை ஏமாற்றினார்கள் ஆனால் ஆயுதம் ஏந்திய இளைஞர்களோ கொலையே செய்தனர். நிலமைகள் இப்படியே தொடர்ந்தால் பெரும்பான்மை சமூகம் தனது 100வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் போது ஈழத்தமிழ் சமூகத்தை இலங்கைக்கு வெளியே தான் தேட வேண்டும். இன்று இலங்கையின் நிலை இன்றிலும் நேற்று பரவாயில்லை என்பது தான். அதாவது ஒவ்வொரு நாளும் நிலமைகள் மோசமாகிக் கொண்டே செல்கின்றது. அந்நிய மண்ணில் இருந்து கொண்டு -கிரிக்கெட் ஸ்கோர் கேட்பது போல்- "பெடியள் 30, 40 பேராம் ஆமில 100க்கும் மேலயாம்" என்று மனித நேயம் இன்றி சர்வசாதாரணமாக பேசுகின்றோம். சில சமயம் ஆலயங்களிலும் இவ்வுரையாடல்கள் நிகழும். நாம் பேசும் போது உயிர் என்பதனை உணர்கிறோமா? அங்கு உயிர் இழப்போர் எல்லாம் சடப்பொருட்களா? உரிமைக்காகவும் வறுமையிலும் உயிர் இழக்கும் இவர்களும் மனிதர்கள். நாகரீகம் வளர்ந்த மேற்குலகில் ஓர் உயிருக்கு ஆபத்து என்னும் போது சமூகம் கொந்தளிக்கின்றது. ஆனால் இங்கு நாம் எண்ணிக்கைகளையே கூட்ட பழகியுள்ளோம்.

போராட்டங்களும் போராட்ட வடிவங்களும் காலத்தேவைக்கு ஏற்ப புணரமைக்கப்பட வேண்டும். அரசியலாளர்கள் தம் நலனுக்கு முன் நாட்டு மக்களது நலனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு முன் நாட்டு மக்களுக்கு அடிப்படைச் சுதந்திரத்தை வழங்க வேண்டும். அடுத்த சுதந்திர தினத்தில் அரசு இதனை செய்யுமா?

N.Selvaraj
48, Hallwicks Rd
Stopsly
Luton
LU2 9BH

ஆசிரியருக்கு வரும் கடிதங்களில், எழுதுவோர் தம் பெயர் முகவரியை தெளிவாக குறிப்பிடவும். நீங்கள் விரும்பினால் உங்கள் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடவும். தொடர்புகளுக்கு இலகுவாகும். மேலும் தங்கள் கடிதங்களில் இடைவெளி தெளிவு இவற்றிற்காக சிறு மாற்றங்கள் செய்யப்படலாம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒவ்வொரு இதழிலும் அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட தமிழ் பிரசுரங்கள் பற்றிய குறிப்பினை தேசத்தில் தொகுத்து வழங்க முடியுமாயின் பயன் மிக்கதாக இருக்கும். தங்கள் வெளியீட்டு முயற்ச்சி தடையின்றித் தொடர்ந்து கை கூட என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

Yalpadi Kanthan
14 Loampit Hill
Lewisham
London
SE13 7SW


முதலாவது இதழே நன்றாக அமைந்திருந்தது. ஆய்வுக் கட்டுரைகள் பாராட்டப்பட வேண்டியவை. குறிப்பாக புலம் பெயர்ந்தவர்களுடைய தனித்துவம் பேணப்பட வேண்டும் என்ற கருத்து மிகவும் வரவேற்கப்பட வேண்டியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தல் விருத்தம்

தேர்தல் வருமென்று ஏங்கி இருந்தார்க்கு
தேதி குறித்த கதை தேனாய் இனிக்க
தேடினார் மக்களை யாழ் எல்லாம் தேடி
ஓடினார் மக்கள் ஓடினாரே......



வேட்பாளர் வேணும் எனச் சம்பந்தர் சொல்ல
கேட்பார் இல்லையென சங்கரி புலம்ப
யாழ்ப்பாணம் ஓடி வீடெல்லாம் தேடி
பிடித்தால் ஒருவனை வயதோ பதினாறு.

ஈபியும் கேட்குமாம் டிபியும் கேட்குமாம்
சித்தரும் மாணிக்கர் கூட்டமும் விலக்கோ
கூட்டணி குழம்பி அம்மாவை நாட
ஓமென்றார் திருமதி யோகேசர் ஓமென்றாரே!

அரைவாசிப் பேர்கள் வன்னியில், தொல்லையில்
மறுபாதிப் பேர்கள் வீதியில் வியாதியில்
ஒரு கொஞ்சப் பேர்கள் ஆமியின் வதைகளில்
கொழும்புக் குழுக்களோ கூப்பினர் கைகளை

வெளவால் வருமென்று சொன்ன கூட்டணி
தாவிக் கொழும்புக்கு ஏவிய நாள் முதல்
சந்திரி அம்மையின் பிச்சையில் பிழைத்து பின் யாழ்
சந்திக்கு வருகினம் சந்திக்க யாரை?

www.tamilarangam.net

தேர்தல் கவி

# பிரதேச சபைக்கு.....

கடைகளும் கல்லூரிகளும்
நூலகமும் வேலவன் கோயிலும்
தீயின் சுவாலையில்
சிதைந்து கிடந்தது.....

போரென்றால் போரென்று
தென்னிரங்கையிலிருந்து
கிள நரி ஒன்று
சபதம் செய்தது.....

கொல்லும் அரசுகளின்
கொடுமை தாங்காமல்
குழுக்களாய் இளைஞர்கள்
கூடினர்
இலண்டனில் சிலர்
மதுக் கோப்பை ஒரு கையிலும்
மறுகையில் ”மாக்ஸின்”
புத்தகமுமாய்
பேசிக் கொண்டிருந்தனர்.....

நாவிறு கோவிலில் நாற்பது
சிறுவர்கள்
சுந்திரி அம்மையால்
சாகடிக்கப்பட்ட பின்னும்
ஆயுதக் குழுக்கள் அறிக்கை
விட்டன
பேச்சு வார்த்தைக்கு
தேதி குறிக்குமாறு.....

மாநிலம் போய் மாகாணம் போய்
மாவட்டம் போய்
மரியாதை, கௌரவம் போனபின்
யாழ்ப்பாணம் போயினர்
குழுக்களும் கூட்டணியும்
சுயநிர்ணயம் பற்றி பேச
அல்ல.....
பிரதேச சபைக்கு
வேட்பு மனு செய்ய.....

ஈஸ்வரி உடம்பில்
சிகரெட் காயங்கள்.....
இதுவரை அறியா
கொடிய வதைகளில்
அவள் அழுத குரலிலே
பூசா மட்டுமல்ல
ஆகாயமும் அதிர்ந்தது......
கூட்டணி மட்டும்
வட்ட மேசை மாநாடு பற்றியே.....

புதியவன்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் 18% னரே வாக்களித்தனர். இதன் அர்த்தம் மக்கள் பகிஸ்கரித்தனர் என்பதில்லை, வாக்களிப்பதற்கும் வாக்களிக்காமல் இருப்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதனால் தம் நேரத்தை விரயமாக்காமல் தம் அலுவல்களை கவனித்தனர். இந்த ஜனநாயகத்தை யார் கேட்டது குழுக்களிடமும் கூட்டணியிடமும் ?.

தேர்தல் முடிவுகள் 51ஆம் பக்கம் பார்க்க...

www.tamilarangam.net



இதன் பயன்பாடு யாழ்குடா நாட்டை மீண்டும் கைப்பற்ற விடுதலைப் புலிகளுக்கு மிக இன்றியமையாதது ஆகும்.

யாழ்குடா நாட்டில் புவியியல் பௌதீக அமைப்பைப் பொறுத்தவரை பாரிய வேறுபாடுகள் அற்ற சமதரையாகும். தரை உயர வேறுபாடு கடல் மட்டத்தில் இருந்து 50m இற்கு உள்ளாகவே இருக்கின்றது. இத் தரையமைப்பானது கனரக ஆயுதங்களுடனும் ஆட்பலத்துடனும் இருக்கும் இலங்கை இராணுவம் போன்ற மரபுரீதியான படைக்கு மிகவும் சாதகமானது.

இலங்கை இராணுவம் யாழ் தீபகற்பத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் எல்லாம் பாரிய இராணுவ முகாம்களை அமைத்துள்ளது. வலிகாமத்தில் பலாலியில் விமான நிலையத்துடன் கூடிய இராணுவ முகாம், வசாவிளான் தொடங்கி காங்கேசன்துறை வரை நீண்டுள்ளது. இதவே வடபகுதியிலுள்ள பாரிய இராணுவ முகாம் ஆகும். இது புலிகள் யாழ் தீபகற்பத்தை மட்டுமல்ல வன்னி பெருநிலப்பரப்பையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும் அச்சுறுத்தலாகும். பலாலி இராணுவ முகாம் கடற்படை விமானப் படை வசதியுடன் கூடிய தரைப்படை, விசேட கொமாண்டோக்கள் உள்ள ஒரு கூட்டுப்படைத் தளமாகும்.

புலிகள் இராணுவ ரீதியில் யாழ் தீபகற்பத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் முதலில் பலாலி படைத்தளத்தை நடுநிலை யாக்க வேண்டும். இது பிரதான விநியோக வழிகளை அடைப்பதன் மூலம் தான் சாத்தியப்படும். பலாலி படைத் தளத்திற்கு பிரதானமாய் இரண்டு வழிகளில் விநியோகம் நடக்கின்றது. ஒன்று வான் மூலம். இது பாரிய போக்குவரத்து விமானங்களான அன்ரனோவ்-32 போன்றவற்றால் நடக்கின்றது. இவைகளை புலிகள் தங்கள் விமான எதிர்ப்புப் படையணிகளையும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் தீபகற்பத்திற்குள் நுழைப்பதன் மூலம் சாத்தியமாக்கலாம். இரண்டாவது கடல் மூலம். புலிகளை இது வரை பாதித்துக் கொண்டிருக்கும் விடயம் இதுதான். கடற்படையினரின் பாரிய சரக்குக் கப்பல்களை தாக்கக் கூடிய கடற்கண்ணிகளோ (Anti Shipment Missiles), Surface to Sea Missiles களையோ புலிகள் இதுவரை பாவிக்கவில்லை.



சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் போது புலிகளால் நவம்பர் 1995ல் தாக்குதலுக்கு உள்ளான இலங்கை விமானப்படை விமானத்தை படைத் தளபதிகள் பார்வையிடுகின்றனர்.



ஆனால் இவற்றை புலிகள் பாவிக்கத் தொடங்கினால், பொருளாதாரரீதியில் இத்தகையதொரு தளத்தை நீண்ட காலம் வைத்திருக்க முடியாது என்ற உண்மை இலங்கை அரசிற்கும் இராணுவத்திற்கும் புரியும். அதே போல் புலிகளும் அவ்வாயுத தளபாடங்களை கொள்முதல் செய்யத் தேவையான பொருளாதார பலமுள்ளவர்களா? என்பதும் இங்கு முக்கிய காரணியாக அமையும்.

எந்த ஒரு யுத்தத்தையும் இராணுவ பலத்தினால் மட்டும் வெல்ல முடியாது என்பது இராணுவத்துறை ஆய்வாளர்களின் கருத்தாகும். பொருளாதாரரீதியில் ஒப்பீட்டளவில் பலமற்ற இராணுவம் யுத்தத்தில் வெற்றி பெறுவது கடினம். நீண்ட கால நோக்கில் பொருளாதாரத்தால் தாங்கிக் கொள்ள முடியாத யுத்தத்தை தொடர உண்மையில் எந்தவொரு அரசாலும் முடியாது. இலங்கை அரசு இதற்கு விதிவிலக்கல்ல.

யாழ் தீபகற்பத்தில் இலங்கை இராணுவத்தினரிற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் உண்டு. ஒன்று யாழ் தீபகற்பத்தைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருத்தல் இரண்டு யாழ் நகரைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருத்தல்

இவை இரண்டிற்கும் ஏற்பவே படை முகாம்களை இராணுவத்தினர் அமைத்துள்ளனர். பலாலி, காரைநகர், கொடிகாமம், பருத்தித்துறை, ஆனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யிறவு போன்ற இடங்களில் அமைந்துள்ள முகாம்கள் முதலாவது வகை நோக்கத்தைக் காக்க அமைக்கப்பட்டுள்ளன. சுண்ணாகம், உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலி, தட்டாதெரு, நல்லூர், யாழ்நகர் போன்றவற்றில் அமைந்துள்ள ஒப்பீட்டளவில் சிறிய முகாம்கள் யாழ்நகரைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவற்றின் அமைவிடம், அமைப்பு முறை, காரணமாக இவை இலகுவில் புலிகளின் தாத்துகலில் அழிக்கப்படக் கூடியவையாக உள்ளன. புலிகளின் பலவீனம் அப் பகுதிக்குள் தாக்குதலுக்குத் தேவையான ஆள், ஆயுத, தளபாடங்களை நகர்த்துவது. ஆனால் புலிகள் நகர்த்தினால் யாழ் நகரை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் யுத்த தந்திரத்தை மட்டுமல்ல இராணுவ முகாம்களையும் மாற்றும் நிலைக்கு இலங்கை இராணுவம் தள்ளப்படும். இது இலங்கை அரசாலோ, இராணுவத்தாலோ விரும்பப்படும் செயலாக இருக்க முடியாது.

தீபகற்பத்தில் உள்ள பெரும்பான்மையானோர் தமிழ் மக்கள் (ஏனையோர் முஸ்லீம்கள்). அவர்கள் இலங்கை இராணுவமும் அரசும் என்ன நன்மைகள் செய்தபோதிலும் இரண்டையும் ஒரு ஆக்கிரமிப்புப் படையாகவே எண்ணுகின்றார்கள். தங்கள் சுதந்திரம் அல்லது தாயகம் பறிக்கப்பட்டதாகவே எண்ணுகின்றார்கள். இலங்கை இராணுவத்தினரின் பிரசன்னம், கட்டுப்பாடு, இராணுவக் கெடுபிடிகள் இருக்கும் வரையில் இவர்களுக்கு




தீபகற்பத்தில் இராணுவத்தினர்.

என்றும் இவ் எண்ணம் இருந்து கொண்டேயே இருக்கும். இவர்கள் மனங்களை வெல்ல வேண்டுமாயின் இராணுவக் கட்டுப்பாடு, கெடுபிடிகளைக் குறைக்க வேண்டும்.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களை தமிழ் மக்கள் தான் ஆள்கின்றார்கள் என்ற மாயையை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்வது சாத்தியமோ? அல்லது சாத்தியமில்லையோ? ஆனால் அவ்வாறான நடவடிக்கை தீபகற்பத்தில் இராணுவ நிலைப்பாட்டை இராணுவரீதியில் பலவீனப்படுத்திவிடும். இராணுவ நிலை பலவீனப்பட்டால் தீபகற்பத்தில் புலிகளின் பிரசன்னம் அதிகரிக்கும். அவர்களின் நிலை பலப்படுத்தப்படும். இது இராணுவ [illegible]

களின் மனோநிலையையும் பலவீனப்படுத்திவிடும். இதை தடுக்கத்தான் இலங்கை அரசு தமிழீழ விடுதலை என்ற பெயரில் உள்ள தமிழ் குழுக்களின் உதவியை பயன்படுத்துகின்றது. இவ்வாறான குழுக்கள் தாங்கள் தமிழினத்திற்கு என்ன செய்கின்றோம் என்று தெரியாமலே, தங்கள் சொந்த குழுவாதத்திற்காக தமிழ் மக்களையே தமிழ் மக்களின் தாயகம் சுதந்திரம் போன்றவற்றை அரசுக்கு அடகு வைக்கின்றார்கள். இவர்களின் உதவியுடன் இலங்கை அரசு தேர்தலை நடத்தி தன்னுடைய சிவில் நிர்வாகத்தை



ஈழக் கடல் எல்லையில் கடற் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## RAMY RECORDS FOR EVER (FOR)

RAMIY RECORDS

# JAFFNA PEOPLE

**இங்கு யாழ்ப்பாண மக்களுக்கு என்று குறிப்பிடும் வாசகம் ஒரு வியாபார தந்திரத்தை குறிக்கோளாக கொண்டதாக தெரியவில்லை. இது மேற்கூறிய படி அமிழ்ந்திருக்கும் யாழ் மேலாதிக்க வக்கிர சிந்தனையின் ஒரு வெளிப்பாடே.**

அண்மையில் ஒரு தமிழர் வியாபார ஸ்தாபனத்தில் ஒட்டப்பட்டிருந்த ஓடியோ சீடிக்களுக்கான விளம்பரத்தாள் ஒன்றில் காணப்பட்ட வாசகம் தான் தலைப்பு.

தமிழீழப் போராட்டத்தின் அவசியம் இரண்டு தேவைகளைக் கொண்டிருந்தது. ஒன்று ஆக்கிரமிப்பு அரசிடம் இருந்து மண் விடுதலை. இரண்டாவது மண்ணுக்குள்ளேயே மறைந்திருக்கும் சாதிய, பெண்ணடக்குமுறை, பிரதேசவாதங்களுக்கு எதிரான போராட்டம்.

மேல் கூறியவற்றை பேசிப் பேசியே அனைத்து அமைப்புக்களும் சரியான வேலைத் திட்டத்தை வைப்பதில் தவறிப்போயின. உக்கிரமான போர், தண்டனைக்கான பயம், சிரழிந்து போன வாழ்வியல், தமிழீழத்தில் மேற்கூறிய அடக்குமுறைகளை அமிழ்த்தி வைத்தனவே தவிர மாற்றி அமைக்கவில்லை.

**தமிழீழப் போராட்டத்தின் அவசியம் இரண்டு தேவைகளைக் கொண்டிருந்தது. ஒன்று ஆக்கிரமிப்பு அரசிடம் இருந்து மண் விடுதலை. இரண்டாவது மண்ணுக்குள்ளேயே மறைந்திருக்கும் சாதிய, பெண்ணடக்குமுறை, பிரதேசவாதங்களுக்கு எதிரான போராட்டம்.**

இதன் ஒரு வெளிப்பாடு தான் சுவிஸ் நாட்டில் இருந்து இயங்கும் இந்த வியாபார ஸ்தாபனத்தின் மேற்கூறிய வாசகம். முதலாளித்துவ சந்தைப்படுத்தலில் ஒரு வியாபார ஸ்தாபனம் கடும் போட்டியாளர்களைச் சந்திக்க நேரிடும் பட்சத்தில் அது தனது தந்திரத்தை மூன்று வகைகளில் வெளிப்படுத்தல் அவசியம்

1) உற்பத்தி செய்யப்படும் பொருளின் உற்பத்திச் செலவினைக் [illegible] சந்தைப்படுத்தும் பொருளின் விலையை குறைத்துக் கொள்வது. இதன் மூலம் போட்டியாளர்களிடம் இருந்து சந்தையின் பெரும் பங்கை கைப்பற்றிக் கொள்ளுதல் சுலபம்.

2) சந்தைப்படுத்தும் பொருளினை வித்தியாசப்படுத்திக் காட்டுவதன் மூலம் அந்தப் பொருளைப் போன்று பல இருந்தாலும் வித்தியாசம் கருதி அப்பொருளுக்கான சந்

**உக்கிரமான போர், தண்டனைக்கான பயம், சிரழிந்து போன வாழ்வியல், தமிழீழத்தில் மேற்கூறிய அடக்குமுறைகளை அமிழ்த்தி வைத்தனவே தவிர மாற்றி அமைக்கவில்லை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தை வாய்ப்பை அதிகரிப்பது அல்லது தக்கவைப்பது.

3) பாரிய அளவில் சந்தைப் படுத்துவதற்கான வளங்கள் பற்றாக்குறையாக இருக்கும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினை மையமாகக் கொண்டு தனது சந்தையை கைப் பற்றுவது. அதாவது பிரித்தானியாவில் இருக்கும் எல்லாத் தமிழ் மக்களிடமும் இருந்து சந்தை வாய்ப்பை பெறமுடியாத பட்சத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டும் வியாபாரம் செய்வது. அல்லது ஒரு பகுதியை (உதாரணத்திற்கு Tooting) மட்டும் தெரிந்து எடுத்து சந்தைப்படுத்துவது.

Ramy Records நிறுவனத்திற்கு மேற்கூறிய மூன்றில் முதல் இரண்டுமே பொருந்தும். பிரமிட், பாஸ்கி போன்ற நிறுவனங்கள் தமிழ்ச் சந்தையில் போட்டியிடுவதனால் ரமி நிறுவனம் விலையைக் குறைக்க முனையலாம். அல்லது தனது பொருளை வித்தியாசப்படுத்தலாம்.

மூன்றாவது தந்திரத்தைப் பயன்படுத்த வேண்டுமாயின் ஒரு நாட்டையோ அல்லது நாட்டில் ஒரு பகுதியையோ தெரிவுசெய்து தனது சந்தைப் படுத்தலை நிர்ணயிப்பது தான் வியாபார நிறுவனம் என்ற முறையில் பொருந்தும்.

இங்கு யாழ்ப்பாண மக்களுக்கு என்று குறியிடும் வாசகம் ஒரு வியாபார தந்திரத்தை குறிக்கோளாக கொண்டதாக தெரியவில்லை. இது மேற்கூறிய படி அமிழ்ந்திருக்கும் யாழ் மேலாதிக்க வக்கிர சிந்தனையின் ஒரு வெளிப்பாடே.

பிரதேச வாதம் மாறிவிட்டது என்று வாதிட்டுக் கொள்பவர்கள் வெளிநாடுகளில் குறிப்பாக இலண்டனில் நடைமுறையில் இருக்கும் விடயங்களை கருத்தில்கொள்ளல் அவசியம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இன்னொரு தமிழரைச் சந்திக்கும் போது நீங்கள் யாழ்ப்பாணத்தில் எவ்விடம்? என்ற கேள்வியே கேட்பார். இதே கேள்வியை வன்னியைச் சேர்ந்த ஒருவரோ தென் தமிழீழத்தைச் சேர்ந்த ஒருவரோ கேட்கும் போது நீங்கள் வவுனியாவில் எவ்விடம்?, மட்டக்களப்பில் எவ்விடம்? என்று கேட்பதில்லை. யாழ்ப்பாணத்தில் எவ்விடம் என்ற கேள்விக்கு கற்பிக்கும் விளக்கம் இன்னும் அபத்தமானது. யாழ்ப்பாணம் என்பது முழுத் தமிழீழம் தான் என்பதே அந்த விளக்கம். இது ஏன் மட்டக்களப்பு, வன்னி என்று மாறவில்லை. ஏன் மட்டக்களப்பு என்பது முழுத் தமிழீழமாக மாறக் கூடாது ?

> ஏன் மட்டக்களப்பு என்பது முழுத் தமிழீழமாக மாறக் கூடாது ?

இந்தக் கேள்வியின் பதில் தான் இந்த யாழ் மேலாதிக்க சிந்தனை இன்றும் அப்படியே தான் இருக்கின்றது எனபதையும் தமிழீழப் போராட்டம் நோக்கி ஒரு அங்குலம் கூட நகரவில்லை என்பதையும் குறித்து நிற்கும் காட்சி.

இரண்டாவது விடயம் *இங்கு விற்பனை ஆகும் பொருட்களில் இருந்து வியாபார நிலையங்கள் வரை, யாழ்ப்பாணத்தை முதன்மைப்படுத்துவதில் முண்டி அடித்துக் கொள்வது.* இந்தப் போக்கின் நிலையால் தான் ரமியின் விளம்பரமானது யாழ்ப்பாண மக்களுக்கு என்று கூறத்தலைப்பட்டது.

ரமி ஒரு வியாபார நிறுவனம். இதன் நோக்கம் இங்குள்ள தமிழ் மக்களுக்கு தனது பொருட்களை வியாபாரம் செய்வது. அப்படி செய்கின்ற போது யாழ்ப்பாணச் சிந்தனை அவசியமில்லாத விடயம். ரமியின் உரிமையாளரைத் தொடர்பு கொண்டு மேற்படி விளம்பரத்திற்கான விளக்கம் கோரப்பட்டபோது தமிழ் மக்களைக் குறிப்பதாகக் கூறினார்.

ரமியின் உரிமையாளர் வன்னி மக்களுக்கும், தென் தமிழீழ மக்களுக்கும் யாழ்ப்பாண மக்கள் என்று பெயர் சூட்டும் உரிமையை எப்படிப் பெற்றார். இவர் நினைப்பதைப் போல *மற்றைய இடத்து மக்கள் யாழ்மக்கள் என்று சொல்ல வேண்டிய தேவை என்ன இருக்கின்றது.* ஆங்கிலத்தில் பேசுவது பெருமை என்று எண்ணும் பிரித்தானிய காலனித்துவம் கற்றுக் கொடுத்த

> வருடக்கணக்காக வவுனியாவில் இருந்து அங்கே பிறந்து வளர்ந்த ஒருவர் தான் எந்த இடம் என்பதை ஒரு நண்பருக்கு கூறும் போது மூன்று சந்ததிக்கு அப்பால் சென்று யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் என்பதை கண்டு பிடித்து சொல்வதிலேயே பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையில் தான் பிரதேசவாதம் இன்னும் இருக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## பிரதேச வேறுபாடு

வரட்டுக் கௌரவம் போலவே யாழ்மக்கள் என்று சொல்வதில் மற்றவர்களுக்கு பெருமை வரும் என்று ரமி நினைத்தால் அந்த நிறுவனத்தின் பொருட்களை பகிஸ்கரிக்க வேண்டிய கட்டாயத்தையும் உணர்த்த வேண்டிய நிலை ஏற்படும்.

*தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்முரி விருதிலிருந்து கிரிக்கெட் சபை வரை, யாழ் என்று பெயர் சூட்டுவதில் பெருமை கொள்ளும் அமைப்புக்கள், மறைமுகமாக திணிக்க விரும்பும் விடயம் என்ன* என்பதை, வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டிய தேவையை இன்று ரமி ஏற்படுத்தி இருக்கின்றது. வருடக்கணக்காக வவுனியாவில் இருந்து அங்கே பிறந்து வளர்ந்த ஒருவர் தான் எந்த இடம் என்பதை ஒரு நண்பருக்கு கூறும் போது மூன்று சந்ததிக்கு அப்பால் சென்று யாழ்ப்பாணத்தில் சுழிபுரம் என்பதை கண்டுபிடித்து சொல்வதிலேயே பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையில் தான் பிரதேசவாதம் இன்னும் இருக்கின்றது.

**யாழ்ப்பாணத்திற்கும் தமிழீழத்திற்கும் இன்னும் வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாமல் போராட்ட இயக்கங்களே இருக்கும் போது சாதாரண மக்களிடம் மாற்றத்தை எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானது தான்.**

யாழ்ப்பாணத்திற்கும் தமிழீழத்திற்கும் இன்னும் வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளாமல் போராட்ட இயக்கங்களே இருக்கும் போது சாதாரண மக்களிடம் மாற்றத்தை எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமானது தான். இருப்பினும் இது போன்ற விடயங்கள் மக்களைச் சென்றடைவது இந்த காலகட்டத்தில் இன்றியமையாதது.□□□□□□□□□□□□

*புதியவன்*



17ஆம் நூற்றாண்டு ராஜ மகா விகாரைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.



இளவரசர் சார்ள்ஸ் இலங்கையி
இருந்து நேபாளிற்கு புறப்பட்டு ஆ
மணி நேரத்திற்கு பின் Slave Islar
எனும் கொழும்பின் புறநகர் பகுதியி
தற்கொலை தாக்குதல் நடத்தப்பட்ட
வெள்ளைநிற வானை ஆகாயப
அதிகாரிகள் வழமையா
சோதனைக்காக நிறுத்திய போது, brie
case உடன் பெண் ஒருவர் அதிகா
களை அணுகிய போது குண்
வெடித்தது: (தாக்குதல் இலக்கு இதுவ
இருக்க முடியாது. அப்ட
இருந்திருந்தால் வாகனத்துட
மோதியிருப்பார்கள்.) இக் குண
வெடிப்பில் மூன்று ஆண் இரண
பெண் விமானப் படையி
உயிரிழந்தனர். மேலு
தற்கொலையாளியுடன் பயணம் செய
மூவரும் உயிரிழந்தனர். 15 பேர் காய
டைந்தனர். சம்பவம் நடர
இடத்திலிருந்து ஓர் மைய
தூரத்திலேயே சார்ள்ஸ் தங்கியிருந்த
நேபாளில் இருந்து இலங்க
ஜனாதிபதிக்கும் இறந்தோர
குடும்பங்களிற்கும் இரங்க
தெரிவித்திருந்தார் இளவரசர் சார்ள

இலங்கையின்

# சுதந்திர தினம்

பெப்ரவரி 4 1948 புதன் கிழமை இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டது என்று தான் கூறவேண்டும். ஏனெனில் அன்று சுதந்திரத்தை கேட்டு யாரும் பெரிதாக போராடவில்லை. அதனால் சுதந்திரத்தை இலங்கை மக்களால் உணர முடியாமல் போனது. சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகள் ஆகியும் இலங்கை அரசியல் தலைவர்களால் ஓர் உறுதியான இலங்கையை உருவாக்க முடியவில்லை. 1948ல் இலங்கை ஆசியாவிலேயே பொருளாதார வளர்சி கூடிய நாடாக இருந்தது. ஆனால் இன்று Tiger Economy என்று சொல்லப்படுகின்ற ஆசிய நாடுகளின் பொருளாதார வளர்சியுடன் ஒப்பிட முடியாத அளவிற்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இந் நிலையில் பாரிய செலவில் ஏன் இந்த சுதந்திர தினம். 1958 இனக் கலவரம், 1971 சிங்கள இளைஞர்களின் கொந்தளிப்பு, 1977 இனக் கலவரம், 1980 களை தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுயுத்தம் இவற்றைவிட இலங்கை சாதித்தது தான் என்ன? இன்று ஓர் நாளிற்கு £1.5 மில்லியன் யுத்தத்திற்கு செலவிடப்படுகறது. நாட்டின் மொத்த செலவில் 20% பாதுகாப்பிற்கு செல்லும் போது நாடு எப்படி பொருளாதார வளர்சி நோக்கிச் செல்லும். ஆனால் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் போது உலக அரங்கின் கவனம் சார்ள்சின் விஜயத்தை தொடர்ந்து இலங்கை மீது திரும்பிய போது அதனை விடுதலைப் புலிகளிற்கு எதிராக திருப்பிவிட்டார்கள். சார்ள்ஸ் புனித ஸ்தலாமான தலாதா மாளிகை தாக்கப்பட்டதை வன்மையாக கண்டித்தார். வெளிநாட்டு பிரதிநிதிகளிற்கு புலிகளை பயங்கரவாதிகளாக காட்டி ஆதரவு தேடினார். இச் சுதந்திர தினம் இதற்காகவே.

www.tamilarangam.net

பொருளாதாரம்

# தொடரும் யுத்தம் தாங்குமா?

இ.வானதி




தெ.இலங்கை காலி ஆடைத் தொழிற்சாலையில் இளம் பெண் ஒருத்தி.

புலிகளால் தகர்க்கப்பட்ட பாலத்தை பார்வையிடும் இராணுவத்தினர்.

பொருளாதாரம் என்பது ஒரு சமுதாயக் கட்டமைப்பின் அத்திவாரம் போன்றது. அரசியல், சட்டம்-நீதி, இராணுவம், கலை-கலாச்சாரம், மதம் முதலான விடயங்கள் அந்த அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட்டுள்ள மேற்கட்டுமாணங்களாகும். பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் தாக்கங்கள் மேற்கட்டுமானத்தையும், மேற்கட்டுமாணத்தில் ஏற்படும் மாற்றங்கள் அடித்தளத்தையும் பாதிப்பன. இருந்த போதிலும் பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் பாதிப்பு மேற்கட்டுமான அம்சங்களை நேரடியாக பாதிக்கும் சக்தி கொண்டது. இந்த வகையில் இந்து சமுத்திரத்தின் மையத்திலுள்ள சிறிய தீவான இலங்கையின் பொருளாதாரம் அங்கு தொடரும் போரை தாக்குப் பிடிக்குமா?

இலங்கை பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்த போது அதன் ஏற்றுமதி வருமானத்திற்காக பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், கறுவா மற்றும் தெங்குப் பொருட்களிலேயே தங்கியிருந்தது. இவ்வாறு ஓரிரு விவசாயம் சார்ந்த ஏற்றுமதிகளில் தங்கியிருந்தமையால் உலக சந்தையில் இப்பொருட்களுக்கான விலை,கேள்வி மாற்றங்கள் ஏற்றுமதி வருமானத்தைப் பாதித்து இலங்கை பொருளாதாரத்தை பாதித்தன. 70 களில் ஏற்பட்ட பொருளாதார தேக்கநிலையைத் தொடர்ந்து வெளிநாட்டு இறக்குமதிகளை கட்டுப்படுத்தி தன்னிறைவுப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இறக்குமதிக் கட்டுப்பாடு என்னும் போது இயந்திர வகைகள், மூலப் பொருட்கள், விசேட பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், நவீன தொழில்நுட்பம் முதலிய பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான விடயங்களின் இறக்குமதிகளும் மட்டுப்படுத்தப்பட்டது. இதனால் ஏற்றுமதிகளை கைத்தொழில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றும் உற்பத்திகள் சார்ந்ததாக பன்முகப்படுத்தி விரிவுபடுத்த முடியாமல் போனதால் எதிர்பார்த்த பலனை அடைய முடியவில்லை. உள்நாட்டில் போதியளவு வேலை வாய்ப்புக்களும், வருமானங்களும் இல்லாத நிலையில் 70களின் நடுப்பகுதியில் வேலை தேடி வெளிநாடு செல்வோர் தொகை அதிகரித்தது.

வடக்கு - கிழக்கில் தமிழருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட போரினால் இராணுவச் செலவுகள் அதிகரித்தன. போதியளவு வெளிநாட்டு முதலீட்டாளர்களை அரசினால் கவர்ந்திழுக்க முடியாமல் போனதுடன் உல்லாசப் பிரயாணிகளின் வருகையும் வீழ்ச்சியடைந்தது. எனவே 80களில் இலங்கைப் பொருளாதாரத்திற்கு உள்ளார்ந்த ஊக்குவிப்பை அளித்து உள்நாட்டு கேள்வியை அதிகரித்து முதலீட்டை அதிகரிப்பதற்கு திட்டமிப்பட்டது.

Tiger economies.. என்று அழைக்கப்படும் பின்வரும் ஹொங்கொங், ஜப்பான், கொரியா, தாய்வான், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகள் 60களில் தம் நாடுகளில் துணிவகை, உடுபுடவைகள் ஏற்றுமதியை ஊக்குவித்தன. அந்த உதாரணத்தைப் பின்பற்றி இலங்கையிலும் உடுபுடவை, துணிவகை உற்பத்தி ஏற்றமதியை ஊக்குவித்து; இவ் வர்த்தகத்தினூடாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க முயற்சிக்கப்பட்டது.1977ல் பதவிக்கு வந்த ஐ.தே.க அரசின் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா இலங்கையை ஒரு சிங்கப்பூராக மாற்றுவதற்கு கனவு கண்டார். அதே

## யுத்தமும் பொருளாதாரமும்

உலக வங்கியின் தென் ஆசிய துணைத் தலைவர் Joseph Wood ,தலைநகர் கொழும்பில் நிகழும் குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் முதலீட்டாளர்களின் அடிப்படை எண்ணத்தை மாற்றி அமைக்காது, ஆனால் நாட்டினுடைய வளங்களை யுத்தத்திற்காக பயன்படுத்துவது நீண்ட காலத்தில் நாட்டின் பொருளாதார விருத்திக்கு பாதகமாக அமையும், என்று தெரிவித்திருந்தார்.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் பெருந்தோட்டப் பயிரான தேயிலை 80க்கள் வரை முதன்மை பாத்திரம் வகித்தது.80களின் ஆரம்பத்தில் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழ் ஈழ இராணுவம் (TEA) வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு கப்பலில் ஏற்றப்பட் தேயிலை கொள்கலனில் நஞ்சு கலக்கப்பட்டதாக பிரித்தானியாவிற்கு அறிவித்தது. உண்மையிலேயே நஞ்சு கலக்கப்பட்டதா? என்பதை அறிய இறக்குமதி செய்த நாடுகள் பெருமளவு பணத்தையும் நேரத்தையும் செலவிட்டன. இச் சம்பவமானது பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தாவிட்டாலும், இவ் அசௌகரியங்களை எந்த இறக்குமதியாளரும் விரும்பமாட்டார்கள்.

இலங்கைக்கு வருமானம் பெற்றுத்தந்த உல்லாசப் பயணத் துறையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் காலநிலை அறிவிப்புப் போல் காலத்திற்கு காலம் இலங்கைக்கு செல்வதை தவிர்க்கும் படி மேற்குநாட்டு அரசுகளும் அந்நாடுகளின் உல்லாச பயணநிறுவனங்களும் மக்களை எச்சரிக்க தவறுவதில்லை. 80 ன் தொடக்கத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) அலன் தம்பதிகளை கடத்தியது போன்ற சம்பவங்களும், இன கலவரங்களும் (குறிப்பாக 83), தலைநகர் மீதான குண்டுத் தாக்குதல்களும் உல்லாசப் பயணத்துறையை வெகுவாக பாதித்தது.

தலைநகர் மீதான தாக்குதல்கள் முதலீட்டாளர்களை பின்வாங்கவே செய்யும். இதனையே இப்போது விடுதலை புலிகள் விரும்புகிறார்கள்.


ஜனாதிபதி "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று தமிழ் மக்களை நோக்கி சூழுரைத்தார். ஒன்றுக்கு ஒன்று வேறுபட்ட இந்த இரண்டு முனைப்புக்களும் ஒரே தளத்தில் நிகழ முடியுமா?

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அதன் சராசரி வருடாந்த மொத்த மெய் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (Growth of Domestic Products), தலாவருமானம், மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் முதலான விடயங்களைக் கொண்டு அளவிட முடியும். இலங்கைத் தீவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் (GDP) 1978ல் 8.2 வீதமாக இருந்து 1992ல் உள்நாட்டு யுத்தம் காரணமாக 4.3 வீதமாக அதாவது அரைவாசியாக வீழ்ச்சியடைந்துள்ளது.

நீண்ட கால பொருளாதார உறுதிப்பாட்டையும், வளர்ச்சியையும் பேணுவதற்கு நாட்டின் தொழிற்துறைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் மீதான திட்மிட்ட அடிப்படையிலான முதலீடு அவசியமாகும். இந்த முதலீடானது ஏற்றுமதி வருமானத்திலிருந்தும்; வெளிநாட்டிலிருந்து வரும் முதலீடுகள், வெளிநாட்டிலுள்ள இலங்கையரிடமிருந்து வரும் வருமானங்கள், வெளிநாட்டுக் கடன்கள், உள்நாட்டுக் கடன்கள், உள்நாட்டு சேமிப்புக்கள், நேரடி மறைமுக வரிவிதிப்புகள், சுங்கத் தீர்வைகள் போன்ற அரசின் நிதி சார் நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் பெறப்படும். இவ்வாறு பெறப்பட்ட நிதியானது நாட்டின் தேவைகளுக்கு எவ்வாறு பங்கிடப்படுகின்றது என்

www.tamilarangam.net


பிரித்தானியா ஜேர்மனி கனடா போன்ற மேற்கு நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகள். அவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் குறைந்த வேகத்திலேயே இருக்கும். ஆனால் மலேசியா தாய்லாந் சிங்கப்பூர் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள். அதனால் அவற்றின் மொ.உ.உ வளர்ச்சி விகிதம் மிக வேகமாக உள்ளது. இந்தியா இலங்கை பாகிஸ்தான் போன்ற நாடுகள் இன்னமும் வளர்ச்சியடைய வேண்டி இருந்தும் அந் நாடுகளில் நிலவும் குழப்பகரமான அரசியல் நிலைமைகளினால் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் பின் தங்கி உள்ளன.




பதை பொறுத்தே பொருளாதார வளர்ச்சி தீர்மானிக்கப்படும்.

கடந்த 20 வருட காலமாக வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போர்ச் சூழலானது, இன்று தெற்கையும் ஆக்கிரமித்துள்ளது. தொழில் துறைகள் மீதும்; மருத்துவம், கல்வி, வீடமைப்பு மற்றும் நாட்டின் உள்ளக கட்டமைப்புக்கள் (Infra Structure) என்பவற்றின் மீதான முதலீடுகளுக்கும் பதிலாக, பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் யாவும் இராணுவச் செலவீனங்களை அதிகரித்து வருவதை காண முடிகின்றது.

1996ல் இலங்கையில் முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 24 வீதத்தை அடைய முடிந்தது. ஆனால் உள்நாட்டு சேமிப்பு 15.5 வீதமாக மட்டுமே இருந்தது. வெளிநாட்டு சேமிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.7 வீதமாகும்.



இனங்களின் சனத்தொகை விகிதம்

அதே வேளை கடந்த (UNP) அரசின் தாராளவாத பொருளாதாரக் கொள்கைகளாலோ உருவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்களாலோ அதன் பின் வந்த அரசாங்கத்தாலோ போதிய அளவு வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர முடியவில்லை. இதற்கு இலங்கையிலுள்ள உறுதிப்பாடற்ற அரசியல் இராணுவச் சூழல் ஒரு முக்கிய காரணம் என்பதை எவரும் மறுக்கமுடியாது. 1996ல் இலங்கையின் நேரடி வெளிநாட்டு முதலீடு மொத்த உள்நாட்டு முதலீட்டின் 1 வீதமாகவே இருந்தது.

தற்போது ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடிகள் இலங்கையின் ஏற்றுமதி வருமான அதிகரிப்புக்கோ, வெளிநாட்டு முதலீடுகளை கவருவதற்கோ சாதகமாக இல்லை. மேற்குறிப்பிட்ட நாடுகள்

www.tamilarangam.net



தமது பொருளாதார நெருக் கடிகளை சமாளிக்கும் முக மாக தமது நாணயப் பெறு மதிகளை குறைத்துள்ளன. தாய்லாந்து பாத் (Bath)ம், இந்தோனேசியன் ரூப்பியாவும் (Rupiah) 30 வீதத்துக்கும் அதிகமாக பெறுமதி குறைக் கப்பட்டுள்ளன. மலேசியன் ரின்ஜிற் (Ringgit) 15 வீதத் தால் குறைக்கப்பட்டுள்ளது. இந்தியா தனது ரூபா பெறும தியை 5 வீதம் மதிப்பிறக்கம் செய்துள்ளது. தற்போது ஜப் பானில் ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடியை தொட ர்ந்து தென்கொரிய பொருளா தாரமும் உடைந்துவிடும் நிலையில்; குறைந்தது $60 பில்லியனை சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) கேட்டி ருந்தது.

ஆசிய நாடுகள் துணிவகை ஆடை உற்பத்தி ஏற்றுமதி யில் குறிப்பிடத்தக்க அளவு வருமானத்தை ஈட்டுகின்றன. தற்போது அவற்றின் நாணயப் பெறுமதிகள் குறைக்கப்பட் டுள்ள நிலையில் உலக சந்தையில் அவற்றின் ஏற்று மதிப் பொருட்களின் விலை மிகவும் குறைந்ததுள்ளது. அதனால் இலங்கையின் ஏற்று மதிகளுடன் அந்! நாடுகள் போட்டியிடும். இதனால் இலங் கையின் வருமானம் மிகவும் பாதிக்கப்படும்.

14 வருட யுத்தச்சூழலில் புட வை தொழிற்சாலைகள் மட் டுமே கூடிய அந்நிய மூலத னத்தை உள்வாங்கி உள் ளது. 1979 இல் ஆரம்பமான புடவை உற்பத்தி ஏறக்கு றைய £90 மில்லியனையே அந்நிய முதலீடாக கொண் டுள்ளது. இதில் 25 வீதம் (ஏறக்குறைய £22.5 மில்லி யன்) பிரித்தானியாவிலிருந்து முதலிடப்படுகிறது. இப் புட வைத் தொழிற்சாலைகள் இலங்கைக்கு பெரிதாக பயன் அளிக்கவில்லை. ஏனெனில் மூலப் பொருட்களும் இயந்! திர சாதனங்களும் இறக்கு மதி செய்யப்படுகின்றது. உற்பத்தி மட்டும் இலங்கை யின் சுதந்திர வர்த்தக வலயங்களில் மேற்கொள்ளப் படுகின்றது. பின்னர் முடிவுப் பொருட்களாக ஏற்றுமதி செய் யப்படுகிறது. இதன் மூலம் இலங்கைக்கு வேலை வாய்ப் புகளை ஏற்படுத்திக் கொடுப் பதைவிட பெரிய வருவாயை நீண்ட காலத்திற்கு பெற முடியாது. இப் போது ஏனைய ஆசிய நாடுகளும் பண இறக்கம் செய்துள்ள நிலையில், 98 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் ஓர் நெருக்கடியை சந்திக்க உள்ளது.

[பிரித்தானிய சந்தையிலுள்ள பின்வரும் வர்த்தக ஸ்தாப னங்கள், இலங்கையில் உற் பத்தியாகும் புடவைகளை பிரித்தானியாவில் சந்தைப்ப டுத்துகின்றன. Adams (children's wear), Burtons, Bhs, C&A, Marks & Spensers, and Tesco.... மேலும் ஏனைய அந்நிய நிறுவனங்களும் களத்தில் உள்ளன. அவை Calvin Klein and Donna Karan designer outfits, Gap, Esprit, Nike sportswear, Victoria's Secret lingerie, Gloria Vanderblit, and Liz claiborne clothing for women....]

## FREE TRADE ZONE
## சுதந்திர வர்த்தக வலயம்

1977 பதவிக்கு வந்த ஜெ.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான (UNP)அரசாங்கம் தன்னிறைவுப் பொருளாதாரத்தில் இருந்து சந்தைப் பொருளாதாரத்திற்கு நகர்ந்தது. இச் சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவிக்குமளவிற்கு முதலீடு செய்ய அரசிடம் மூலதனம் இருக்கவில்லை. மேலும் வேலையற்றோர் பிரச்சனை. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, அந்நிய முதலீட்டை ஊக்குவிக்க முயற்ச்சி எடுக்கப்பட்டது. இதன் விளைவே இச் சுதந்திர வர்த்தக வலயம்.

இவ் வலயத்தில் வெளிநாட்டு உள்நாட்டு மூலதனங்கள் முதலிடப்பட்டுள்ளது. இங்கு முதலீடு செய்பவர்களுக்கு சாதகமாகவே அரசு செயற்படுகிறது. இவ் வலயத்தில் வேலை செய்வோர் பற்றி அரசு எந்த அக்கறையும் அற்றே உள்ளது. இங்கு தொழிற்சங்கங்கள் அமைப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருமானத்தை பாதிக்கும் எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அவர்கள் —பயங்கரவாத தடை சட்ட(ம்)த்தின்— கீழ் தண்டிக்கப்படுவார். தனது வாழ்க்கை துயரை கவிதையில் எழுதியதற்காக இவ் வலயத்தில் உள்ள ஜேர்மன் தொழிற்சாலையில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டார் அப் பெண். இங்கு வேலை செய்வோர் தம் உரிமைகளையும் தம்மையும் தற்காக்கும் சட்ட உரிமையை இழந்துள்ளனர்.

இச் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்வோர் எல்லோரும் அல்லது பெரும்பாலானோர் பெண்களாவர். இவர்கள் சிங்கள கிராமப்புறங்களில் இருந்து வேலைவாய்ப்புத் தேடி வந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் முன்பு நகரங்களிற்கு வந்திருக்கவில்லை. ஒரு நாளிற்கு 14 மணித்தியாலங்கள் வேலை செய்யும் இவர்கள் மாதம் £26 ல் இருந்து £35 வரையே சம்பளம் பெறுகின்றனர். இவர்களில் 40% உடல் நிறை குறைந்தவர்களாகவும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டும் உள்ளனர். இன்று நடைபெறும் யுத்தச் செலவுகளை தவிர்க்க முடியாமல் இவர்களும் சுமக்கிறார்கள். இவர்களை வென்றெடுக்கும் அரசியல் பலம் தமிழ் சமூகத்திடம் உண்டா?

www.tamilarangam.net



அத்துடன் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளிடமிருந்து முதலீடுகளையும் எதிர்பார்க்க முடியாது.

இலங்கையின் தலாவருமானம் 1995ல் US $709 ஆக உள்ளது. இந்த தலா வருமானம் US $750ஐ அடையுமானால் இலங்கை குறைந்த வருமானம் உள்ள நாடு என்ற நிலை மாறி நடுத்தர வருமானம் உள்ள நாடு என்ற வகையினுள் உலக வங்கியால் அடக்கப்படும். இதனால் இலங்கைக்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவிகளும் குறைக்கப்படும்.


உள்நாட்டு முதலீடுகளுக்கும் செலவுகளுக்கும்; போதிய வருமானமற்ற நிலையில் இலங்கை அரசாங்கம் தனது நிதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வெளிநாட்டு, உள்நாட்டுக் கடன்களிலேயே பெருமளவு தங்கியுள்ளது. 1995ல் இலங்கையின் வெளி நாட்டுக் கடனும் அதன் சேவைச் செலவீனங்களும் £5பில்லியன்களாகும். இதன் படி இலங்கையில் பிறக்கும் ஒவ்வோர் குழந்தையும் £277 மில்லியனிற்கு குறையாத வெளிநாட்டுக் கடனுடன் தான் பிரசவமாகிறது. (1994ல் மொத்தக் கடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 95.4 வீதம் ஆகும். இதில் வெளிநாட்டுக் கடனின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 52.1 வீதமாகும்.)

இந்நிலையில் அதிகரித்து வரும் இராணுவ தளபாட இறக்குமதிகள், வெளிநாட்டு இராணுவத் தொழில்நுட்பம், மற்றும் பயிற்சிகளைப் பெறுதல், முப்படைகளுக்கான செலவினங்கள் வேகமாக அதிகரித்துள்ளன. இலங்கை வெளிநாட்டு முதலீடுகளை கவரத் தவறியுள்ள அதே வேளை குறிப்பாக 1989ன் பின் பாதுகாப்புச் செலவீனம் மிக வேகமாக அதிகரித்து சென்றிருக்கிறது. 1994 ல் இலங்கையின் இராணுவச் செலவு மொத்தத் தேசிய உற்பத்தியில் (GNP) 4.5%. அதேவேளை சர்வதேசரீதியாக இராணுவத்தின் மீது செலவிடப்படும் அளவு சராசரி 3%. இலங்கையின் பாதுகாப்புச் செலவீனம் சர்வதேச சராசரி பாதுகாப்புச் செலவீனத்தை விட அதிகரித்துள்ளதை காணலாம். இதன் படி 1994 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்டது. மொத்த செலவில் 12.3% ஆகும். விவசாயத் திட்டங்களிற்கு ஒதுக்கப்பட்டது மொத்த செலவீனத்தில் 5.2%.

இவ் வரவு செலவு திட்ட அறிவிப்பிற்கு சில மாதங்கள் முன்னதாக 1994 ஏப்ரலில் இலங்கையின் நெற் களஞ்சியமான பொலநறுவை மாவட்டத்தில் 14 சிங்கள விவசாயிகள் தாம் பெற்ற வங்கிக் கடனை அடைக்க முடியாமையினாலும் தம் குடும்பத்திற்கு உணவூட்ட முடியாமையினாலும் அரசின் உதவி கிடைக்காத நிலையில் தற்கொலை செய்து கொண்டனர். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 60,000 குடும்பங்களுள் இவர்களும் அடங்குவர்.

இன்று இலங்கையின் செலவீனங்களை எடுத்துக் கொண்டால், இராணுவச் செலவீனங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மொத்த சனத்தொகையில் 48.3 % தொழிலாளர் வலுவை (Lab--our Force) உடைய நாட்டில் 12% இனர் வேலையற்றுள்ளனர். (1995ல் மத்திய வங்கிக் கணிப்பு.) மேலும் ஆண்டிற்கு 18,300 பேர்வரை வன்முறைக்கும் நஞ்சிற்கும் பலியாகின்றனர் (1994). இஃதானது நாடு எவ்வளவு தூரம் அமைதி இன்மையுடன் உள்

பாதுகாப்புச் செலவீமும் வெளிநாட்டுக் கடனும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளது என்பதைக் காட்டு கிறது.

மூன்றாம் உலக நாடான இலங்கை கல்வியறிவு, தலா வருமானம் ஆகிய வற்றில் SAARC நாடுகளுடன் ஒப்பிடும் போது முன் நின்றாலும்; தூரகிழக்கு ஆசிய நாடுகளுடனும் மேற்கு நாடுகளுடனும் ஒப்பிடுகையில் நாடு முன்னேறுவதற்கு இன்னமும் இடம் உண்டு.

தற்போது இலங்கை அரச இயந்திரத்தையும், தொடரும் யுத்தத்தையும் நிர்வகிப்பவர்களாக இருப்பது உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் தான். விவசாயிகள் தகவல் மையம், சாமுனி சமரக் கோன் பொலநறுவை விவசாயிகளின் தற்கொலை மரணம் குறித்து கருத்து வெளியிடுகையில், 1989ல் உலக வங்கியின் விவசாயப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமய, விவசாயிகளுக் வழங்கப்பட்ட மானியங்கள் நிறுத்தப்பட்டது. மேலும் வளமாக்கிகள் (உரங்கள்) மீது இருந்த விலைக் கட்டுப்பாடு நீக்கப் பட்டது. விவசாய சந்தை தனியார் மயமாக்கப்பட்டதால் விவசாயிகளின் உற்பத்திச் செலவு அதிகரித்தது. அதனால் சிறிய விவசாயிகளால் பெரும் ஏற்றுமதியாளர்களுடன் போட்டியிட முடியவில்லை, என தெரிவித்தார்.

மேலும் இலங்கை அரசின் யுத்தச் செலவீனங்களை ஈடு செய்வதன் மூலம் தன்னால் கடன்களை திருப்பிச் செலுத்த முடியும் என்பதை உலக வங்கிக்கு காட்ட வேண்டிய தேவை இலங்கை அரசிற்கு இருந்தது. அப்படிச் செய்தால் தான் மேலும் கடன்களை பெறமுடியும். அதனால் யுத்த செலவீனங்களை ஈடுசெய்ய உள்நாட்டு வரிகளை அடிக்கடி அதிகரித்தது இதனால் அடிக்கடி விலை அதிகரிப்பு ஏற்பட்டது. கடந்த 10 ஆண்டுகளில் 7% - 14% வரை விலை மாற்றம் செய்துள்ளது. இதே காலப்பகுதியில் மலேசியா 5% மே விலை மாற்றம் செய்தது.

அத்தோடு கொடுத்த கடனை திருப்பிப் பெற வேண்டி உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசிற்கு சில அறிவுறுத்தல்களை செய்தன. அவை நலன்புரிச் சேவைகளை குறைத்துக் கொள்ளல், அரச உதவித் திட்டங்களை குறத்துக் கொள்ளல், மானியங்களை கட்டுப்படுத்துவது, நாணயப் பெறுமதி இறக்கம் செய்வது..........என வளர்ந்தது.

தம் பதவிகளை தக்கவைப்பதற்காக வெல்ல முடியாது என தெரிந்தும் இவ் யுத்தத்தை இலங்கையில் பதவிக்கு வரும் அரசுகள் நடத்துகின்றன. 97ஆம் ஆண்டு யுத்தத்தின் விலை £1.35 பில்லியன். இவ் யுத்தச் சுமையை தம் விருப்பத்திற்கு மாறாகவே பெரும்பாலான எல்லா இன மக்களும் சுமக்கின்றனர். அன்றாட வாழ்க்கைச் சுமையை சுமக்க முடியாத மக்களிடம் இந்த யுத்தச் சுமை திணிக்கப்பட்டுள்ளது. இதனை தமிழீழ விடுதலை அமைப்புகள் உணர்வுபூர்வமாக புரிந்து கொள்ளவில்லை. என்று தமிழீழ விடுதலை போராட்டம் , இலங்கை அரசு நடத்துவது ஓர் தேவையற்ற யுத்தம் என்பதை சிங்கள மக்களிற்கு உணர்வுபூர்வமாக அறிய வைக்கின்றதோ, அன்று தான் இலங்கைத் தீவில் சமாதானம் தோன்றி எல்லா இனங்களும் சுபீட்சமான எதிர் காலத்தை நோக்கி பயணிக்க முடியும். இல்லையேல் உலக நாடுகள் முன் நோக்கி செல்ல இலங்கை தீவு பின்னோக்கிச் செல்லும்.□□□



90ஆம் ஆண்டிற்கு பின் புலிகளின் தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்தை குறிவைத்தே நடத்தப்பட்டு வருகின்றது. மத்திய வங்கி குண்டு வெடிப்பு கொலன்னாவை எண்ணை குதம் மீதான தாக்குதல்கள் துறைமுகத்தின் மீதான தாக்குதல்கள் சர்வதேச வர்த்தக நிலையத்தின் மீதான குண்டுத் தாக்குதல் போன்றன இதனையே காட்டுகின்றது. சர்வதேச வர்த்தக நிலையத் தாக்குதலால் அரசிற்கு ஏற்பட்ட நட்டம் £3.5 மில்லியன் ஆகும். மத்திய வங்கி தாக்குதலை அடுத்து உல்லாசப் பயணிகள் வருகை 25வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

மேலும் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை 125,300 இதில் இராணுவத்தினர் 83.8%(105,000), கடற்படையினர் 8.2%(10,300), விமானப் படையினர் 8%(10,000)ஆவர். இலங்கை 1994 £128,000 ற்கு இராணுவ உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது. 95ல் கொள்வனவு £2.5 மில்லியன் ஆகும். 98ல் இத்தொகை சில மடங்குகள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

www.tamilarangam.net



# சர்வதேச அரங்கில் ஈழ விடுதலை

## எங்கு போகிறோம்?

க.வாணிரீ



உலகின் சிறிய மிகச் சிறந்த உல்லாசத் தீவுகளில் அழகிய இலங்கைத் தீவும் வெளிநாட்டினரால் விடுமுறை ஸ்தலமாக கணிக்கப்படுகின்றது. இலங்கையில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறைகளில் ஒன்றாக உல்லாசப்பயணத்துறையும் உள்ளது. மேலும் 1977களில் இருந்தே திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கியது. இதன் மூலம் சர்வதேச சந்தைக்குள் இலங்கையும் நுழைந்தது. இதன் விளைவாக சர்வதேச மூலதனம் இலங்கைக்குள் பாய்ந்தது. அத்தோடு உலகின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றான திருமலை இயற்கைத் துறைமுகமும் இந்து சமுத்திரத்தில் இலங்கையின் புவியியல் மையமும் இலங்கையை சர்வதேச முக்கியத்துவம் பெற்ற தீவாக கணிக்க காரணமானது.

உல்லாசப் பயணத்துறை, திறந்த பொருளாதாரக் கொள்கை, புவியியல் மையம் ஆகியவை நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியோடு இணைந்து உலகமயமாதலிற்குள் (Globalization) இலங்கையையும் சேர்த்துள்ளது. இதானது இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் ஏற்படும் மாற்றம் சர்வதேச அரங்கிலும் பிரதிபலிக்க காரணமானது. இதே போன்று சர்வதேச அரங்கில் ஏற்படும் மாற்றம் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களிலும் பிரதிபலிக்கும். 21ம் நூற்றாண்டை நோக்கிப் பயணிக்கும் போது உலகமயமாதல் என்பது தவிர்க்க முடியாததொன்று. இதற்கமைய செயற்படாத அரசுகளோ, சமூகமோ தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படும் என்பது பொது விதி.

## இனமுரண்பாடு

### தோற்றமும் வளர்ச்சியும்:

60,000 உயிர்களையும் பல மில்லியன் ரூபாய் சொத்துக்களையும் இழந்த நிலையிலும் கடந்த 15 வருடங்களாக இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தொடர்கின்றது. இலங்கையின் இன முரண்பாடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஆயினும் முன்பு உள்நாட்டு யுத்தம் என்று குறிப்பிடும் அளவிற்கு இன, மத முரண்பாடுகள் இருக்கவில்லை.

1540ல் அந்நியர் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் இனங்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தின. குறிப்பாக 1833ல் ஏற்பட்ட பௌத்த - கிறிஸ்தவ கலவரம், 1915ல் ஏற்பட்ட பௌத்த - இஸ்லாமிய கலவரம், 1930ல் ஏற்பட்ட மலையாளிகள் எதிர்ப்புப் போராட்டம் ஆகியவை இலங்கை சுதந்திரம் அடைய முன்பு ஏற்பட்ட முரண்பாடுகள் ஆகும்.

1948ல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும் வரை எந்த ஓர் பெரும்பான்மை அரசியல்வாதியும் தமிழ் சிறுபான்மையுடன் முரண்பட்டிருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவில்லை. மாறாக இவ்விரு இனங்களிடையேயும் நல்லுற வே நிலவியது.

1919ல் தீவிர சுய இராஜ்யக் கொள்கையுடன் ஆரம்பித்தது இலங்கை தேசியக் காங்கிரஸ். இதனை 1921ல் பிரித்தாளும் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் முடமாக்கினர் ஆள்பதி மன்னிங். அவரது சீர்திருத்தம் சிறுபான்மைத் தமிழர்களிடம் விசனத்தை ஏற்படுத்தியது. மன்னிங் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து டொனமூர், சோல்பரி ஆகிய ஆள்பதிகளும் அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டனர். ஆயினும் அன்று தமிழ் சிறுபான்மையினரை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்கள் சேர்.பொன்.அருணாசலம், கன்ரி பேரின்பநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோரின்

## தேர் இழுத்த தலைவர்கள்

*1915ம் ஆண்டு கலவரத்தின் போது பெரும்பான்மை சிங்கள மக்களை ஒடுக்கி அவர்களுக்கு மரண தண்டனையையும் விதித்தது பிரித்தானிய அரசாங்கம். அப்போது முதலாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலகட்டம். அதனையும் பொருட்படுத்தாது சேர்.பொன்.அருணாசலம் பிரித்தானியாவிற்குச் சென்று சிங்கள மக்களிற்கு நியாயம் கிடைக்க வழி செய்தார். இதுவே அவரை இலங்கை தேசியக் காங்கிரஸ் தலைவராக வழிவகுத்தது. மேலும் சேர்.பொன்.அருணாசலம் இலங்கை திரும்பி வந்த போது அவரை தேரில் (ரதத்தில்) இருத்தி தாமே அதனை இழுத்துச் சென்றார்கள்.*

**சட்ட நிருபணசபையே காலனித்துவ இலங்கையின் இனங்களை பிரதிநிதித்துவம் செய்த சட்டவலகாகும்.**

| ஆண்டு | இனங்கள் | பிரதிநிதித்துவம் |
|---|---|---|
| 1833 | தமிழர்:சிங்களவர் | 1:1 |
| 1889 | தமிழர் : கரையோரச்சிங்களவர் : கண்டிச்சிங்களவர்<br>(தமிழர்:சிங்களவர் 1:2) | 1:1:1 |
| 1912 | தமிழர் : கரையோரச்சிங்களவர் : கண்டிச்சிங்களவர்<br>(தமிழர்:சிங்களவர் 2:3) | 2:2:1 |
| 1921 | தமிழர்:சிங்களவர் | 3:13 |

அரசியல் இராஜதந்திரம் இன்மை தமிழ் சமூகத்திற்கு உரிமைகளை வென்றெடுக்க தவறியது. மாறாக அவர்களுக்கு சலுகைகளேயே பெற்றுத்தர முயன்றனர். இப்பகுதி நேர அரசியல் வாதிகளால் தமிழ் சமூகம் ஒவ்வோர் அரசியல் சீர்திருத்தத்தின் போதும் தன் உரிமைகளை இழந்தது. இதனை மறைக்க பிரித்தானியர் இடை நிலைத் தளங்களில் வேலைவாய்ப்பு போன்ற சலுகைகளை தமிழ் சமூகத்திற்கு வழங்கினர்.

அரசியல் சீர்திருத்தங்களினூடாக மெதுவாக தமிழ் சமூகத்தை மூடமாக்கிய பெரும்பான்மை சிங்கள தலைவர்கள், 1948ல் வழங்கப்பட்ட சுதந்திரத்தைத் தொடர்ந்து இனவாதிகளாக மாறத் தொடங்கினர். ஏ.ஈ.குணசிங்க போன்ற தொழிற்சங்க வாதிகளும் கொல்வின் ஆர்.டி.சில்வா போன்ற இடது சாரிகளும் கூட இனவாதத்தை கக்கினர். கட்சிக்கு வாக்கு சேர்க்கும் போட்டியில் இவர்கள் உயிரூட்டிய இனவாதம் ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட பௌத்தமத அடிப்படை வாதத்துடன் கை கோர்த்து சிறுபான்மை தமிழ் சமூகத்திற்கும் ஏனைய சிறுபான்மை இனங்களுக்கும் தீ மூட்டியது. முறையே 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் அரச பாதுகாப்பு நிறுவனங்களின் பூரண ஒத்துழைப்புடன் சிங்கள காடையர் குழுக்களினால் தமிழ் இன அழிப்பு பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது.

1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம், 1972, 1978 ஆம் ஆண்டு யாப்புச் சீர்திருத்தங்கள் பௌத்த மதத்தையும் சிங்கள மொழியையும் முதன்மைப்படுத்தி ஏனைய சிறுபான்மையினரின் மதங்களையும் மொழிகளையும் இரண்டாம்பட்ச நிலைக்கு தள்ளியது. மேலும் 1972ம் ஆண்டு யாப்புச் சீர்திருத்தம் மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி அவர்களது அடிப்படை மனித உரிமைகளையும் பறித்தது.மேலும் இனவாத தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி உரிமையை மறுத்தது.

www.tamilarangam.net



# தாயகத்திற்கு வெளியே ஈழப்போராட்டம் ஏற்படுத்திய தாக்கங்கள்

## 1900 - 1950 வரை:

மன்னிங்கின் பிரித்தாளும் யாப்பு சீர்திருத்தத்தைத் ( 1921) தொடர்ந்து இன உணர்வுகள் தலைதூக்க ஆரம்பித்தது. இதனை பிரித்தானிய அரசே வளர வகை செய்தாலும், சாதாரண மக்கள் பெருமளவில் அரசியலில் ஈடுபடாததால் இம் முரண்பாடுகள் பெருமளவில் முக்கியத்துவம் பெறவில்லை. மேலும் தொழிற்சங்கங்களும் இடதுசாரி அமைப்புக்களும் இன ஐக்கியத்திற்காக உழைத்தனர். தகவல் தொடர்புகள் பெருமளவில் வளர்ந்திருக்கவில்லை. அப்படி இருந்த தகவல் தொடர்பு சாதனங்களும் முடி ஆட்சியின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அதனால் இன முரண்பாடு இலங்கைத் தீவை தாண்டிச் செல்லவில்லை. தீவுக்குள்ளும் பெரும்பாலும் அரசியல் தலைவர்கள், புத்தி ஜீவிகள் மட்டத்திலேயே இம் முரண்பாடு உணரப்பட்டது.

## 1950 - 1970 வரை:

இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து பெரும்பான்மை இன அரசியல்வாதிளின் இனவாத பிரச்சாரங்களினால் சிங்கள மக்களுக்கு இனவாதம் ஊட்டப்பட்டது. பதவி போட்டிக்கு கட்சி வேறுபாடு இல்லாமல் இனவாதத்தை ஊட்டி வாக்கு வேட்டையாடினர். இவ் இனவாதத் தீயின் கொடுமை 1958ல் தமிழ் சிறுபான்மையினரால் உணரப்பட்டது. இவ்வின முரண்பாடு மெல்ல மெல்ல இனப் பகையாக உருவெடுத்தது. இன ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ச்சிகள், போராட்டங்கள் வெடித்தது. பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் குரல் எழுப்பினர். இருந்தும் தமிழ் தலைவர்களிடையே இருந்த ஒற்றுமையின்மை, தூரநோக்கற்ற தன்மை ஆகியவற்றால் போராட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை. இவர்களுடைய பாராளுமன்ற போராட்டங்கள் பாராளுமன்ற பதிவேடுகளிற்கு உள்ளேயே பெரும்பாலும் முடங்கியது.

> தமிழ் தலைவர்களிடம் வாதத்திறன் இருந்த அளவிற்கு செயற்திறனும் தீர்க்க தரிசனமும் இருக்கவில்லை. இதன் விளைவுகளைத் தான் தமிழ் சமூகம் இன்று அறுவடை செய்கின்றது. நாளைய தலைமுறையும் இதனையே அறுவடை செய்யப் போகின்றதா?

இப்படியாக சிங்களத் தலைவர்கள் இனவாதத்தை நிறுவனமயப்படுத்தினர். தனியாட்சி கோருவது தடைசெய்யப்பட்டு தமிழ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களது உறுப்புரிமையும் பறிக்கப்பட்டது.

இவற்றின் விளைவாக தமிழ் சமூகம் இன விழிப்புணர்ச்சியடைந்தது. கட்சி அரசியல் பயனளிக்காது போனது. மாணவர் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் ஆயுத வடிவம் எடுத்தது. இதன் காரணமாக சுற்றுலாத் தீவு மிகவும் அபாயகரமான இடங்களில் ஒன்றாக உல்லாச பயணமுகவர்களால் சிவப்பு மை இட்டுக் காட்டப்படுகின்றது.

இக்கால இடைவெளியிலேயே தென் ஆபிரிக்க வெள்ளையின சிறுபான்மை அரசை பொதுநலவாய நாடுகளின்கூட்டமைப்பில் இருந்து, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தன் போராட்டத்தினால் விலத்தி வைத்தது. அப்படி ஓர் அரசியல் போராட்டத்தை நடத்தி தமக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெறும் தகமை தமிழ் அரசியல் தலைவர்களிடம் இருக்கவில்லை. இன்று தெ.ஆபிரிக்க கறுப்பின மக்கள் தமது முழு உரிமைகளையும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் அரசியல் போராட்டத்தினால் வென்றெடுத்துக் கொண்டதற்கு காரணம் அவர்களுடைய போராட்டம் சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டதே ஆகும். வெள்ளையரின் சிறுபான்மை அரசை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தி அவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளையும் விதிக்க போராடி, அதில் வெற்றியும் கண்டது. ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் மட்டுமல்லாமல் சர்வதேச நிகழ்ச்சிகளில் இருந்தெல்லாம் வெள்ளை இனவாத அரசு தனிமைப்படுத்தப்பட்டது. சர்வதேச நெருக்குதல்களால் பின்னர் கறுப்பினத்தவர்களுக்கு சம உரிமை அளித்தது. இன்று அவர்களிடமே ஆட்சியுரிமையும் சென்று உள்ளது.

தமிழ் தலைவர்களிடம் வாதத்திறன் இருந்த அளவிற்கு செயற்திறனும் தீர்க்க தரிச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



னமும் இருக்கவில்லை. இதன் விளைவுகளைத் தான் தமிழ் சமூகம் இன்று அறுவடை செய்கின்றது. நாளைய தலைமுறையும் இதனையே அறுவடை செய்யப் போகின்றதா?

## 1970 - 1980 வரை :

இத் தசாப்தத்திலேயே இலங்கை இனப்பிரச்சனை ஆனது சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்தே இனப்பகை கூர்மையாகி பிரிவினை கோரிக்கை துளிர்விட ஆரம்பித்தது. இதுவரை தீவுக்குள்ளேயே முடக்கி வைக்கப்பட்டிருந்த இனப்பிரச்சனை தீவுக்கு வெளியே கசியத் தொடங்கியது. உலக தமிழ் ஆராயச்சி மகாநாட்டில் இடம் பெற்ற படுகொலைகள் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் சமூகத்திற்கு இன விழிப்புணர்வை ஊட்டியது. சிறுபான்மையினரிடம் நம்பிக்கை இன்மையும் துளிர்விட ஆரம்பித்தது. குறிப்பாக இனவாத தரப்படுத்தலும் தமிழ் மொழியும் பௌத்தமில்லாத ஏனைய மதங்களும் இரண்டாம் தரத்தில் வைக்கப்பட்டது. அத்துடன் 1977ல் இடம் பெற்ற இனக்கலவரமும் இதற்கு காரணமாகும். இதன் காரணமாக தமிழ்ச் சிறுபான்மை மாணவர்கள் குறிப்பாக நியூசிலாந்து, அவுஸ்திரேலியா , அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய ஆங்கில மொழி பேசுகின்ற நாடுகளிற்கு புலம் பெயர்ந்தனர். இவர்களது புலம்பெயர்வு மிகவும் குறைந்த வீதமாகவே இருந்ததால் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதைவிடவும் பலர் வேலை வாய்ப்பு வேண்டியும் உலகின் பல பாகங்களிற்குச் சென்றனர். இவர்கள் சென்ற நோக்கம் எதுவாக இருந்தாலும் தமது கலாச்சார அடையாளத்தையும் தாயக உணர்வுகளையும் தம்மில் கொண்டிருந்ததால் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவற்றை வெளிக்காட்டினர். இவற்றின். மூலம் இன ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வுகள் சர்வதேச ரீதியில் வளர ஆரம்பித்தது. ஆனால் இவ்வுணர்வுகளை செழுமைப்படுத்தி ஒருமுகப்படுத்தக்கூடிய அரசியல் சக்தி யாரிடமும் இருக்கவில்லை. அதனால் எழுந்தமானமான உணர்வுகளாகவே இவை அமைந்தது. இந்த சகாப்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஆயுதக் குழுக்களின் ஆயுதப் போராட்டமும் தமிழ் கட்சிகளின் அரசியல் போராட்டங்களும் சமாந்தர நிலையில் சென்று கொண்டிருந்தது.

## 1980 - 1990 வரை :

தீவின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை விளங்கிக் கொள்ள இத் தசாப்தத்தை சீராக ஆய்வு செய்யதல் அவசியமாகும். இலங்கை சுதந்திரத்தின் பின் முதன் முதலாக சர்வதேச அரங்கில் அறிமுகமானது இத்தசாப்தத்திலேயே.

## கூட்டணியின் பங்கு :

அரசியல் போராட்டம் மூலம் எந்த உரிமைகளையும் வென்றெடுக்காவிட்டாலும் வெளி உலகிற்கு இலங்கையின் இன ஒடுக்குமுறையை பிரச்சாரம் செய்வதில் தமிழர் விடுதலை கூட்டணி முன்னின்றது. தமது பேச்சுத்திறனாலும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்ததாலும் எண்பதுகளின் தொடக்கத்தில் தாம் பயணித்த நாடுகளில் எல்லாம் இலங்கை அரசின் இனவாத செயல்களை கண்டித்து பிரச்சாரம் செய்தனர். இக் காலங்களில் தமிழ்ப் போராளிகளிடம் பேச்சுத்திறன், ஆங்கில மொழிப் புலமை மிகவும் குறைவாகவே இருந்தது. இதனால் இவர்களால் தமிழ் அரசியல் தலைவர்கள் அளவிற்கு பிரச்சாரம் செய்ய இயலவில்லை. மேலும் தமிழ் அரசியல் தலைவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக (போராளிக் குழுக்கள் அப்படியல்ல) இருந்தபடியால் அவர்களுடைய கருத்துக்களுக்கு சர்வதேச அரசுகளும் மதிப்புக் கொடுத்தன. குறிப்பாக இந்திய தமிழர்களையும், இந்திய அரசையும் சர்வதேச சமூகத்தையும் தம் பிரச்சாரத்தால் அ.அமிர்தலிங்கம் (முன்னாள் கூட்டணித் தலைவர்) கவர்ந்திருந்தார். தமிழ்க் கட்சித் தலைவர்களுடைய இந்த பிரச்சார பலம் சர்வதேச அனுதாபத்தை தமிழ் சிறுபான்மையின் மீது ஏற்படுத்தியது. ஆனால் இவ் அனுதாபத்தை ஓர்முகப்படுத்தி இலங்கை அரசை வெற்றி கொள்ளும் அரசியல் சாணக்கியம் இவர்களிடம் இருக்கவில்லை. தம் சுயநல நோக்கங்களிற்காக இவர்கள் சந்தர்ப்பவாதிகளாக மாறி, தாம் பெறும் சலுகைகளிற்காக தமிழ் மக்களின் உரிமைகளை விட்டுக் கொடுத்தனர். இதனால் பாராளுமன்ற அரசியலில் மக்கள் நம்பிக்கையிழந்து போராளிகள் மீது நம்பிக்கை கொண்டனர்.

குறிப்பு :

வாசகர்களின் ஆக்கங்களை அவை தரமானதாக இருந்தால் நிச்சயம் பிரசுரிப்போம். அப்படிப் பிரசுரிக்காவிடின் அதனை அறியத் தருவோம். மேலும் வாசகர்கள் ஆகிய உங்களிடம் இருந்து தேசம் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத் தசாப்தத்திலேயே ஈழ விடுதலைப் போராட்டமானது முற்றுமுழுதாக ஆயுதவடிவம் பெற்றது. இத் தசாப்தத் தின் தொடக்கத்தில் கிளர்ச்சிகள், பேரணிகள் இலங்கை அரசிற்கு எதிராக போராளிக் குழுக்களால் மேற்கொள்ளப் பட்டது. ஆனால் அவை கொழும்பை பாதிக்கவில்லை. அதனால் சர்வதேச சமூகத்திற்கும் கேட்கவில்லை.

1983ல் நடந்த கலவரம் சர்வதேசம் எங்கும் எதிரொலித்தது. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் புகை மண்டலம் காரணமாக தரையிறங்க இயலாமல் சென்னைக்கு விமானங்கள் திசைதிருப்பி அனுப்பப்பட்டன. சர்வதேச தகவல் தொடர்பு சாதனங்களின் பார்வை சின்னஞ்சிறிய இலங்கைத் தீவின் மீது விழுந்தது. சர்வதேச பத்திரிகைகள் யாவும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தன. உலக அரசுகள் இலங்கை அரசின் நடவடிக்கையை கண்டனம் செய்தன. இலங்கை அரசு பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்புடன் மேற்கொண்ட இவ் இன ஒழிப்பு நடவடிக்கை தமிழ் மக்களுடைய போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவை தேடிக்கொடுத்தது. 1983ம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து போராளிக் குழுக்கள் வீக்கமடைந்தன.

இத்தசாப்தத்தின் நடுப்பகுதி வரை ஈழப்போராட்டத்தை சர்வதேசரீதியில் நியாயப்படுத்தியவர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளும் இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகளுமே. இவர்களின் இனவாத கருத்துக்களும் இராணுவத்தின் இன ஒடுக்கு முறைகளுமே இதற்கு காரணம் ஆகும்.

## போராளிக் குழுக்களின் நிலை :

தமிழ் அரசியல் தலைவர்களின் பாராளுமன்ற ஆசனங்கள் பறிக்கப்பட்ட பின் அவர்கள் செயலற்றுப் போயினர். தமிழ் போராளிக் குழுக்கள் தமக்கிடையில் உறுப்பினர் திரட்டலில் போட்டியிடுவதிலும், தமக்கிடையேயான குழுவாதத்திலும் காட்டிய அக்கறையை போராட்டத்தை சர்வதேச சமூகத்திற்கு விளக்குவதில் காட்டவில்லை. ஆனால் ஈரோஸ் அமைப்பு இலண்டனில் இருந்த மாணவர்களினால் உருவாக்கப்பட்டதால் அதனிடம் போராட்டத்தை சர்வதேசரீதியில் எடுத்துச் செல்லும் வல்லமை இருந்தது.


## இயக்க - அரச சார்பற்ற அமைப்புகள் :

தமிழர் தகவல் நடுவம் TIC Tamil Information Centre என்ற சுதந்திர செய்திமையம் பக்கசார்பற்ற முறையில் தமிழ் மக்களின் போராட்டத்தை வெளி உலகிற்கு அறிவித்துக் கொண்டிருந்தது. மேற்கு நாட்டு செய்தித் தாபனங்களும் தமிழர் தகவல் நடுவத்தின் செய்திகளை நம்பகத்தன்மை வாய்ந்தன என்ற அடிப்படையில் பிரசுரித்தன. ஆனால் இப்பொழுது குழுவாத அரசியல் காரணமாக தமிழர் தகவல் நடுவத்தின் மீதான நம்பகத் தன்மை இழக்கப்பட்டுள்ளது. அதனால் மேற்கு நாட்டு செய்தித் தாபனங்கள் இலங்கை அரச செய்திகளையே மேற்கோள் காட்டுகின்றன.

அத்தோடு 80களின் பிற்பகுதியில் UTHR(Jaffna)- University Teachers for Human Rights என்ற பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைச் சர்வதேசரீதியில் பிரச்சாரம் செய்கின்றது. இவர்களுடைய அறிக்கைகள் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களால் மேற்கோள் காட்டப்படுவது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று HRTF Human Rights Task Force என்ற அமைப்பும் தீவில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களிற்கு எதிராக குரல் கொடுக்கின்றது. இப்படியான சுதந்திரமான ஸ்தாபனங்களின் தேவை இன்று வெகுவாக உணரப்பட்டுள்ளது.

## அரச (அல்லது இயக்க) சார்பற்ற சர்வதேச அமைப்புகள் :

The British Refugee Council, US Committe for Refugees, Asia Watch, Organisation for Aid to Refugees (Swiss), United Nations High Commission for Refugees, International Committee for Red Cross, Amnesty International............ ஆகிய அரச சார்பற்ற பல சர்வதேச




www.tamilarangam.net



ஸ்தாபனங்கள் இலங்கைத் தீவில் செயற்படுகின்றன. (இவர்கள் சிலசமயம் தாக்குதல்களிற்கு உள்ளாவதும் உண்டு. சில ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸ் நாட்டின் மருத்துவக் குழு-Medicine San Frontieres-MSF உறுப்பினர்கள் தாக்குதலுக்கு இலக்காகினர்.) இவை தான் இலங்கைத் தீவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தைப் பற்றிய நடுநிலை ஆய்வுகளை மேற்கொள்கின்றன. இவற்றின் ஆய்வு அறிக்கைகளே இன்று சர்வதேச சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் இவ் ஸ்தாபனங்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்குவதோடு மனித உரிமைகளைப் பேணுவதில் மிகுந்த கவனம் எடுக்கின்றன.


யூலை 83 இனக் கலவரத்தைத் தொடர்ந்து இன விடுதலைப் போராட்டமானது உள்நாட்டு யுத்தமாகியது. இதன் காரணமாக இலங்கையில் உள்ள எல்லா சமூகத்தினரும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டனர். ஆயினும் இலங்கை அரச படைகள் தமிழ் சமூகத்திற்கு செய்த கொடுமைகள் குருதி உறைய வைப்பன. கொக்கட்டிச்சோலை, குமுதினி படகு, நவாலி தேவாலயம் என அரச படைகள் நடத்திய படுகொலைகள் சர்வதேச சமூகம் தமிழ் சமூகம் மீது அனுதாபம் காட்டக் காரணமானது. இவ் உள்நாட்டு யுத்தங்களால் ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்தனர். இவர்கள் அயல் நாடான இந்தியாவிற்கும் மேற்கு நாடுகளிற்கும் பயணித்தனர். அந்நாடுகளும் தமிழ் சமூகத்திற்கு புகலிடம் அளித்தனர். இப்புலப் பெயர்வே தமிழீழ



17 பெப்ரவரி 87 — இலண்டண் ஹீத்றோ விமான நிலையத்தில் தமக்கு கிடைத்த திருப்பி அனுப்பும் உத்தரவிற்கு எதிராக தமிழ் இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்திற்கு அறிவித்தது. இப்படி புலம் பெயர்ந்தவர்களில் சிலர் தாய் மண்ணை மறக்காமல் தம் இன மக்களிற்காக குரல் எழுப்பினர். இது உலகின் மிக முக்கிய நகரங்களில் எல்லாம் எதிரொலித்தது.

மேற்கு நாட்டு தலைநகரங்களில் இடம் பெற்ற பேரணிகள் அமைப்பு சார்பானவையாக கணிக்கப்பட்டதால் அவை எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. பெரும்பாலும் பேரணிகள் யாவும் தமிழீழ விடுதலை அமைப்புகளினாலேயோ அல்லது அவற்றின் துணை அமைப்புகளினாலேயோ ஒழுங்கு செய்யப்படுகின்றன. அதனால் இப்பேரணிகள் கட்சி ஊர்வலமாகவே மேற்கு நாட்டு தகவல் தொடர்பு அமைப்புகளினால் கணிக்கப்படுகின்றது. அதனால் தமிழ் மக்களின் மீதான ஒடுக்கு முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் அப் பேரணிகளால் வெளிக்கொணர முடியவில்லை. சில பத்து நபர்கள் குரல் கொடுக்கும் போராட்டங்களுக்கு எல்லாம் செவி சாய்க்கும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளும் ஊர்வலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. அதற்கு இப்பேரணிகள் மனித உரிமை மீறல்கள், ஒடுக்கு முறைகள் என்பவற்றிற்கு மேலாக அமைப்பு நலன் சார்ந்ததாக அமைந்து விடுவதே காரணமாகும்.




சர்வதேச செய்தி ஸ்தாபனங்களால் ஈர்க்கப்பட்ட, நைஜிரிய இராணுவ ஆட்சிக்கு எதிராக, பொதுநலவாய மாநாட்டு மண்டபத்தின் முன் செய்யப்பட ஆர்ப்பாட்டம். ஆனால் தமிழ் அமைப்பினால் செய்யப்பட்ட பேரணி சர்வதேச செய்தி ஸ்தாபனங்களை எட்டவில்லை.

இலங்கை இன யுத்தத்தின் அலை எப்போதுமே அயல் நாடான இந்தியாவின் தமிழ்நாட்டில் மோதவே செய்தது. தமிழன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தென் ஆசியா

என்ற இன உணர்வு மிக ஆழமாக வேரோடியிருந்தது. அங்கு அரசியல் செல்வாக்குப் பெற வேண்டுமானால் ஈழத் தமிழரை ஆதரிக்க வேண்டும் என்ற நிலையிருந்த காலகட்டம் அது. தமிழ் நாடு எழுப்பிய குரல் உலகெங்கும் பரவியது. அன்று ஈழத் தமிழ் சமூகத்தின் பிரச்சார பீரங்கிகள் தமிழ்நாடும் இந்தியாவுமே. தமிழ்நாட்டு மக்கள் இன உணர்வுத் தாக்கத்தால் தம் ஒப்பற்ற ஆதரவை ஈழ விடுதலை அமைப்புகளுக்கு வழங்கினர்.

ஆனால் இந்திய மத்திய அரசு தனது நலன்களின் அடிப்படையில் தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியது. இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு வழங்கிய ஆதரவு இலங்கை அரசை எப்போதுமே அச்சுறுத்திக் கொண்டே இருந்தது. இலங்கை அரசை ஓர் இனவாத அரசாக உலக அரசுகளிற்கு காட்டியதும் இந்தியா தான். ஈழ - இந்திய நல்லுறவு ஈழத்தமிழ் சமூகத்திற்கு அச்சாணியாக இருந்து வந்துள்ளது. இந்தியா ஐ.நா. சபை வரை இலங்கை தமிழ் சமூகத்திற்காக குரல் கொடுத்தது. இந்திய அரசு விரும்பியோ விரும்பாமலோ தனது நலன்களிற்காக தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அளித்த ஆதரவு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பிடத்தக்க ஒன்று.

ஆனால் 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஈழ - இந்திய நல்லுறவு மிகவும் பாதிப்படைந்தது. 1987 வரை ஈழப் போராட்டத்தை நிபந்தனையின்றி ஆதரித்த இந்திய அரசு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழீழத்தில் முதன்மைப் பாத்திரம் வகித்த விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டது. (இது பற்றிய முழுமையான ஆய்வு : நவம்பர்-டிசம்பர் இதழில் *முத்தரப்புத் தோல்வி*) இதன் காரணமாக இந்தியா தனது ஆதரவை விலத்திக் கொண்டது. ஒக்டோபரில் புலிகளும் இந்திய இராணுவமும் மோதிக் கொண்டபோது விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரங்களை முடக்கிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமாக இருந்த சர்வதேச ஆதரவு இதனைத் தொடர்ந்து பாதிப்படையத் தொடங்கியது. விடுதலை அமைப்புகள் இந்தியாவுடன் முரண்பட்டதும் முழுமையாக இந்தியாவிடம் சரணடைந்ததும் இராஜதந்திரமற்ற செயல்கள் என்பது தெளிவு.

தமிழீழ விடுதலை அமைப்புகள் பல பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்று கூறிகொண்டே சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இப்படியான மனித உரிமை மீறல் சம்பவங்களும் சர்வதேச சமூகத்தை எட்டவே செய்தன. இலங்கை அரசின் செய்தித் தொடர்பு சாதனங்கள் எல்லாம் இவற்றை வெளிச்சம் இட்டுக் காட்டின. மேலும் இலங்கை தூதரகங்கள் இவற்றை அந்நாட்டு அரசுகளிற்கு தொடர்ச்சியாக அறிவித்தவண்ணமே இருந்தது. இப்படியான சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை கேள்விக்குள்ளாக்கியது. ஈழ விடுதலை அமைப்புக்களின் - ஓர் கொலையை இன்னோர் கொலையால் ஈடு செய்யும் முறைமை - இவர்களை போராளிகளாக இனம் காட்டத் தவறியது.

எல்லா தமிழீழ விடுதலை அமைப்புக்களுமே மனித உரிமை மீறல்களை செய்துள்ளன. இம் மனித உரிமை மீறல்கள் இலங்கை இராணுவத்தின் மிலேச்சத்தனத்திற்கு ஒப்பானதாக இருந்துள்ளது. அமைப்பு உட்படுகொலைகள், காட்டிக் கொடுப் போர் என்ற சந்தேகத்தில் மேற்கொண்ட படுகொலைகள், குழுவாத மோதலில் மேற்



### அமேரிக்காவின் பயங்கரவாதக் குழுப் பட்டியல்



ஒக்ரோபர் 97ல் அமெரிக்கா பயங்கரவாதக் குழுக்கள் நபர்கள் என்று குறிப்பிட்டு ஓர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இது பற்றி கருத்து தெரிவித்த ஜனாதிபதி கிளின்டன் பயங்கரவாதம் என்ற மொழியை பேசுபவர்களிற்கு எதிராக அமெரிக்கா போராடும் என்று தெரிவித்தார். அமெரிக்காவின் செயலாளர் திருமதி. மடலின் அல்பிறைற் கருத்து தெரிவிக்கையில் இதன் நோக்கம் அமெரிக்காவை பயங்கரவாதத்திற்கு ஆதரவற்ற வலயம் ஆக ஆக்குவது என்றார். இப்பட்டியலில் உள்ள அமைப்புக்கள் அமெரிக்காவில் நிதிசேகரிப்பு மற்றும் எந்த உதவிகளையும் பெற முடியாது.. தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு விசா வழங்கப்பட மாட்டாது.. அமெரிக்காவில் உள்ள தடை செய்யப்பட்ட அமைப்புகளின் நிதி முடக்கி வைக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





THE TIMES FRIDAY OCTOBER 27 1995

# Sri Lanka goes on war alert as Tigers slaughter villagers

BY CHRISTOPHER THOMAS, SOUTH ASIA CORRESPONDENT

கொண்ட கொலைகள், அரசியற் படுகொலைகள் என தமிழ் மக்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். நிர்வாக இயந்திரத்தை தம் கைகளில் எடுத்துக் கொண்ட குழுக்கள் சரணடைந்தோரையும் கைதிகளையும் கூட சுட்டுக் கொன்றுள்ளன.

மனித உரிமைகளை நிலை நாட்ட ஆர்வம் கொண்டுள்ள சர்வதேச சமூகம் விடுதலை அமைப்புகளின் அராஜகப் போக்குகளை ஏற்றுக் கொள்ளவில்லை. கடுமையாக கண்டித்து. அவ்வாறான செயல்களை உலகம் முழுவதும் வெளிச்சமிட்டுக் காட்டியது.

இக்காலப் பகுதிகளில் வெளியான அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகள் தமிழ்ப் போராளிக் குழுக்களை கண்டிக்கத் தவறவில்லை. ஆயினும் அக்கால கட்டத்தில் இலங்கை அரசின் திட்டமிட்ட இனப்படுகொலைகளும், சித்திரவதைகளும் மோசமாக இருந்ததால் தமிழ்ப் போராளிக் குழுக்களினுடைய அராஜகங்கள் பெரிதாக கணிக்கப்படவில்லை. உலக சமூகத்தின் பார்வை பாதிக்கப்படும் தமிழ் மக்கள் மீதே விழுந்தது. ஆனால் அவர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் போராளிக் குழுக்கள் பற்றி சர்வதேச சமூகத்திடம் ஓர் மதிப்பீடு இருந்ததாக தெரியவில்லை. ( பனிப் போரில் ஈடுபட்ட அரசுகளிடம் இந்த மதிப்பீடு காணப்பட்டது.) இதற்கு முக்கிய காரணம் ஈழத்தமிழ் மக்களை எண்ணற்ற அமைப்புக்கள் பிரதிநிதித்துவப்படுத்தியது. ஏறத்தாள 30 அமைப்புக்கள் தமிழீழப் போராட்டத்தை முன்னெடுப்பதாக அறிக்கைகள் விட்டிருந்தன. இவர்களின் அரசியல் முதிர்ச்சியின்மை, போராட்டம் பற்றிய தெளிவின்மை, தூரநோக்கின்மை இவற்றால் இவ்வமைப்புக்கள் ஒன்றுமே சர்வதேச அங்கீகாரத்தைப் பெறவில்லை. மாறாக சர்வதேச நாடுகளின் உளவு ஸ்தாபனங்களினால் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்த குழுக்களின் பொறுப்பற்ற செயல்கள் தமிழர் தாயகப் பகுதியில் ஆயுதக் கலாச்சாரத்தை தோற்றுவித்துள்ளதை மனித உரிமை ஸ்தாபனங்கள் தம் அறிக்கைகளில் சுட்டிக்காட்டியுள்ளன. சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்ட 1987 - 1990 காலப் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) பல கொலைகள் செய்ததை சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் ஆட்கடத்தல்களிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் EPRLF உடன் தமிழீழ விடுதலை இயக்க




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மும் (TELO), ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் (ENDLF) இணைந்து THREE STAR என தம்மை அழைத்துக் கொண்டன என்றும் இவர்கள் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதையும்




இவ்வறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

1986 மே இல் TELO வை தடைசெய்த விடுதலைப் புலிகள் அடுத்த ஓர் ஆண்டிற்கிடையில் EPRLF, PLOT (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்) ஆகியவற்றைத் தடை செய்தது. இக் காலப் பகுதியில் குழு மோதலில் பல




In Briefing No. 1 we stated that the estimates of the total number of prisoners as varying around 4OOO. The number in the Thunukkai complex was estimated at 3OOO and a thousand elsewhere. Thunukkai is now believed to be closed and the inmates have been distributed to several camps. Prison camps, either exclusive or part of LTTE camps, are known to exist or to have existed in Kachchai, Koilakandy (on Thachchanthoppu - Sangupiddy Road), Urelu (in a commercial Farm), Kopay (Heroes Hall, next to the women's camp), Kondavil, Chundikuli, Ariyalai (Maniam ...hottam) and more than 1O around Chavakacheri. This is far from bei... ...ustive. Vil...gers in a part of ...eddy, ... ...ow th... ...cal LTTE ...

இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அல்லது குற்றுயிராக எரிக்கப்பட்டனர்.

விடுதலை புலிகளால் பலர் கைது செய்யப்பட்டு சிறை யிடப்பட்டனர். ICRC யினால் இவர்களை பார்வையிட விடுக்கப்பட்ட வேண்டுகோள் புலிகள் அமைப்பால் மறுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்த பதிவும் மனித உரிமைகள் அமைப்பிற்கு செய்ய முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டோர் பயமுறுத்தப்பட்டதாக UTHR-Jaffna தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இத் தசாப்தத்தில் சர்வதேச சமூகம் ஒடுக்கு முறைக்கு உள்ளான மக்களுக்கு தனது அரவணைப்பைக் கொடுத்தது. ஆனால் அம்மக்களின் பிரதிநிதிகளாக யாரையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவில்லை. சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளை இலங்கைத் தீவையும் தாண்டி வெளியே பிரச்சாரப்படுத்தி இலங்கை அரசிற்கு நெருக்குதல் கொடுத்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவையை உலக அளவில் அறிவித்தன. புலம் பெயர்ந்து மேற்குலகில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பினர். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பவர்களை அவர்கள் தீவிரவாதிகளா? அல்லது பயங்கர வாதிகளா? என அடையாளப் படுத்துவதில் குழம்பியே நின்றனர். எந்த ஆயுதக் குழுவும் போராட்டத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கவில்லை. அவர்களது இராணுவ நடவடிக்கைகள் பெரும்பாலும் ஐக்கிய நாடுகள் சபையின் 1948 உலக மனித உரிமை பிரகடனத்திற்கு மாறானதாகவே அமைந்துள்ளது.

## 1990 - இன்று வரை :

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான சர்வதேச ஆதரவு பாரிய சேதத்திற்குள்ளானது. இத் தசாப்தத்தின் தொடக்கத்திலேயே இவ் ஆதரவை மீட்டெடுப்பதில் தமிழ் சமூகம் தொடர்ந்து தோல்வியே கண்டுள்ளது.

86 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்தே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்மைப் பாத்திரம் எடுத்துக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் 90ல் இந்திய அமைதிகாப்புப்படை வெளியேறியதைத் தொடர்ந்து யாழ் குடாவைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். மேலும் பெப்ரவரி 1988ல் தாம் ஆயதப் போராட்டத்தின் மனிதாபிமான சட்ட விதிகளுக்கமைய நடப்பதாக அறிவித்திருந்தனர். 10.07.95 ல் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு LTTE இன் சர்வதேச செயலாளர் எழுதிய மடலில் "ஒவ்வொருவருடைய மனித உரிமைகள், கருத்துக்கள், மதம், பால், இனம் என்பனவற்றை மதித்து பாதுகாப்பது தமது போராட்டத்

www.tamilarangam.net



தின் அடிப்படை விதி" என தெரிவித்திருந்தார். இவை விடுதலைப் புலிகள் சர்வதேச முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பதைக் காட்டுகின்றது.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் ஏனைய ஆயுத குழுக்களும் தமது நடவடிக்கைகளை முழுமையாக அல்லது பகுதியாக கட்டுப்படுத்தியதுடன் மக்களிடமிருந்தும் அந்நியப்பட்டனர். இதனை தொடர்ந்து ஈழ விடுதலை போராட்டத்தில் புலிகள் அமைப்பு முக்கிய பாத்திரம் ஏற்றனர். யாழ் குடாநாட்டை தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் அவர்களே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக ஆகினர். விடுதலைப் புலிகள் மீதான அனுதாப அலை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதான அனுதாப அலையாகியது. இதே போல் இதன் எதிர் மறையும் அமைகின்றது.

ஏனைய ஆயுதக் குழுக்கள் இலங்கை அரச படைகளுடன் இணைந்து கொண்டதன் மூலம் வெளி உலகிற்கு இலங்கை அரசை நியாயப்படுத்தின. இலங்கை தீவில் இன ஒடுக்குமுறை இருப்பதை விரும்பியோ விரும்பாமலோ மறைக்க உடந்தையாக இருந்தன. இப்படி தமிழ் சமூகம் பிளவுண்டு இருந்ததால், அவர்களுடைய போராட்டமானது பலவீனப்படுத்தப்பட்டது. ஈழ விடுதலைப் போராட்டத்தை ஒரு பகுதியினர், அதனை முன்னெடுப்பவர்களை வைத்துக் கொண்டு, ஈழ விடுதலை போராட்டத்தையே பயங்கரவாத போராட்டமாக கருதினர். சிலர் அதற்கும் மேல் சென்று பிரச்சாரப்படுத்தினர். இத் தூர நோக்கற்ற செயல்கள் போராட்டம் பற்றி சர்வதேச சமூகத்திடம் தவறான எண்ணத்தை ஏற்படுத்தியது.

மூன்றாம் கட்ட ஈழப் போரை 90 மேயில் ஆரம்பித்த விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் சரணடைந்த பொலிஸாரை கொலை செய்தனர். 11.09.95ல் சர்வதேச மன்னிப்புச்சபை புலிகளின் சர்வதேச செயலாளர் திரு லோறன்ஸ் திலகருக்கு எழுதிய மடலில் சிங்கள, முஸ்லீம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களை சுட்டிக்காட்டியிருந்தது. மேலும் புலிகள் கைது செய்த வைத்திருந்த கைதிகள் கொல்லப்பட்டதையும் கண்டித்திருந்தது.

செல்வி த.செல்வநிதி ( தமயந்தி, செல்வி) யாழ் பல்கலைக் கழக கலைப்பீட 3ம் வருட மாணவி விடுதலை அமைப்பால் 30.8.91ல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. பெண்ணிலை வாதியும் கவிஞருமான இவருக்கு International Association of Poets, Play wrights, Editors, Essayists & Novelists (PEN) விருது கிடைத்தது. ஆனால் இவ் விருதினை இன்று வரை அவர் பெற்றுக் கொள்ளவில்லை. இவ் விருதினைப் பெற முடியாமல் போன இன்னுமொரு பெண் பர்மாவின் எதிர்க் கட்சித் தலைவி. இவர் பர்மிய இராணுவ ஆட்சியில் விட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் "சொல்லாத சேதிகள்" கவிதைத் தொகுப்பைத் தந்த சிவரமணி; விடுதலை அமைப்பினால் விசாரித்து விட்டு விடுதலை செய்த பின்னர், தான் எழுதிய கவிதைகளை தீயிட்டு அத் தீக்கே தன்னை அர்ப்பணித்தார். இவரும் யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவியாவார். பெண்ணிலை வாதியான இவர் சர்வதேச கருத்தரங்குகளில் கலந்து கொண்டதன் மூலம் வெளி உலக பெண்ணிலை வாதிகளால் நன்கு அறியப்பட்டவர்.



Aung San Suu Kyi National League for Democracy - NLD தலைவி.



செல்வி சி.சிவரமணி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழீழ விடுதலைப் போராட்டம் பறித்துக் கொண்ட ஈடு செய்ய முடியாத இன்னுமோர் ஜீவன்; இரு குழந்தைகளின் தாயார் திருமதி ரஜனி திரணகம. இவர் யாழ் மருத்துவபீடத்தின் உடற்கட்டமைப்பியல், உடற்தொழிற்



திருமதி. ரஜனி திரணகம

பாட்டியல் (Anotomy & Physiology) ஆகிய துறைகளில் ஓர் சிறந்த விரிவுரையாளர். அமெரிக்க பல்கலைக் கழகங்கள் இவருக்கு அழைப்பு விடுத்தும் தமிழ் மாணவர்களுக்காக யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில பணியாற்றியவர். அவருடைய துறைக்கு அப்போது 9 விரிவுரையாளர்கள் தேவைப்பட்ட போது தனி ஒருத்தியாக அத் துறையை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. 29.09.89ல் பல்கலைக்கழகத்தை விட்டு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப் பட்டார். BROKEN PALMER - முறிந்த பனை நூலை வெளியிட்டதன் மூலம் தமிழீழப் போராட்டத்திற்கு பின்னால் மறைந்திருந்த சாக்கடையை உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியதற்காக இவர் இவ் உலகிலிருந்து மறைக்கப்பட்டார்.



சாலடமன் ருஷ்டி ஈழத்திலும் பல ருஷ்டிகள் உளர். இவர்களின் வேதங்கள் வெளிவராமலேயே போயின.

அன்று **SATTANIC VERSUS சாத்தானின் வேதங்கள்** நூலை தந்ததற்காக சால்மன் ருஸ்டிக்கு மரண தண்டனையை அளித்தார்; ஈரானின் அன்றைய மதத் தலைவர் ஆயததொல்லா கொமெய்னி. ஆனால் ஈழத்தில் யார் என்பது ரஜனியுடன் சேர்த்து மறைக்கப்பட்டது. இவரது கொலையை கண்டித்து ஊர்வலம் செல்ல பல்கலைக்கழக மாணவர்கள் முயன்றபோது விடுதலை அமைப்பொன்று ஓர் அறிக்கை வெளியிட்டது. அதில் தமது இயக்கத்திற்கு பங்கம் ஏற்படும் விதமாக நடந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட் டிருந்தது. இதனால் வாயை கறுப்புத் துணியால் கட்டியபடியே பல்கலைக்கழக மாணவர்கள் ஊர்வலம் சென்றனர்.

இப்படியாக தமிழீழ விடுதலையின் பெயரால் சகல விடுதலை அமைப்புக்களுமே மனித உரிமைகளை அப்பட்டமாக மீறியுள்ளன. அவ்வாறானவற்றில் சிலவேனும் வெளி உலகை எட்டின. PLOT இன் உட்படுகொலைகளை வெளியிட்ட "புதிய தோர் உலகம்" இப்படியான உட்படுகொலைகள் ஏனைய அமைப்புக்களிலும் இருப்பதை சுட்டிக் காட்டுகின்றது. EPRLF,



ஜெயின் விசாரனைக் குழு அறிக்கையின்ஒரு பகுதி வெளியில் கசிந்தது அல்லது கசியவிடப்பட்டது. அதில் விதலைப் புலிகள் ராஜீவை கொலை செய்தனர் என்றும் அதற்கு கருணானிதி தலைமையிலான திராவிடர் முன்னேற்ற கழகம் உடந்தையாக இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை தொடர்து கா.ஆதரவாளர்கள் தி.மு.க வினதும் அதனுடன் கூட்டு வைத்திருந்த கட்சிகளதும் தலைவர்களின் முகமூடிகளை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். வே.பிரபாகரனது உருவத்தை எடுத்துச் சென்று தீயிட்டனர்.

www.tamilarangam.net



TELO, ENDLF இவையும் மிக மோசமான அராஜகங்களில் ஈடுபட்டுள்ளதை சர்வதேச அமைப்புக்கள் சுட்டிக்காட்டியும் கண்டித்தும் உள்ளன. தனித்தனி சம்பவங்கள் எல்லாம் வளர்ந்து 90 களில் தமிழீழ போராட்டத்தின் நியாயத் தன்மையை அதனை முன்னெடுத்தவர்களை வைத்து சந்தேகத்திற்கு உள்ளாக்கியது.

இவ்வேளையில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி இந்திய மண்ணில் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார். விடுதலைப் புலிகளே காரணம் என ஜெயின் அறிக்கை கூறுகின்றது. ஆனால் அதை விடுதலைப் புலிகள் அதனை மறுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 21.05.91ல் ராஜீவ் மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான இந்திய, சர்வதேச ஆதரவும் சிதறியது. ராஜீவின் கொலையை தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தை இந்தியா முடக்கிவிட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பை தனிமைப்படுத்துவதற்கு இந்தியா பெரும் முயற்சி எடுத்தது. அதில் ஓரளவு வெற்றியும் கண்டது. இவ் இந்திய எதிர்ப்பானது 21.11.97 ல் LTTE தலைவர் பிரபாகரனின் கொடும்பாவி எரிக்கும் வரை சென்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களும் அரசுகளும் விடுதலைப் புலிகள் மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருப்பதால் இவ் அழுத்தங்களை இலங்கை அரசு தனக்கு சாதகமாக்கிக் கொண்டது. விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான தனது பிரச்சாரத்தைத் தூண்டியது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை மீறியது. மீண்டும் பிரேமதாஸாவுடன் செய்து கொண்ட யுத்த நிறுத்தத்தை மீறியது என்பனவற்றை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் சென்றன இலங்கை இந்திய அரசுகள்.

### மீண்டும் ஓர் முறிவு:

ஓகஸ்ட் 94 பாராளுமன்ற தேர்தலில் மக்கள் முன்னணி ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து அரசு அமைத்தது. அதனைத் தொடர்ந்து வந்த ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா மாபெரும் வெற்றியீட்டினார். அவருடைய தேர்தல் பிரச்சாரத்தின் முக்கிய கருவாக இருந்தது; 12 வருட கால உள்நாட்டு யுத்தத்தை பேச்சு வார்த்தைகள் மூலம் முடிவுக்குக் கொண்டுவருவது. இலங்கையில் மட்டுமல்ல, இலங்கை இனப் பிரச்சனையுடன் தொடர்புடைய நாடுகளில் எல்லாம் இவர் ஓர் சமாதானப் புறாவாக கணிக்கப்பட்டார்.

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தது மக்கள் முன்னணி அரசு. இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் ஜனவரி 95ல் ஆரம்பித்திருந்தது. இக்கால கட்ட பேச்சுவார்த்தையில் இரு தரப்புமே நம்பிக்கையீனங்களை வெளியிட்டன.

ஏப்ரல் முடிவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சந்திப்பிற்கு முன், ஏப்ரல் 19ல் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு இரண்டு கடற்படை படகுகளை மூழ்கடித்தனர். அதனைத் தொடர்ந்து இரண்டு போக்குவரத்து விமானங்கள் தாக்கப்பட்டு அதில் பயணம் செய்த 97 பாதுகாப்பு படையினரும் கொல்லப்பட்டனர். மேலும் 42 சிங்கள கிராமவாசிகள் வட திருமலையில் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடனான சர்வதேச நட்புறவும் முறிவடைந்தது.

பேச்சுவார்த்தை முறிவடைந்த ஒரு மாத காலத்திற்குள் இந்தியாவின் முன்னணி சஞ்சிகை "இந்தியா ருடே" நிருபர் சேகர் குப்தாவுக்கு சந்திரிகா அளித்த பேட்டியில் "20ம் நூற்றாண்டின் கொஞ்சமும் ஈவிரக்கமற்ற மிகவும்



மக்கள் முன்னணி அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஜனவரி 95 ல் யாழில் நடந்த பேச்சு வார்த்தை.

www.tamilarangam.net



திறமை வாய்ந்த ஒரு கொரில்லா அமைப்பு என்றும், ராஜீவ் காந்தியை கொல்வதற்கு கூட இரத்தத்தை உறைய வைக்கும் ஓர் வழியைத் தான் தேர்ந்தெடுத்தனர்" என்றும் குறிப்பிட்டிருந்தார். இப்படியாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான உணர்வலைகளை இந்தியாவில் ஏற்படுத்தினார்.

உலகின் முன்னணி நாடுகளுக்கு எல்லாம் தானே சென்று அல்லது தனது வெளிநாட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை அனுப்பி புலிகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்தார். உலக நாடுகளை, புலிகளைத் தடை செய்யும்படி தொடர்ச்சியாக வேண்டுகோள்களை விடுத்தார். இன்றைய மக்கள் முன்னணியின் ஆட்சிக்கு முண்டு கொடுப்பவர்கள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே. இதனை சர்வதேச அரசுகளும் அறிந்தே உள்ளன. இதன் மூலம் இலங்கை அரசு தான் ஓர் இனவாத அரசு இல்லை என்பதை நியாயப்படுத்த பயன்படுத்தியுள்ளது. மேலும் ஓர் நாட்டின் மிக முக்கிய பொறுப்பான வெளிநாட்டு அமைச்சர் பதவி வகிப்பவர் தமிழ் பின்னணியுடையவர். இவை எல்லாம் இலங்கை அரசிற்கு சாதகமான விடயங்கள்.

AMNESTY INTERNATIONAL
AMNISTIA INTERNACIONAL
AMNISTIE INTERNATIONALE
МЕЖДУНАРОДНАЯ АМНИСТИЯ
منظمة العفو الدولية
國際特赦組織

Ref.: TJASA37/LTTE/95.01

Mr Lawrence Thilakar
International Secretariat
Liberation Tigers of Tamil Eelam
211, Katherine Road
London E6 1BU,
United Kingdom

11 September 1995

Dear Mr Thilakar,

Since May 1990, we have repeatedly raised our concerns about reports of gross abuses of human rights with the leadership of the LTTE, conveyed via you or other representatives of the LTTE outside Sri Lanka. They have included the deliberate killing of hundreds of non-combatant Muslim and Sinhalese civilians, the arbitrary killing of civilians in bomb attacks on public buses and trains, the torture and killing of prisoners, and abductions for ransom. We have also expressed concern about reports of execution-style killings of prisoners accused of being traitors and those held for committing crimes in line with our organization's policy of total opposition to the death penalty in any form. In cases where we learned of the imposition of death sentences, we have appealed for their commutation.

We have also appealed for an immediate halt to incommunicado detention and have asked to be informed of the fate or whereabouts of individual prisoners held by the LTTE, some of whom have reportedly been tortured and killed. They include student and writer Thiagarajah Selvanithy and dramatist Thillainathan, who were both arrested on 30 August 1991. I use the opportunity of this letter to appeal that these two prisoners of conscience, if still alive, be released immediately and without conditions. If they have died in detention, we urge the LTTE to reveal their fate or whereabouts.

We have also continually urged that all people held in LTTE custody, including members of the Tamil community seized on suspicion of being sympathetic to other Tamil armed groups or organizations, are seen promptly and regularly by representatives of the International Committee of the Red Cross (ICRC). In relation to members of the Sri Lankan security forces, we have appealed for guarantees for their safety and for them to be seen promptly and regularly by representatives of the ICRC.

There are other potential concerns that we are currently investigating. They include reports of unfair trial of members of the Tamil community in contravention of Article 6 of Protocol II as well as of Common Article 3 of the Geneva Conventions. Paragraph 2 of Article 6 states that "[n]o sentence shall be passed and no penalty shall be executed on a person found guilty of an offence except pursuant to a conviction pronounced by a court offering the essential guarantees of independence and impartiality". In this context, I would like to remind you of our request of April 1992 for information about the reported creation of a law enforcement and judicial system in some of the areas of Sri Lanka under control of the LTTE. Other potential concerns that we are currently investigating include abuses in the context of the forcible recruitment of children by the LTTE forces.

Whereas acknowledg[illegible] al responses fr[illegible] self, particularly [illegible] on to
[illegible] expressed about [illegible] f mem[illegible] s, we [illegible] that

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை விடுதலைப் போராளிகள் முன்னெடுத்துக் கொண்டிருக்கையில் இவர்கள் சர்வதேச சமூகத்திடம் அந்நியப்பட்டு செல்வது இன்று பரவலாக உணரப்பட்டுள்ளது. இன்று இலங்கை அரசின் தொடர்ச்[illegible]ன பிரச்சாரத்தின் மூலமும் [illegible] சமூகத்துடனான [illegible] உறவின் மூலமும் இலங்கை பாதுகாப்பப் படைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பாரிய கவனத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக இலங்கை அரசு இன்று சர்வதேச உதவிகளை அனுபவிக்கின்றது. மறுபுறம் தமிழ் ஈழ மக்கள் பாரிய துன்பங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளுக்கு உள்ளாகியுள்ளனர். விபரிக்க முடியாத அவர்களது துன்ப சுமைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அமைப்பும் தமிழ் சமூகத்தில் உருவாகவில்லை.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவரீதியில் கையாளும் விடுதலை அமைப்புக்கள் சர்வதேச அரசுகளின் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளன. 96 மார்ச்சில் ஐரோப்பிய கூட்டு (பிரித்தானியா உட்பட 12 ஐ.நாடுகள்) அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும்படி வற்புறுத்தினர். UNHCRஉம் இதனை அறிவுறுத்தியது.

96 ஏப்ரல் 21, மே 18, மே 29 திகதிகளில் ஐரோப்பிய சமூகமும் விடுதலைப் புலிகள் தொடர்பாக சில முடிவுகளை எடுத்தது. அவை முறையே பேச்சுவார்த்தைகளை முறித்ததை கண்டிப்பது, விடுதலைப் புலிகளுக்கான ஆயத விற்பனையை கட்டுப்படுத்துவது, 42 சிங்கள கிராம வாசிகளின் கொலையை கண்டிப்பது.

14 யூலை 96, அவுஸ்திரேலியாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் Bob McMullan தமிழ் குழுக்கள் யுத்தத்தின் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை தவிர்க்கும்படி கேட்டிருந்தார்.

96 செப்ரம்பர் ல் US House of Representatives Committee on International Relations தமிழ் ஆயுத குழுக்களிடம் மனித உரிமைகளை மதிக்கும்படி கேட்டிருந்தது. யூன் 16 ல் Willy Wimmer தலைமையிலான ஜேர்மன் வெளிவிவகாரக்குழு தனது இலங்கை விஜயத்தின் இறுதியில் பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டியில் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்ததை கண்டித்திருந்தது. Human Right Watch /Asia தனது யுலை 96 அறிக்கையில் அப்பாவி பொது மக்களை கொல்வதை நிறுத்தும்படி புலிகள் அமைப்பைக் கேட்டிருந்தது.

விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்துவதன் உச்சகட்டமாக அவர்களை தடை செய்வது என்ற நிலைக்கு அரசுகள் வந்தன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களை பயங்கரவாதிகளாக சர்வதேச சமூகம் கணித்தது. இதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பயங்கரவாத மூலாம் பூசும் நிலை உருவானது.

14 மே 92ல் இரண்டு ஆண்டுகளிற்கு இந்தியா விடுதலைப் புலிகளை தடை செய்தது. இதன் மூலம் இந்தியா சர்வதேச அரங்கில் இருந்து விடுதலைப் புலிகளை துடைத்து விட முற்பட்டது. 14 மே 94ல் மீண்டும் ஓர் ஆண்டிற்கு விடுதலைப் புலிகள் மீதான தடையை கூட்டியது. யூன் 95ல் ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருந்த போது; இலங்கை புலிகளை தடைசெய்தால் ஐரோப்பிய அரசுகளும் புலிகளை தடை செய்வது பற்றி பரிசீலிக்கும் என்றனர். ஐக்கிய அமெரிக்காவும் கனடாவும் புலிகள், ஏப்ரல் 95ல் பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அவர்களை பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர். 8 ஒக்டோபர் 97ல் அமெரிக்கா விடுதலைப் புலிகளை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு 1996 Anti-Terrorism and Effective Death Penalties Act என்ற சட்டத்தின் கீழ் தடை செய்துள்ளது. இதன் மூலம் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாக அமெரிக்கா அறிவித்துள்ளது. மேலும் கனடாவில் கைது செய்யப்பட்ட புலிகள் உறுப்பினர் சுரேஸை "non-grata" அதாவது பயங்கரவாத குழுவை சேர்ந்தவர் என கனடிய நீதிமன்றம் அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இவர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் நிலையை எதிர் கொண்டுள்ளார்.

இலங்கைக்கு உள்ளும் வெளியிலும் தமிழீழ விடுதலையின் பெயரால் அராஜகங்கள் நடந்துள்ளன. இவை மிரட்டல்களில் இருந்து படுகொலை வரை சென்றுள்ளன. 01-05-94 ல் சபாரட்ணம் சபாலிங்கம் தமிழ் மக்களுக்கான ஆவண காப்பகம் ஒன்றை அமைக்க முயன்ற அவர், ஓர் தமிழீழ விடுதலைப் போராட்ட அனுதாபி. அவரது பாரிஸ் இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்து முன்னாள் PLOT உறுப்பினர் சுவிஸில் கொல்லப்பட்டதுடன் அவருடைய மனைவி பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்டார். மேலும் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் கந்தையா பேரின்பநாதனும், அவரது சகா கந்தையா கஜேந்திரன்; ஈழமுரசு பத்திரிகை ஆசிரியரும் 26-10-96 ல் பரிசில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவற்றை விடவும் பேச்சு, எழுத்து சுதந்திரங்களிற்கு எதிரான மிரட்டல்களும், தாக்குதல்களும் பரவலாக இடம் பெற்றுள்ளன.

### அமேரிக்காவின் பயங்கரவாதக் குழுப்பட்டியல்

^Abu Nidal Organization -Palestinian
^Abu Sayyaf Group - Filipino
^Armed Islamic Group - Algerian
^Aum Aum Shinrikyo - Jappanese
^Euzkadi Ta Askatasuna - Spanish
^Democratic Front for the Liberation of Palestine
^Hamas - Palestinian
^Harakat ul-Ansar - Pakistani
^Hizbollah - Lebanese
^Gama'a al-Islamiyya - Egptian
^Japanese Red Army
^Al Jihad - Egiptian
^Kach - Israeli
^Kahane Chai - Israeli
^Khmer Rouge - Cambodian
^Kudistan Workers Party
^LTTE - Sri Lankan
^Manuel Rodriguez Patriotic Front Dissidents - Chilean
^Mojahedin-e Khalq Org'n - Iranian
^Nat'l Liberation Army Colombian
^Palestinian Islamic Jihad
^Palestinian Liberation Front
^Popular Front for the Liberation of Palestine General Command
^Re'ry Armed Forces of Colombia
^Revelutonary Organization 17 November - Greek
^Re'ry People's Strugle -Greek
^Revelutonary People's Liberation Party / Front - Turkish
^Shining Path -Peruvian
^Tupac Amaru Re'ry MovementPeru


# Exile and death

THE COLD-BLOODED KILLING of former TELO member Sabaratnam Sabalingam in Paris on 1 May, has sent shock waves through the 300,000-strong Tamil exile community across the world. Many suspect the LTTE of his murder. Over 20 protest and commemorative meetings have been held from Berlin to Toronto. Claims by Colombo news agency Lankapuvath that another four Tamils in Paris have been shot dead by the Tigers remain unsubstantiated. Sabalingam was working on a history of the Tamil militant movements that exposed their many "internal killings" and assassinations. In a recent article in Canadian Tamil political weekly Thayagam, he accused LTTE leader Prabhakaran of betraying TELO leader Kuttimani and of quietly eliminating other militants who took part in the infamous Neerveli banks robbery with him in 1981.

The message is clear says Colombo insider columnist Taraki. History will be written or rewritten by the victors, in the case of Eelam Tamils by the LTTE and

# The Sri Lanka Monitor

Produced by the British Refugee Council

# Tigers killed in Paris

## Danish deportee arrested in Colombo

The Srilanka Monitor May 94

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பெயரால் செய்யப்பட்ட இச் செயல்கள் தமிழ் சமூகத்

www.tamilarangam.net



தை பெருமளவு எட்டாவிட்டாலும் சர்வதேச சமூகத்தை எட்டியே உள்ளது. மனித உரிமைகளை பேண முற்படும் சர்வதேச சமூகத்திடம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வேண்டி சென்றால் தமிழீழ விடுதலை அமைப்புக்கள் எல்லாம் International War Crime Tribiunal முன் குற்றவாளிகளாகத்தான் நிறுத்தப்படுவார்கள்.

எந்த விடுதலையை வேண்டி விடுதலை அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதோ அதே அமைப்புக்கள் மக்களை ஒடுக்க முற்பட்டன. விடுதலை அமைப்புக்கள் வளர்ச்சிக் கட்டத்தில் மக்களை நம்பியிருந்தாலும் அவ் வளர்ச்சிக் கட்டத்தைத் தாண்டியதும் சட்டத்திற்கும் மக்களிற்கும் அப்பாற்பட்டவர்களாக தம்மை எண்ணிக் கொண்டனர். இங்கு மக்கள் தம் பிடியை இழந்ததபடியால் போராட்டத்தை நிர்ணயிக்கும் சக்தியை இழந்தனர். இதனால் போராட்டத்தில் ஈடுபாடற்றவர்களாயினர். இதன் விளைவு சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீதான அனுதாபத்தை சம்பவங்களின் அடிப்படையில் தெரிவிக்கின்றதே அல்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி அக்கறை காட்டவில்லை.

எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் தனது இலக்கை அடைய, தமது போராட்டத்தின் நியாயத் தன்மையை சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்தி அவர்களின் ஆதரவை பெற்றே ஆக வேண்டும். அப்படி செய்வதற்கு அமைப்புகளின் தலையீடின்றி சுதந்திர, கட்சி சார்பற்ற அமைப்புக்கள் மக்களை ஒன்று சேர்த்து குரல் எழுப்ப வேண்டும். மேற்கு நாடுகளில் மட்டும் உள்நாட்டு யுத்தத்தால் 3,00,000 இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்கள் உணர்வு பூர்வமாக செயற்பட்டால் சர்வதேச சமூகத்தை ஈர்க்கமுடியும்.

அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமும், தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் தமிழ் மக்களின் மீதான ஒடுக்கு முறைகளை வெளிக் கொணருவது; சர்வதேச தொடர்பு சாதன முகவர்களை இலங்கைத் தமிழ்ப் பகுதிகள் மீதான ஒடுக்கு முறைகளை வெளிக் கொணரத் தூண்டுவது; கையெழுத்துப் போராட்டங்களை நடத்துவது; ஏனைய நாடுகளின் விடுதலைப் போராட்ட அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை பரப்புவதும், அவர்களது ஆதரவைப் பெறுவதும்; தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்கள் வரும் போது; தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை அவர்களுக்கு தெளிவுபடுத்துவது இவை எல்லாம் நீண்ட கால நோக்கில் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

எப்போது மக்கள் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டு உணர்வுபூர்வமாக ஒத்துழைப்பு செய்கிறார்களோ அன்று திருப்புமுனை உருவாகும். போராட்டத்தின் நிர்ணய சக்தியாக மக்களே இருக்க வேண்டும். ஏனெனில் அவர்களே பாதிக்கப்படுவோர். விடுதலை அமைப்புக்கள் ஊக்கிகளே. அவர்கள் என்றும் மக்களுக்கு கட்டுப்பட்டவர்கள். இதனை மறக்கவோ மறுக்கவோ கூடாது. போராட்ட சூழலை காரணம் காட்டி தம்மை நியாயப்படுத்தும் அமைப்புகள் முதலில் தம் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும்.

மக்கள் சர்வ தேசத்தின் ஒரு பகுதி. இன்று அந்நிய மண்ணில் உள்ள அனைவரும் சர்வதேசத்தின் கவனத்தை திருப்பினால் நிச்சயம் தமிழ் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க சர்வதேச சமூகம் ஒத்துழைப்புத்தரும்.

எந்த ஓர் விடுதலை அமைப்பிற்கும் மக்களது விடுதலையை வென்றெடுக்க; அராஜகமான, மனித உரிமைகளுக்கு மாறான; கடத்தல், மிரட்டல் (சித்திரவதை), கொலை என்பன அவசியமா? போராட்டத்தின் பெயரால் எவ்வளவு தூரம் மனித உரிமைகளை மீற முடியும்? எத்தனை காலத்திற்கு மீற முடியும்?



தேசத்தின் தாயாக தெ.ஆபிரிக்க விடுதலை போராட்ட காலத்தில் மதிக்கப்பட்டவர் வின்னி. நெல்சன்மண்டேலாவின் முன்னாள் மனைவியாவார். தெ.ஆபிரிக்காவின் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற Desmond Tutu தலைமையிலான Truth and Reconciliation Commission (TRC) முன் விடுதலை போராட்டம் என்ற பெயரில் பணமோசடி சித்திரவதை கொலை ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழ விடுதலை போராட்டமானது நியாயமானது என்பதனை சர்வ தேச சமூகம் கோட்பாட்டளவில் ஏற்கும். ஆனால் போராட்ட அமைப்புகள் தம் தமிழிழம் என்ற இலட்சிசயத்தை அடைய எடுக்கும் நடவடிக்கைகள் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்துகின்றது. பெரும்பாலும் சர்வதேச சமூகத்தின் கண்டனத்திற்கு உள்ளாகிறது.

இன்று இலங்கை இராணுவம் யாழ்க் குடாவை 300,000 - 400,000 மக்கள் வெளியேற்றத்தையும் பொருட்படுத்தாமல் கைப்பற்றியது, அதன் இராணுவ பலத்தால் மட்டுமல்ல சாவதேச சமூகத்தின் ஒத்துழைப் போடும் தான். இவ் ஒத்துழைப்பு ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கும் ஆர்.பிரேமதாசாவிற்கும் கிடைக்காதபடியால் தான் அவர்களால் ஓர் Operation Revaresa வை அன்று மேற்கொள்ள இயலாமல் போனது.

உலகமயமாதலின் மூலம் உலகம் மிகவும் சிறுத்து விட்டது. நேற்றைய விதிகள் இன்றய சூழலுக்கு பொருந்தவில்லை. பல தசாப்தங்களின் முன் லெனினும் மார்க்ஸ்ம் தம் கால சூழ்நிலைக்கு ஏற்ப எழுதிச் சென்றவற்றை இன்று விடுதலை அமைப்புகள் வேத ஆகமங்கள் போல் தூக்கி பிடிப்பது இன்றய சூழலுக்கு பொருந்தாது. உலக ஒழுங்கமைப்பானது பல் வேறு வழிகளில் மாற்றமடைந்துவிட்டது; ஆனாலும் தமிழிழ விடுதலை போராட்ட வடிவம் மட்டும் இன்னும் அப்படியேயே உள்ளது. ஓர் மாற்று போராட்ட திட்டம் பற்றிய சிந்தனை கருக் கொள்ளவில்லை.

ஈழ விடுதலையை வென்றெடுப்பதற்கான இடை நிலை இலக்காக, இப் போராட்டத்தினை சர்வதேச சமூகம் அங்கிகரிக்க செய்ய வேண்டும். பாலஸ்தின விடுதலை இயக்கமானது தனது இராணுவ அழுத்தங்கள், தொடர்ச்சியான அரசியல் போராட்டங்கள் மூலம் இஸ்ரேலிய் அரசை பணிய வைத்தது மட்டுமல்ல சர்வதேச சமூகத்தையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது. இதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையில் பார்வையாளர் அந்தஸ்தையும் பெற்றுள்ளது. நிக்ரகுவா சான்டினிஸ்ரா புரட்ச்சியாளர்கள் சர்வதேச அரங்கை தமக்கு ஆதரவாக திருப்பி வெற்றி கண்டனர். நிற வெறிக்கு எதிராக போராடிய நெல்சன் மண்டேலாவும் டெஸ்மன் டுட்ரூவும் போராடிக் கொண்டிருந்த போதே சமாதானத்திற்கான நோபல் பரிசை பெற்றனர். இஃதானது போராட்டம் சர்வதேச அங்கிகாரம் பெறவும் இறுதி வெற்றிக்கும் பெரும் பங்களிப்பு செய்தது. கடந்த ஆண்டு கிழக்கு திமோர் மக்களை பிரதிநிதித்துவம் செய்த, அந்நிய நாட்டில் வசித்த, கிழக்கு திமோரியருக்கே இப்பரிசு கிடைத்தது.


இவ்வாறாக விடுதலைப் போராட்டமானது அது நடைபெறும் நாட்டின் அரசியல் எல்லைகளை தாண்டி சர்வதேச மக்களின் உணர்வுகளை தூண்ட வேண்டும். அதற்கு விடுதலை அமைப்புகள் அரச சார்பற்ற மனிதவுரிமை ஸ்தாபனங்களின் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும். மேலும் ஈழ விடுதலைப் போராட்டமானது அமைப்புகளின் போராட்டமாக இல்லாமல் மக்களின் போராட்டமாக ஆக வேண்டும்.□□□



நாம் சிங்கள முதலாளித்துவ அரசின் அராஜகங்களிற்கு எதிராக போராடினால் மட்டும் போதாது. தமிழீழ விடுதலை அமைப்புகளிலும் புதிதாக உள் நுழைந்து வரும் அராஜகப் போக்கிற்கு எதிராகவும் போராட வேணடடும். அராஜகமும் ஒடுக்கு முறையும் எந்த ரூபத்தில் வந்தாலும் அதற்கு எதிராக போராட வேண்டும். தன்னளவில் இந்தக் கயமைகளை வைத்துள்ள எந்த அமைப்பாலும் தமிழீழ மக்களுக்கு விமோசனத்தை வழங்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதமேந்திந போராட்டமேயாயினும் ஒரு பொழுதும் அராஜகத்தன்மை கொண்டதாக மாறிவிடுவதை அனுமதிக்க முடியாது. விடுதலை போராட்டத்தில் என்றும் உயிர் வாழ்தலும் மானிட உயிர்ப்பிற்கான ஆவலும் மேலோங்கியிருக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டம் இவற்றை இழந்து செல்லுமாயின் அது இன்னொரு அராஜகத்திற்கும் ஒடுக்கு முறைக்குமான வழியாகவே அமைந்துவிடும்.

கோவின்தன் (புதியதோர் உலகம்)



www.tamilarangam.net



# கேள்வியும்

விவாகச் சந்தை

# நிரம்பலும்



ஓவியர் Picasso



எமது நாட்டிலே இடத்திற்கு இடம் தொழிலுக்கு தொழில் சீதனத் தொகையில் மாறுதல் ஏற்படுவது போல் இப்போது இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு அகதிகளாக வந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ பிரதேச தொழில் அடிப்படை மாறி நாட்டுக்கு நாடு விசா(Visa) அடிப்படையில் சீதனத் தொகை மாற்றம் அடைகின்றது.

நமது மூதாதையர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் விட்டுச் சென்ற சடங்குகளும் சமுதாய வரை முறைகளும் பற்பல. அவற்றில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பது சில மட்டுமே. அவற்றில் பல சமுதாய முன்னேற்றத்தின் கலங்கரை விளக்குகளென்று கருதப்படுகின்றன. ஆனால் சிலவற்றை சமுதாயத்தின் தடைகள் என்றே கூற வேண்டும். அவற்றில் ஒன்று தான் தொடர்ந்து வரும் சீதனக் கொடுமை.

மனிதன் மண்ணிலிருந்து விண்ணுக்குச் சென்ற காலம் மாறி இன்று விண்ணிலேயே வீடு அமைத்து குடிவாழும் அளவிற்கு விஞ்ஞானமும் மக்கள் வாழ்வும் வளர்ந்து விட்ட இந்நேரத்திலும் எமது சமுதாயத்தைப் பீடித்துள்ள சீதனம் என்கின்ற தொற்று நோய்க்கு இதுவரை மருந்து அறியப்படவில்லை. இது எமது சமுதாய உள்ளங்களிலே உறைந்துவிட்ட நோய் இதை படிப்படியாகத் தான் அழிக்க முடியும்.



நாட்டில் இருக்கும் வரை இது சமுதாயத்தின் பொருளாதார வறுமையினால் ஏற்பட்ட தொற்று நோய் என்றும் இது சமுதாயத்தின் பொருளாதார நிலமைகள் மாறும் போது இவையும் படிப்படியாக அழிக்கப்பட்டுவிடும் எனவும்

www.tamilarangam.net

## சமூகம்

பலர் கனவு கண்டனர். அவர்களுடைய கனவிலே ஒன்று தான் பலித்தது. வெளிநாடுகளில் வாழும் தமிழ் சமூகத்தின் பொருளாதாரத்தில் முன்னேற்றம், ஆனால் தொடரும் சீதனக் கொடுமைக்கு முடிவே இல்லை. இது ஆசியாவிலிருந்து இப்போது ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களுக்கும் பரவுகின்றது.

இதனுடைய கொடிய துன்பத்திற்கு குறிப்பாக பெண்கள் சமுதாயமே பலியாகிக் கொண்டு போகின்றது. வாழ்க்கையின் அர்த்தத்தை, அதன் குறிக்கோளைக் காண முடியாத அளவு இது குடும்பத்தின் இளமைக் காலத்திலேயே பீடித்துக் கொள்கின்றது. இதிலும் பெண் குழந்தை பிறந்து விட்டால் அக் குடும்ப அங்கத்தவர் அனைவரும் இந் நோய்க்கு உரியவர்களாகி விடுகின்றனர். இது குடும்பத் தலைவன் தொட்டு கடைசிக் குழந்தை வரை நாளும் பொழுதும் படிப்படியாக அவர்களை துன்பத்தின் பாதாளத்திற்கே தள்ளுகின்றது.

நாம் நாட்டை விட்டு வெளியேறி விட்டோம் எமக்கும் சமூகத்தில் நடக்கின்ற போராட்டங்களுக்கும் தொடர்பில்லை என்று எவராவது எண்ணிவிடக் கூடும். நாட்டை விட்டு வெளியேறி விட்டால் எம் சொந்த சமுதாய அடக்கு முறைகளிலிருந்து தப்பி விட்டவர்கள் என்று பொருளில்லை. மேலும் நான் ஒருவன் திருந்திவிடுவதால் சமுதாயம் முழுவதுமே திருந்திவிடுமோ என்றும் கூட எண்ணலாம். ஏனெனில் ஒருவர், இருவர் சேர்ந்ததே சமூகம். ஒவ்வொருவருக்கும் சமூகப் பொறுப்புக்கள் இருக்கின்றன நிறையவே இருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட்டால் அதற்கு நிச்சயம் வெற்றிகிட்டும்.



அன்றி இவற்றை நிறைவேற்ற நாம் மீண்டும் நாட்டிற்குத் திரும்பி துப்பாக்கிகளை கையிலே எடுத்தால் சாதித்து விடலாம் என்று தப்பாக எண்ணிவிடக் கூடாது. நீங்கள் வாழுகின்ற நாடுகளிலே இருந்து கொண்டு காலம் காலமாக கடைப்பிடித்து வந்த சமுதாய முன்னேற்றத் தடைகளை அழித்துப் புதிய சிந்தனை கொண்ட நவீன சமுதாயத்தை

**சமுதாய அடக்குமுறைக்கு எதிராக போராடத் துணிவில்லாத கோளையும், சமுதாய முன்னேற்றத்தின் வேகத்திற்கு ஈடு கொடுத்து ஓடமுடியாத சோம்பேறியுமே பழைமைவாதி.**

அமைப்பதற்கு வேண்டிய வழிகளையும், வரையறைகளையும் வகுத்துக் கொள்ளுங்கள். அதுவே நீங்கள் உங்கள் தமிழ் சமூகத்திற்கு செய்யும் பெரும் பணி.

பல தரப்பட்ட கலாச்சாரங்களையும், பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்களுடனும் பழகுகின்ற வாய்ப்பை பெற்றுள்ளீர்கள். இதனால் பல விதமான முன்னேற்றகரமான பழக்கவழக்கங்களை பார்த்தும் பழகியும் கேட்டும் அறிந்தும் பெறுகின்ற வாய்ப்பு இது. குறிப்பாக பெண்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய, அமெரிக்க நாகரீகம் தான் உலகிலேயே சிறந்த நாகரீகம் என்று எவரும் எண்ணிவிடக் கூடாது. நான் எதைக் குறிப்பிடுகின்றேன் என்றால் இவர்களுடைய கலாச்சாரத்திலேயுள்ள சில பல முன்னேற்றமானவற்றை எடுத்துக் கொண்டு எமது கலாச்சாரத்திலே இருக்கின்ற மூடநம்பிக்கைகளையும், பிற்போக்குத் தன்மைகளையும் கைவிட வேண்டும். முற்றாக விட வேண்டும்.



தமிழ் மக்கள் அனைவரும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் போல் உண்மையான உயர்வான சமுதாய வாழ்வை அனுபவிக்க முடியாத, சில குறுகிய வடிவமைக்கப்பட்டுள்ள லயன்களைப் போன்ற வரையறைக்குள் வாழ்ந்து கொண்டு வருகின்றனர். உடைகளையும் மொழியையும் ஆங்கிலேயர்களிடமிருந்து பின்பற்றிய நாம் ஏன் அவர்களின் சமுதாய அமைப்பிலேயுள்ள முன்னேற்றமான வழிமுறைகளை பின்பற்ற முடியவில்லை. சிறந்ததை அறிய எமது அறிவு போதாது போனாலும் பிழையானவற்றை அறிந்து கொள்ளக் கூடிய பகுத்தறிவு கூட இல்லையா?

சமுதாய அடக்குமுறைக்கு எதிராக போராடத் துணிவில்லாத கோளையும், சமுதாய முன்னேற்றத்தின் வேகத்திற்கு ஈடுகொடுத்து ஓட முடியாத சோம்பேறியுமே பழைவைாதி.

**உலகில் சொல்லப்பட்டவற்றில் நல்லவற்றையெல்லாம் கற்றுக் கொள்வதே உயர்ந்த கலாச்சாரம்.**

www.tamilarangam.net



உலகில் சொல்லப்பட்டவற்றில் நல்லவற்றையெல்லாம் கற்றுக் கொள்வதே உயர்ந்த கலாச்சாரம். இன்று உலகம் படிப்படியாக சிறுத்துக் கொண்டு செல்வதால் உலகம் தான் எனது நாடு உலகோர் யாவருமே எனது உறவினர் என்ற நிலை உருவாகிக் கொண்டு வருகின்றது. இந்த வேளையிலும் பிறர் குறைகளே நமது கண்களுக்கு முன்னால் தெரிகின்றது. நமது குறைகள் எமது முதுகுக்கு பின்னால் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

**நாம் முன்னை விட முன்னேறிக் கொண்டிருக்கின்றோம், என்ற நிலை உருவாக வேண்டும் அதைத்தான் வளர்ச்சி என்பர்.**



எவ்வளவு படித்திருந்தாலும் எத்தனை மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தாலும் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைக்காது போனால் அவர்களை உலகமே ஒதுக்கிவிடும். ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு வகையில் நாம் முன்னை விட முன்னேறிக் கொண்டிருக்கின்றோம் என்ற நிலை உருவாக வேண்டும் அதைத்தான் வளர்ச்சி என்பர். எமது அறியாமையை குறித்து நாம் அறியாமல் இருப்பது தான் மிகவும் முட்டாள்தனம். சமுதாயத்தில் ஏதோ ஒரு சிலர் மனிதத்தன்மையின்றி நடந்து கொள்வதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்வின் பாதாளத்திற்குத் தள்ளப்படுகின்றனர்.

**வாழ்வு என்பது அவரவர் அறிவுக்கும் திறமைக்கும் வசதிக்கும் ஏற்ப அமைவதல்ல. நாம் அமைத்துக் கொள்வதே வாழ்வு.**

வாழ்வு என்பது அவரவர் அறிவுக்கும் திறமைக்கும் வசதிக்கும் ஏற்ப அமைவதல்ல. நாம் அமைத்துக் கொள்வதே வாழ்வு. மாற்றங்களுக்கு ஈடு கொடுக்காமல் நம் வாழ்வு வெற்றியாய் அமையாது. மாற்றங்களை மறுக்கின்றவர்கள் எந்த வெற்றியையும் அடையவும் முடியாது.



அழும் பெண் — 1937
ஓவியர் Picasso

அர்ப்ப சுகத்திற்காக வாழ்வை விற்கும் அர்ப்ப ஆண்களையும் அவர்களுடைய சுகபோகங்களையும் வெறுத்துத் தள்ளும் படியான மனோபாவத்தை பெண்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்து கொள்ளும் அனுபவ அறிவ இல்லாமல் ஏட்டுக் கல்வி பயனற்றது. இளமையில் இருந்தே பெண்கள் ( குறிப்பாக ஆசிய நாட்டுப் பெண்கள்) உலக நடவடிக் கைகளில் பங்கு பெற்று உழைக்க வேண்டும். அவ்வாறு உழைக்காமல் இருந்தால் உலகம் ஒரு போதும் அமைதியான சூழ்நிலையை எட்டவே முடியாது.

பெண்கள் ஆண்களால் கைவிடப்பட்ட போதும், ஆண்கள் தயவே இல்லாத போதும், அநாதைப் பெண்களாக ஆக்கப்பட்ட போதும், அவர்கள் மக்களால் மதிக்கப்பட்டு

**உண்மையாக வாழ்வதற்கு தடையாக உள்ள சமுதாய சட்டங்கள் அழிக்கப்பட வேண்டியவையே.**

போற்றப்பட வேண்டுமானால் அவர்கள் பொது வாழ்வில் பங்கு கொண்டு உழைக்க வேண்டும். அவர்களுடைய வாழ்வை துருப்பிடித்து அழிய விடுவதை விட பயன்படுத்தி வளம் பெறச் செய்வதே புத்திசாலித்தனம்.

சமூகத்தின் ஆற்றலுக்கு எதிராக செயற்படும் எல்லாச் சமுதாயச் சடங்குகளும், சட்டங்களும் அழிக்கப்பட வேண்டியவை. உண்மையாக வாழ்வதற்கு நம்மைத் தடை செய்கின்ற சமுதாய சட்டங்களும் அழிக்கப்பட வேண்டியவையே. அறியாமை எங்கு அறிவு என மதிக்கப்படுகின்றதோ அங்கே அறிவு அறிவீனமாக கணிக்கப்படும்.□□□

**அறியாமை எங்கு அறிவு என மதிக்கப்படுகின்றதோ, அங்கே அறிவு அறிவீனமாக கணிக்கப்படும்.**

www.tamilarangam.net



# தமிழியல் வெளியீட்டுத் தொடர்பகம்

## அறிமுகம்

*என்.செல்வராஜா*

இன்று தமிழர் உலகெங்கும் பரந்து வாழ்கின்றார்கள். புலம் பெயர்ந்து அன்னிய மண்ணில் வாழ்கின்ற போதும் தமிழ் மொழியை, தமிழ் கலை, கலாச்சாரத்தை, தமிழ் இலக்கியத்தை மறவாது வாழ்வதில் சிரத்தை கொண்டுள்ளார்கள். தமிழில் சிறு சஞ்சிகைகளும் நூல்களும் ஒலிப்பட, ஒளிப்பட நாடாக்களும் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து உருவாகும் போது அவர்களது ஆதங்கம் அந்த ஊடகங்களின் வாயிலாக உலகை எட்டுகின்றன.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, சுவிற்சலாந்து, கென்யா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தென்னாபிரிக்கா, பீஜித் தீவுகள், அந்தமான் போன்ற நாடுகளில் தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களின் தமிழியல் படைப்புக்களில் எத்தனை அண்டை நாடுகளை வந்தடைந்தன என்பது விடை காண முடியாத கேள்வியாகும். மேலும் இவர்களை தமிழியல் படைப்புக்களில் எத்தனை சென்றடைந்தன என்பதும் கேள்விக்குரியதாகும்.

இதுவரை இலங்கை, இந்தியா தவிர்ந்த பிற நாடுகளில் வெளியிடப்படும் சிறு சஞ்சிகைகள், நூல்கள் போன்ற வற்றையாவது சேகரித்துப் பாதுகாத்து ஆவணப்படுத்தி வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிய முடியவில்லை. சில நாடுகளில் தனியார் முயற்சியின் விளைவாக சில தனிப்பட்ட சேர்க்கைகள் சேகரிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றதாயினும் அது தனிப்பட்ட சுவை அடிப்படையில் தேர்ந்தெடுத்த சிறு சேர்க்கைகளாகவே அமையும் சாத்தியம் உள்ளது.

விநியோக வசதிக் குறைவின் காரணமாக தமிழ் நூல் வெளியீட்டாளர்கள், குறிப்பாக ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் சிறிய எண்ணிக்கையிலான பிரதிகளையே அச்சிட்டு தம் முயற்சிக்கு எட்டியவரையில் விநியோகித்து வருகின்றனர். வெளியிடப்படும் பிரதிகளின் எண்ணிக்கையை அதிகரித்தால் தனிப்பிரதியின் உற்பத்திச் செலவு குறையும் என்ற போதிலும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தை வாய்ப்பிற்கு அஞ்சி அவர்கள் அதிகமான பிரதிகளை அச்சிடத் தயங்குவதை அறியமுடிகின்றது.

பொதுவாக ஐரோப்பிய தமிழ் வெளியீடுகளுக்கான சந்தையில் காணப்படும் முக்கிய அம்சம் புதிய கொள்வனவாளர்களை உருவாக்குவதில் காணப்படும் மந்த நிலையாகும். ஏற்கனவே நூல்கள் மற்றும் வெளியீடுகளை வாங்கியவர்களே திரும்பத் திரும்ப புதிய நூல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இங்கு காணப்படுகின்றது. வெளியீட்டாளர் - வாசகர் நேரடித் தொடர்பே இதற்கு முக்கிய காரணமாகக் கருதலாம். நூலைப்பற்றி அறியாதவர்களிடம் புதிய நூல் பற்றிய செய்தியைக் கொண்டு செல்லும் நம்பிக்கைக்குரிய ஊடகம் ஒன்று இல்லாமையும் மற்றொரு காரணம் ஆகும். நூலை விற்பனை செய்யும் வர்த்தகர்களையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆக வெளிவரும் நூல் அறிமுகங்களையும், அறிமுக விழாக்களையுமே நூல் பற்றிய செய்தியை இன்று வாசகர்களிடம் எடுத்துச் செல்லும் ஊடகங்களாகக் காண்கின்றோம்.

இலங்கை, இந்தியா போல் இல்லாது ஐரோப்பிய நாடுகளில் தமிழ் நூல்களுக்கென பிரத்தியேகமான நூல் விற்பனை நிலையங்கள் விரல் விட்டு எண்ணக் கூடியதாகவே உள்ளன. பெரும்பான்மையான ஈழத்துத் தமிழ் நூல் விற்பனைக்கு பலசரக்கு வியாபார ஸ்தாபனங்களை நடாத்தும் தமிழ் வர்த்தகர்களையே நம்ப வேண்டியதாக உள்ளது. அவர்கள் மனமுவந்து ஒதுக்கும் ஒரு சிறு பிரிவிலேயே எம்மவரின் தமிழ் நூல்கள் காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட வேண்டியுள்ளது.

திருப்திகரமான ஒரு நூல் சந்தை அமைப்பு ஏற்படாத வரையில் காத்திரமானதொரு

www.tamilarangam.net



சர்வதேச நூல் விநியோக முறையை ஏற்படுத்த முடியாது என்பதுடன் சிதறிக்கிடக்கும் எமது வெளியீடுகளை ஒன்று சேர்த்து ஆவணப்படுத்தி ஒரு வரலாற்றுப் பதிவை ஏற்படுத்த முடியாத நிலமையும் காணப்படும். நீண்ட கால நோக்கில் சர்வதேசங்களிலும் பரந்து வாழும் தமிழர்களின் வெளியீடுகளை ஓரிடப்படுத்தி சேகரிக்கவும் இத்தகைய ஒரு அமைப்பு அவசியமாகும்.

தமிழியல் நூல் வெளியீட்டுத் தொடர்பகம் ஒன்றினை தமிழர் செறிந்து வாழும் நாடுகளில் அமைத்துச் செயற்படுத்துவதன் மூலம் மேற்குறிப்பிட்ட தேவைகளுக்கான தீர்வை ஏற்படுத்தலாம். தொடர்பகங்கள் முதலில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு, பின்னர் தேசிய மட்டத்தில் இணைந்து தம் நடவடிக்கைகளை விரிவுபடுத்தலாம். இதுவே பின்னர் வளர்ச்சியுற்று நாடுகளுக்கு இடையே தம் தமிழியல் வெளியீட்டுத் தொடர்புகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமையலாம்.

## தமிழியல் வெளியீட்டுத் தொடர்பகத்தின் அமைப்பு

தொடர்பகம் பின்வரும் செயற்பாடுகளை முன் எடுத்துச் செல்லக் கூடியதாக அமைய வேண்டும்.

1. தமிழியல் வெளியீடுகளின் காட்சியறை
2. தமிழியல் வெளியீடுகளின் விற்பனை நிலையம்
3. சர்வதேச தமிழியல் நூற்பட்டியல் வெளியீடு
4. விரிவாக்க சேவைகள்
5. சர்வதேச வாசகர் வட்டத்தின் நிர்வாகச் செயலகம்

### 1. தமிழியல் வெளியீடுகளின் காட்சியறை

இது தொடர்பகத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் கட்டிடத்தின் ஓர் பகுதியில் இயங்கும். இங்கு தமிழியல் தொடர்பான சர்வதேச தமிழ், ஆங்கில வெளியீடுகளில் ஒவ்வொரு பிரதிகள் காட்சிக்கு வைக்கப்படலாம். தற்போது விற்பனைக்கு உள்ள நூல்கள் வேறாகவும், விற்பனைக்குக் கிடைக்காத அரிய நூல்கள் வேறாகவும் வைக்கப்படுதல் நன்று. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் வெளியீடுகளின் பிரதிகளை வாசகர் கொள்வனவு செய்ய உதவும் பணியினை தொடர்பகத்தின் விற்பனைப்பிரிவு ஒழுங்கு செய்யலாம்.

### 2. தமிழியல் வெளியீடுகளின் விற்பனை நிலையம்

இங்கு தமிழியல் வெளியீடுகள் விற்பனைக்கு வைக்கப்படலாம். இப்பிரிவின் மூலம் வெளியீடுகளின் விற்பனை மூன்று வகையாக மேற்கொள்ளப்படலாம்.

1. வெளியீடுகளை வாசகர்களுக்கு நேரடியாகவும் உதிரியாகவும் சில்லறை விற்பனையில் ஈடுபடுதல்.
2. நிறுவனங்கள், விற்பனையாளர்களுடன் தொடர்பு கொண்டு மொத்த விற்பனையில் ஈடுபடல்.
3. வாசகர் வட்டங்களின் அங்கத்தவர்களுக்கு சந்தா முறையில் தபால் மூலம் அனுப்பி விற்பனை செய்தல்.

### 3. சர்வதேச தமிழியல் நூற்பட்டியல் வெளியீடு

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வெளியிடப்படும் தமிழ் நூல்களை பதிவு செய்யும் வகையில் தேசிய நூற்பட்டியல்கள் பருவ வெளியீடுகளாக அந்நாட்டுத் தேசிய நூலகங்களினால் வெளியிடப்படுகின்ற போதும் அவை முழுமையான வெளியீடுகளின் விபரங்களையும் தாங்கி வருவதில்லை. உரிய காலத்தில் வெளியிடப்படாது காலம் கடந்த வெளியீடுகளாகவே இந்நூல் பட்டியல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. மேலும் ஐரோப்பிய நாடுகளில் வெளியாகும் நூல்களின் விபரம் அந்நாட்டு நூற்பட்டியலில் காண முடியாது. சர்வதேச தமிழியல் வெளியீடுகளுக்கான ஒரு நூற்பட்டியலின் அவசியம் காலத்துக்குக் காலம் வலியுறுத்தப்பட்டு வந்த போதிலும் அவை செயலுருப் பெற்றதாக அறிய முடியவில்லை. சர்வதேச தமிழியல் வெளியீடுகளின் சந்தைப்படுத்தலுக்கு இத்தகைய நூற்பட்டியல் அவசியமானது.

வாசகர்கள் தமக்கு உபயோகமான நூலை அது எந்நாட்டில் வெளியிடப்பட்ட போதிலும் வெளியீட்டாளருடன் தொடர்பு கொண்டு கொள்வனவு செய்ய ஏதுவான வகையில் நூலின் பௌதீக அம்சங்களுடன் அவற்றின் விலை விபரம், உள்ளடக்கம், நூல் பற்றிய சுருக்கக்குறிப்பு ஆகியன சகிதம் பாட வாரியாகத் தரம் பிரித்து பருவ வெளியீடாக வெளியிட தொடர்பகம் முயலலாம்.

ஆரம்பத்தில் தொடர்பகத்தில் சேகரிக்கப்படும் வெளியீடுகளை பட்டியல்படுத்தி அதையே நூற்பட்டியலாக வெளியிடலாம். இந்நூற்பட்டியலுடன் தொடர்பகத்தின் செய்திகளையும் உத்தேச வெளியீடுகள் பற்றிய செய்திகள், வெளியீட்டு விழா, நூல் அறிமுகவிழா மற்றும் நூல் விமர்சனக் கட்டுரைகள், எழுத்தாளர்களின் அறிமுகக் குறிப்புகள்

www.tamilarangam.net



போன்ற கட்டுரைகளைத் தாங்கித் தொடர்பகத்தின் அதிகார பூர்வ வெளியீடாக மலரலாம்.

**4. விரிவாக்க சேவைகள்**

நூல் விற்பனை அதிகரிப்பு, நூல் வெளியீடு தொடர்பான தகவல் பரிமாற்றம் ஆகிய இரு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு விரிவாக்க சேவைகளை பிரதேச ரீதியாக ஒழுங்கு செய்யலாம்.

1. தமிழியல் வெளியீடுகளின் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.
2. நூல் விமர்சனக் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்தல்.
3. நூல் விற்பனைச் சந்தைகளை கோவில்களிலும் பாடசாலைகளிலும் மற்றும் தமிழர் விழாக்களிலும் ஒழுங்கு செய்தல்.
4. சமூக அபிவிருத்தி நிலையங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடன் இணைந்து நூலக உருவாக்கங்களுக்கு வழிகோலுதல்.

**5. சர்வதேச வாசகர் வட்டத்தின் நிர்வாகச் செயலகம்**

சர்வதேச தமிழர் அமைப்புக்கள், எழுத்தாளர் ஒன்றியங்கள் போன்றவற்றின் ஒத்துழைப்புடன் சர்வதேச வாசகர் வட்டங்களை உருவாக்கி அவர்களுக்கு தமிழியல் நூல் வெளியீடுகள் பற்றிய தகவல்களை வழங்கி தேவையான வெளியீடுகளை விற்பனை செய்ய தொடர்பகத்தின் விற்பனைப்பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கலாம்.

வாசகர்களின் முகவரிகளைத் தொகுத்து வைத்து அவர்களது விருப்பத்திற்குரிய வெளியீடுகள் சந்தைக்கு வரும் போது அவை பற்றிய தகவலை வாசகர்களுக்கு வழங்கி அவர்களுக்கு உரிய நூலை பெற்றுக் கொள்ள வழிவகுக்கும் அதே வேளை நூல் விற்பனையையும் ஊக்குவிக்கலாம்.

முன்னர் குறிப்பிட்ட விரிவாக்க சேவைகளை மேற்கொள்வதற்கு இவ்வாசகர் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெறுவதுடன் அவர்களை சந்தாதாரராக்கி தொடர்ச்சியான நூல் சந்தைப்படுத்தலுக்கு வழிகோலலாம்.

## நிதிவசதி

தொடர்பகம் தனி ஒரு தாபனமாகச் செயற்பட கணிசமான நிதி வளம் அத்தியாவசியம் ஆகும். ஆரம்பகட்ட நடவடிக்கையாக இந்த தொடர்பக வேலைத் திட்டத்தை சிறிய அளவில் தமிழர் நலன்புரி அமைப்பொன்று முன்நின்று பொறுப்பேற்று நடத்தலாம். இதற்கான செலவின் ஒரு பகுதியை தாய்ச்சங்கத்தின் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். இத்திட்டத்தின் முக்கிய நோக்கு தமிழியல் வெளியீட்டாளர்களின் வெளியீடுகளை நிறுவனரீதியில் சந்தைப்படுத்துதல் ஆகும். அதனால் பெரும்பான்மையான வெளியீட்டாளர்களின் ஆதரவை இந்த திட்டத்திற்காகப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளது. அவர்களது வெளியீடுகளை விற்பனை செய்வதற்காக வர்த்தகக் கழிவு என்ற வகையில் கணிசமான தொகையை வருவாயாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சர்வதேச நூற்பட்டியல் தயாரித்து வெளியிடும் போது அதற்கு வர்த்தக விளம்பரம் தந்து உதவும் படி தமிழ் வர்த்தகர்களை நாடலாம். அவ்வருவாயின் உதவியுடன் நூற்பட்டியலை அச்சிடலாம். நூற்பட்டியலை ஆரம்ப காலத்தில் இலவசமாக விநியோகம் செய்ய நேரிட்டாலும் காலப்போக்கில் அதனை சந்தாதாரர்களுக்கு விற்பனை செய்து அதன்மூலம் கணிசமான வருவாய் பெற முடியும்.

## முடிவுரை

தமிழியல் தொடர்பகம் ஒரு பரிசோதனை முயற்சியாகும். ஈழத்துத் தமிழ் நூல் வெளியீட்டாளர்களில் பெரும்பான்மையானோர் தனி மனித நிறுவனங்களாகவே நின்று செயற்படுகின்றனர். இந்நிலையில் ஆசிரிய வெளியீட்டாளர்களே தமிழியல் வெளியீட்டுத் துறையின் பெருமிடத்தை ஆக்கிரமித்து உள்ளனர். போதிய விற்பனை வாய்ப்பின்றியும், வெளியீடு மற்றும் விநியோக முறைகளில் போதிய அனுபவம் இன்மையாலும் தமது பிரதிகளை மட்டுப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளனர்.

நிறுவன ரீதியாகத் தொடர்பகம் செயற்படுமிடத்து ஆசிரிய வெளியீட்டாளர்களின் விநியோகப் பொறுப்பினைக் கணிசமான அளவில் ஏற்றுக் கொள்ளமுடியும்.

குறிப்பு :


தேசத்திற்கு வெளியீட்டாளர்கள் தம் வெளியீடுகளை அனுப்பி வைத்தால், அவை தரமானதாக இருந்தால் அவற்றை தேசத்தில் அறிமுகப்படுத்துவோம். மேலும் எமது எழுத்தாளர்கள் அதனை ஆய்வு செய்யவும் தயாராக உள்ளனர். நூல்களை தேசத்தின் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

www.tamilarangam.net



# அபிவிருத்தியும் சூழல் பாதுகாப்பும்

வாசிம் அக்பர்



இன்று உலக நாடுகள் எல்லாம் அபிவிருத்திப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இங்கே அபிவிருத்தி என்பது பொருளாதாரத்துடன் சமூகரீதியானகல்வி, சுகாதாரம் போன்ற பல காரணிகளின் சேர்க்கையாகவே உள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தமது வளர்ச்சியைப் பாரிய அளவில் துரிதமாக முன்னேற்ற முயலும் போது சூழல் சமநிலை தொடர்பான பிரச்சனைகளும் எழுகின்றன.


இவ்வாறாக உலக நாடுகளின் அபிவிருத்திப் போக்குகள் சூழலை மாசடையச் செய்யும் துக்ககரமான நிலைமைக்கு இட்டுச் செல்ல எத்தணிக்கும் இவ்வேளையில் சூழல் பாதுகாப்பு என்ற எண்ணக்கரு அவசியமாக நோக்கப்பட வேண்டி உள்ளது.

புவி இயற்கையின் எழில் கோலமாக இருந்த நிலை மாறி தொழிற்சாலைக் கழிவுகள், அணுக்கதிர் வீச்சுக்கள், இயற்கை அழிவுகளால் சூழல் மாசடைந்து நோயுற்ற உலகமாகக் காணப்படுகின்றது. இந்நிலையைப் போக்க ஒரு புதிய அரசியல் நோக்கு ஐரோப்பாவில் தோன்றி ஏனைய நாடுகளிலும் பரவி வருகின்றது. அதுதான் இன்று எல்லோராலும் அதிகமாகப் பேசப்படும் சுற்றாடல் சூழல் பாதுகாப்பு ஆகும்.

பூமி இன்று; விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், நாகரீக வளர்ச்சி, சனத்தொகைப் பெருக்கம், அணுகுண்டுப் பரிசோதனைகள், நச்சுவாயுக்கழிவுகள், விபத்துக்கள் காரணமாக அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பதுடன்; உயிர் வாழ்வதற்குத் தகுதியற்ற அசுத்த கிரகமாக மாறிக் கொண்டு இருக்கின்றது. இந்நிலையைத் தவிர்க்க பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.



நமது பூமி பற்றிய சிந்தனை, அது பாதுகாக்கப்பட வேண்டும், இல்லாவிட்டால் மனித இனமே அழிந்து விடும் அபாயம் ஏற்படும் என்ற உணர்வு பரவலாக ஏற்பட்டு உள்ளது. ஐரோப்பாவில் Green Peace இயக்கம் இன்று ஒரு



அரசியல் இயக்கமாக வளர்ந்து வருவது சூழல் பாதுகாப்பிற்கான அறை கூவலாக உள்ளதுடன் இது உலகளாவியரீதியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி உள்ளது.

இவற்றை விட இன்று அமெரிக்காவும் "Green Peace" இயக்கத்தில் ஒரு முக்கிய அங்கம் வகிக்கின்றது. அமெரிக்காவின் பங்களிப்பானது சூழல் பாதுகாப்பிற்கு "green Peace" இன் முக்கியத்துவம் மேலும் இன்றியமையாதது என்பதை தெட்டத் தெளிவாக விளக்குகின்றது.

துரிதப் பொருளாதார அபிவிருத்தி நோக்கி கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் நாடுகளே முன்னணியில் தொழிற்சாலைகளை பயன்படுத்துகின்றன. இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் தமது கைத்தொழில் துறைகளை சூழல் பாதுகாப்புப் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாமல் வளர்த்து வருகின்றன. இதனால் தொழிற்சாலைக் கழிவுகள் பெருமளவில் ஆறுகள், கடல்களுடனும், வளிமண்டலத்துடனும் கலக்கின்றன. இதன் விளைவாக இன்று மேற்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள அமிலமழை, ஓசோன் படைகள் அகன்றமை, கால நிலையில் பாரிய மாற்றங்கள் போன்ற தீய விளைவுகள் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயத்தை ஏற்படுத்தி உள்ளது.

புவியின் மேற்பரப்பின் சராசரி வெப்பநிலை 0.5 - 0.6 டிகிரியாக அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் காபனீரொக்சைட்டு($CO_2$) 0.4%



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆலும், மிதேன்($CH_4$) 0.1% ஆலும், நைதரசன் மொனோ ஒக்சைட்டு(NO) 0.2% ஆலும், அதிகரிப்பதாலேயே வெப்ப நிலை வளிமண்டலத்தில் கூடுகின்றது. இவ்வாறான வாயுக்களின் அதிகரிப்பிற்கு செயற்கை எரிபொருட்களும் கைத்தொழில் சாலைகளின் அபரிமிதமான கழிவுகளுமே காரணங்களாகின்றன.



இதனால் மாசுறுமா சூழல் ?

மனிதனது செயற்பாடுகளினாலும், தூண்டுதலின் காரணமாகவும் இவ்வாறு வெப்பநிலை அதிகரிக்கின்றது. இதைத் தடுக்க தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஒவ்வொரு பத்து ஆண்டும் 0.5 டிகிரி என்ற கணக்கில் தொடர்ந்து உலகின் வெப்பநிலை உயர்ந்து வருகின்றது. இந்த அளவு மிகச் சிறிதாகத் தோன்றினாலும் கூட ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் பாலைவனப் பிரதேசங்கள் உருவாகும் வேகத்தை இது மேலும் அதிகரிக்கின்றது.



ஏற்கனவே ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 60 இலட்சம் நிலங்கள் பாலைவனங்கள் ஆகின்றன என்று விஞ்ஞானிகளும் புவியியல் ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளார்கள். வ.அமெரிக்காவிலும் சைபீரியாவிலும் பருவ நிலையில் தொடர்ச்சியான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

வெப்பநிலையின் அதிகரிப்பால் உலகளாவிய மற்றுமொரு விளைவாக உலக மாகடல்களின் நீர் மட்டங்கள் உயர்ந்து வருதல் அதிகரித்துள்ளது. கடந்த நூற்றாண்டில் மாகடல்களின் நீர்மட்டம் 10-12cm வரை உயர்ந்துள்ளது. தற்போது இது பத்து மடங்கு வேகமடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அடுத்து ஓசோன்படை நலிவடைவதால், புவியின் மேற்பரப்பை வந்தடையும் சூரியனின் புறவூதாக்கதிர்கள் மனிதர்களிடையே தோல் புற்று நோயையும், தாவர உயிரினங்களையும் கடுமையாகப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. சூரியனின் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக் கதிர்களைப் புவி மேற்பரப்பில் பரவாமல் தடுக்கும் படையாக ஓசோன் படையுள்ளது. இந்தப் படையில் துளைகள் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். ஐரோப்பா, அமெரிக்கா, அந்தாட்டிக்கா பகுதிகளில் இத்துளைகள் பெரிதாக உள்ளன.

நுணுக்குக்காட்டி மூலமும் பரிசோதனைக் குழாய்கள் மூலமும் சடப்பொருள் மற்றும் உயிரினங்களை ஆராயலாம். ஆனால் மனிதனை அவ்வாறு ஆராய முடியாது. வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியாத நிலையில் மனிதன் சூழலுக்குப் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றான். இதில் ஓசோன் படையில் துளைகள் ஏற்பட்டதும் ஒன்றாகும். பூமியின் கவசமான ஓசோன் படைகளின் அழிவிற்கு குளிர்சாதனப் பெட்டிகள், மற்றும் குளோரோ

இரசாயன தாக்கம்

## ஓசோனில் நிகழும் தாக்கங்கள்

படி 1) $O_2 + hv \longrightarrow O + O$

படி 2) $O + O_2 \longrightarrow O_3 + heat$

படி 3) $O_3 + hv \longrightarrow O_2 + O + heat$

படி 1)ல் புற ஊதாக் கதிர்களின் சக்தியின் மூலம் உடையும் O - O பிணைப்பு. படி 2)ல் $O_3$ (ஓசோன்) உருவாக்கத்தை ஏற்படுத்துகிறது. புறஊதாக் கதிர்களின் அளவு அதிகரிக்கும் போது தாக்கம் மறுதிசையில் நிகழும். இதன் மூலம் ஓசோன் பிளவுபடும்.

படி 1) $CF2Cl2 + hv \longrightarrow CF2Cl. + Cl.$

படி 2) $Cl. + O3 \longrightarrow ClO. + O2$

படி 3) $ClO. + O \longrightarrow O2 + Cl.$

படி 1)ல் புறஊதாக் கதிர்களின் தாக்கத்தால் டைfளோரோடைகுளோரோமிதேனில் உள்ள பிணைப்பு C - Cl உடைக்கப்படும். இதனால் உருவாகும் Cl. படி 2)ல் $O_3$ உடன் தாக்கமடைந்து $O_3$ மூலக் கூறுகளை உடைக்கும் இதனால் ஓசோன் படலத்தில் துவாரங்கள் ஏற்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




புளோரோ காபன்களின்(CFC) பெருமளவு பயன்படுத்துகையே முக்கிய காரணமாகும். இவற்றிலிருந்து வெளிவரும் குளோரின் வாயு, நைதரசன் ஒக்சைட்டு போன்ற மூலக்கூறுகள் ஓசோன் மூலக்கூறுகளை ஒளி இரசாயன வினை எதிர் செயல்முறையில் அழித்து விடுகின்றன. கடந்த 20 ஆண்டுகளாக புவியின் வடவரைக் கோளத்தின் மேலுள்ள வளிமண்டலத்தில் ஓசோன் வாயு உள்ளடக்கம் சராசரியாக மூன்று சதவீதம் குறைந்துள்ளது. இவ் ஓசோன் படை ஒரு சதவீதம் குறைந்தாலும் தோல் புற்றுநோய்கள் 5 - 7% அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.



$SO_2$ சல்பர்டை ஒக்சைட்டு, NO நைதரசன்ஒக்சைட்டு ஆகியன தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறி வளிமண்டலத்துடன் கலக்கின்றன. இதன் காரணமாக மழையிலும், பனியிலும் அமிலத் தன்மை கடுமையாக அதிகரிக்கின்றது. இது அமிலமழை எனப்படுகின்றது. இன்று இந்த அமில மழை சூழலைப் பாதிக்கும் ஒரு பெரும் பிரச்சனையாக உள்ளது. இதனால் பயிர்கள், காய்கறி வகைகள் அழிகின்றன. தூய்மையான நீர்த்தேக்கங்கள் அசுத்தமாவதுடன் உயிர் வாழும் அங்கிகளும் அழிகின்றன.

எனவே பொருளாதார அபிவிருத்தி என்ற நோக்கில் பாரிய தொழிற்சாலைக் கட்டடங்களை இயற்கைச் சூழலை அழித்துக் கட்டி, பல கோடி இலாபங்கள் கிடைத்தாலும் தொழிற்சாலைக் கழிவுகள் சூழலை மாசாக்கி மனிதனும் பெரும்பாலான உயிரினங்க



சுவிடனில் உள்ள 85000 குளங்களில் 20000 அமில மழையால் பாதிக்கப்பட்டு உள்ளன. அதில் 15000 வளிமண்டல மாசுக்களால் அமிலத்தன்மை பெற்றுள்ளன. 4500 குளங்களில் மீனினங்கள் அழிந்துவிட்டன. இன்னும் 1800 குளங்கள் உயிரினங்கள் வாழும் சூழல் அற்ற அளவிற்கு அமிலத் தன்மை பெற்றுள்ளன. அங்குள்ள குளங்களின் அமிலத்தை நடுநிலைப்படுத்த 4000 குளங்களிற்கு சுண்ணாம்பு தூவப்பட்டது. இன்னமும் 15000 குளங்கள் சுண்ணாம்பு தூவ வேண்டிய நிலையில் உள்ளன. ஆண்டிற்கு £25 மில்லியனை சுண்ணாம்பு தூவ செலவிடுகிறது சுவீடன். (1985)

பிரித்தானியாவில் மோட்டார் வாகனங்களே வளிமண்டல மாசடைதலின் பிரதான காரணமாக உள்ளது. இவை 40% $NO_x$யும், 85% COயும், 28% Hydro carbonsயும் வளிமண்டலத்தில் விடுகின்றன. (1986)

ளும் அழிய ஏதுவாகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் பல கோடி தொன் தொழிற்சாலைக் கழிவுப் பொருட்கள் கடலில் கொட்டப்படுகின்றன. இவை மீன் உண்ணும் உணவுகளுடன் கலக்கின்றன. பால்டிக் கடலில் உள்ள "காட்(Cod)" வகை மீனில் ஒரு கிலோ கிராமிற்கு 800 மில்லி கிராம் அளவில் பாதரசம் சேர்ந்து விடுகின்றது. இத்தகைய 5 அல்லது 8 மீன்களை உணவாக உட்கொள்ளும் ஒருவரின் உடலில் ஒரு வெப்பமானியில் இருக்கும் அளவிற்கு பாதரசம்(Hg) சேர்ந்து விடுகின்றது.

1988ம் ஆண்டு வடகடலில் பல ஆயிரம் கடல்நாய்கள் (Seals) என்று அழைக்கப்படும் கடல்வாழ் விலங்குகள் மாண்டன. இதற்கு ஒரு வகை பிளேக்கு நோயும் தொழிற்சாலைக் கழிவுகள் கடலை அடைந்ததுமே காரணங்களாகும். இவ்வாறு இறந்த கடல் நாய்களின் உடல்களை ஆராய்ந்த போது 150 நச்சுப் பொருள் சேர்க்கைகள் இருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளார்கள்.

இவ்வகையில் வட கடலில் ஒரு விசித்திரமான நிகழ்வு ஒன்று நடைபெற்றது. பொன்னிற ஒரு கலமுடைய கடல்ப் பாசி வகை முன் எப்போதும் கண்டிராத வகையில் பல்கிப் பெருகியது. தெற்கு ஸ்கண்டினேவியாவில் 10km நீளத்திற்கும் 35km ஆழம் வரையிலும் பரவியிருந்த இக்கடல் பாசி மண்டலம் ஒரு நாளில் 25km வேகத்தில் வளரத் தொடங்கியது.

மேலும் இது ஒக்சிசனை உறிஞ்சி வருவதுடன் கடல் வாழ் உயிரினங்களையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூழல்

அழித்து விடுகின்றது. முதுகெலும்பில்லாத உயிரினங்கள், சிறிய வகை மீனினங்கள் ஆகியவற்றைப் பெரும்பாலும் அழிக்கின்றது. இவ்வகைப் பாசிகளின் திடீர் அசாதாரண வளர்ச்சிக்கு கடலில் கொட்டிய இரசாயணக் கழிவுகளே காரணம் என்று நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

நச்சுப் பொருட்களைக் கடலுடன் கலப்பதுடன் ஒரு இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்லுவதும் உயிரின வாழ்க்கை சூழல் சமநிலைக்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே இனிவரும் காலத்தில் தொழிற்சாலைக் கழிவுகளை குறைப்பதுடன், கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்தக் கூடிய உபயோகப் பொருட்களாக மாற்றுவது பயனளிக்கக் கூடியதாக இருக்கும். இதற்குப் புதிய தொழில்நுட்ப முறைகள் பிரயோகிக்க வேண்டிய தேவை இன்று எழுந்து உள்ளது.




நமது புவியில் பல வகையான உயிரினங்கள் குறைந்து வருவது மற்றும் ஒரு உலகளாவிய பிரச்சனையாகும். உலகில் அன்றாடம் பல்வேறு வகையான விலங்குகள், தாவரங்கள் அழிந்து வருகின்றன. மனிதர்களின் செயற்பாடுகள், அழிப்புக்கள், நாடுகளுக்கு இடையே உயிரினங்களை சட்ட விதிகளை மீறிக் கடத்தல் போன்ற நடவடிக்கைகளால் பல அருமையான உயிரினங்கள் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளன. இதுவும் சூழல் சமநிலையைப் பாதிக்கும் நடவடிக்கையாகும். இன்று பாலைவனங்களின் விரிவாலும், மண்ணரிப்பு மற்றும் பல பிரச்சனைகளாலும் ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் இலட்சக் கணக்கான மக்கள், தமது இருப்பிடங்களில் இயற்கைச் சூழல் சமநிலை அழிந்ததால் வாழ முடியாமல், புதிய சூழலைத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இதே போன்று மாலைதீவும் படிப்படியாக அழிந்து கொண்டு இருக்கின்றது. காலப் போக்கில் இத்தீவு முற்றிலும் அழிந்து போவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இதே போல் யாழ்க்குடா நாடும் அழிவிற்கு உட்பட்டு இருக்கின்றது. கடலின் நீர்மட்டம் ஏறத்தாள 20`-25` மேல் உயர்ந்தால் யாழ்க்குடா நாடு தண்ணீரிலேயே மூடப்பட்டுவிடும். இது உயிரின வாழ்க்கைச் சூழல், அகதிகள் என்ற பரிமாணத்தில் இன்றும் பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.



ஏரல் கடல் பிராந்தியத்தில் நவீன கைத்தொழில் துறை நிலையங்கள் பெருமளவு பொருளாதார அபிவிருத்தி கருதி நிர்மாணிக்கப்பட்டுள்ளன.இதனால் சூழல் சமநிலை குழம்பியுள்ளது. இந்தியாவின் ஆக்ராவில் உள்ள உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் கட்டடம் அருகிலுள்ள தொழிற்சாலைக் கழிவுகளால் மாசாகி வருகின்றது. இவ்வாறு பொருளாதார உறவுகள் உயிரின கலாச்சார வாழ்க்கைச் சூழலைப் பாதிக்கும் ஒன்றாக வளர்ந்து வருகின்றது.

விவசாயப் பசுந்தரை, இயற்கைக் காடுகள், சுரங்கங்கள் ஆகியவற்றில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் விவசாய நடவடிக்கைகளால் சூழல் மதிப்பிழக்கும் ஆபத்துக்கள் மேலும் உருவாகியுள்ளது. காட்டு நிலங்கள் அழிக்கப்பட்டு, ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தியாக்கும் நிலங்களாக ஆக்கப்பட்டமையால் ஒவ்வொரு வருடமும் 11 மில்லியன் Ha அயனவலயக் காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளைப் பாதுகாத்தல், மீள்காடாக்கல், புதிய காடுகளை வளர்க்கும் திட்டங்கள் குறைந்த அளவிலேயே செயற்படுத்தப்படுகின்றன.



சூழலை பாதிக்காத எதிர்காலம்

பொருளாதாரத் திட்டங்கள் பல நாடுகளில் இலாப நோக்கை மட்டும் பேணும் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால், சூழல் பாதுகாப்புத் திட்டங்கள் புறக்கணிக்கப்படும் நிலையிலுள்ளது. இயற்கைச் சமநிலையைப் பேணிப் பொருளாதாரம் ஈட்டும் கொள்கைகள் இன்று அவசியம் தேவைப்படுகின்றது. சூழல் பாதுகாப்புப் பற்றிய ஒரு சமூக ஒருங்கிணைப்பு உலகளாவிய ரீதியில் உருவாக்குவது மிக அவசியமாகும்.

அபிவிருத்தி பற்றிய கொள்கைகளும் சூழல் பாதுகாப்புப் பற்றிய வாதங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன. இவ் அபிவிருத்தியும் சுழல் பாதுகாப்பும் இன்று ஒன்றை ஒன்று மீளவலியுறுத்தி நிற்கின்றன. எனவே இயற்கைச் சமநிலையைப் பேணி பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டு புதிய வளர்ச்சிப் பாதையை நிர்ணயிக்க நாம் உழைப்போமாக.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாழ்வும்

தமிழர் தாயகம்

# சூழலும்

தொடரும் யுத்தம் காரணமாக இலங்கையர் குறிப்பாக தமிழர் சுற்றாடல் பாதுகாப்புப் பற்றி அக்கறை அற்றவர்களாக உள்ளனர். நீண்டகால போக்கில் இது எதிர்மைமறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

**மண்ணரிப்பு** - இலங்கை ஓர் தீவாக இருப்பதால், மண்ணரிப்பு வேகமாக நிகழ்கிறது. மேலும் தமிழர் தாயகப் பகுதியில் ஏறத்தாழ 2/3 கடல் நீரினால் சூழப்பட்டுள்ளது. மண்ணரிப்பு தடுக்கப்படாதவிடத்து தீவின் நிலப் பகுதி கடலினுள் செல்லும் அபாயம் உண்டு. அத்தோடு யாழ் குடாநாட்டில் தொடர்ச்சியாக சிமெந்து உற்பத்தி செய்திருந்தால் குடாநாட்டின் கனியவளமான சுண்ணாம்பு அகழ்ந்தெடுப்பால் இன்றைய தமிழர்களின் வாழ்க்கை காலத்திலேயே, குடா நாடு நீரில் மூழ்குவதை அவதானித்திருப்பர்.

**வன அழிப்பு** - சூழல் பாதுகாப்பு எனும் போது வனவளம் முக்கியமானது. தெரிந்தோ தெரியாமலோ இவ் வனங்கள் அழிக்கப்படுவது காலநிலையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும். மேலும் மண்ணரிப்பின் முக்கிய ஊக்கி வன அழிப்பாகும்.

இலங்கைத் தீவின் தென் பகுதி அயனவலய காடுகளை

வாசிம் கொண்டிருப்பதால் அங்கு பருவ மழை ஒழுங்காக உள்ளது. அதாவது ஆண்டு முழுவதும் சீரான மழை வீழ்ச்சி காணப்படுகிறது. ஆனால் வறள் வலயப் பற்றைக் காடுகளையே உடைய வடபகுதி ஆண்டில் சில மாத மழையுடன் வளமின்றி காணப்படுகிறது. இப்பகுதிகளில் உள்ள



[illegible]

காடுகளிலும் விறகிற்கு விவசாயத்திற்கு குடியிருப்பிற்கு என காடுகள் அழிக்கப்படுகின்றன. இதனால் வடபகுதியின் சில மாத மழைவீழ்ச்சியும் பாதிக்கப்படும் அபாயம் உண்டு.

தொடரும் யுத்தத்தின் இன்றைய களமாக வன்னி உள்ளது. அயன வலய காடுகளின் தொடர்ச்சி வன்னிவரை உண்டு. இக் களத்தில் தொடரும் யுத்தம் இக் காடுகளின் இருத்தலுக்கு எச்சரிக்கையாகவே இருக்கும்.

குறிப்பு: தொழிற்சாலைகள் வாகனங்கள் இப்போது தமிழர் தாயகப் பகுதிகளில் குறிப்பிடப்படும்படியாக இல்லையாதலால் அவற்றினால் ஏற்படும் வளிமண்டல மாசடைதல் பெருமளவில் இல்லை.

**விவசாய நிலங்கள் கைவிடப்படல்** - தொடர்ச்சியான உள் நாட்டு யுத்தம் காரணமாக பயிர்ச் செய்கை நிலங்கள் கைவிடப்பட்டால் அந்நிலங்கள் வளமிழந்து போகும் அபாயம் உண்டு. குறிப்பாக இராணுவ தளங்களை சுற்றியுள்ள காணிகளே இந் நிலைக்கு உள்ளாகியுள்ளன. உதாரணமாக பலாலி விமானத்தளத்தை சுற்றியுள்ள விவசாய காணிகள்.

**மனிதவளம்** - இயற்கையை தனது தேவைக்கேற்ப கையாண்ட மனிதன், இன்று தனது செயற்பாடுகளே தன் இருத்தலை கேள்விக்குள்ளாகியிருப்பதை உணர்ந்துள்ளான்.

தமிழ் சமூகம் மனிதவளம் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளது, என்பது பற்றி சரியான கணிப்பு இருப்பதாக தெரியவில்லை.

www.tamilarangam.net



தொடரும் யுத்தத்தால் தமிழ் மக்களுடைய வாழ்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இது அவர்களிடையே உளவியல் பாதிப்புளை ஏற்படுத்தியுள்ளது. எதிர் காலம் பற்றிய நம்பிக்கையீனங்களுடன் வாழும் இம் மக்கள் தம் குறைந்தபட்சச திறன்களையே வெளிக் கொணர்கின்றனர். இம் மனிதவளங்களின் முழுப் பயன்பாட்டையும் பெறும் சூழல் தமிழ் பகுதிகளில் இல்லை. அப்படி அவ்வளங்கள் பயன்படுத்தப்படும் போது அவை சரியான வழியில் பயன்படுத்தப்படுவதில்லை. இவ்வாறன வாழ்க்கை தொடருமானால் இம் மக்களின் மனிதவளம் வளமற்றுப் போகும்.

ஈழத் தமிழ் மக்கள், இன்றய இன ஒடுக்கு முறைக்கு எதிராக போராடும் அதேவேளை இரண்டாம் பட்ச்சமாக உள்ள பிரச்சனைகளிலும் கவனம் எடுக்க வேண்டும். அப்படி எடுக்காதவிடத்து, முதலாம் நிலை பிரச்சனை தீர்க்கப்படும் இடத்து இரண்டாம் நிலையிலிருந்த பிரச்சனைகள் தீர்க்கப்பட முடியாத வளர்ந்துவிடும்.

ஆகவே ஓர் பிரச்சனையை காரணம் காட்டி ஏயையவற்றை தட்டிக் கழிப்பது ஓர் சமூகத்தின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல. வளர்ச்சிக்கு தடையாக உள்ள எல்லாவற்றையும் சமாந்தரமாக களைய முற்படவேண்டும்.

# இது என் தேசம்

இது என் தேசம்
சூரியனைக் காணாத தேசம்
உறக்கத்தை இழந்த தேசம்
பிறப்பை விட இறப்புக்கள் அதிகமாகும் தேசம்

இது என் தேசம்
காற்று துப்பாக்கி சன்னமாய் வீசும்
மிதி வெடிகள் விதைகளாகும்
மனித உடல்கள் பசளைகளாகும்
குண்டுகள் மழையாய் பெய்யும்
பட்டினி விளைச்சலாகும்

இது என் தேசம்
நோய்கள் மருந்தின்றி வாடும்
மனித நேயம் குற்றுயிராய் கிடக்கும்
பற்றைகள் கூட பிணங்களை பிரசவிக்கும்

இது என் தேசம்
இருப்புக்கும் உயிர் வாழ்தலுக்கும்
உரிமை மறுக்கப்பட்டாலும்
நிமிர்ந்து வாழும் மனிதர்கள் தேசம்
இது என் தேசம்

யாழ்பாடி காந்தன்
இலண்டன்

## உள் ஆட்சி தேர்தல் முடிவுகள்

யாழ்-மாவட்ட வாக்காளரில(5,71,486) கட்சிகள் பெற்ற வாக்குகள் — வாக்களித்தோர் 1,05,413


| கட்சி | இடம் | கைப்பற்றிய இடங்கள் | வாக்கு | வீதம் |
|---|---|---|---|---|
| ஈழ மக்கள் ஜனநாயக கட்சி | 10 | வலிகாமம்(வ) கிழக்கு, வலிதென் மேற்கு, வ.தெற்கு, வ.மேற்கு, நெடுந்தீவு, ஊர்காவற்துறை, வேலணை, வடமராட்சி தென் மேற்கு, நல்லூர் | 38,720 | 7% |
| தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் | 03 | பருத்தித்துறை, சாவகச்ரேி, பச்சிலைப் பள்ளி | 25,576 | 4.5% |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 02 | யாழ் நகர், வலிகாமம் வடக்கு | 6,325 | 1% |
| தமிழீழ விடுதலை இயக்கம் | 01 | வல்வெட்டித்துறை | 7,036 | 1% |
| ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி | 00 | | 13,146 | 2% |
| சுயேட்சை | 00 | | 980 | 0.1% |

www.tamilarangam.net



# ஆன்மீகம்

## சாது செல்லப்பா உடனான நேர்முகம்



1992 டிசம்பர் 6ல் பாபர் மசுதியை இடிக்க கங்கணம் கட்டி நிற்கும் இந்து மத அடிப்படை வாதிகள்.


**□கோயில், Church, மசூதி செல்வது, சமய அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பது போன்றவற்றால் எல்லாம் ஒருவன் ஆன்மீகவாதியாக மாற முடியாது.**

**□தன்னை உணர்தலும், தனக்கும் தனக்குச் சூழவற்றுக்கும் இடையிலான தொடர்பை உணர்தலும் ஆன்மீகம் ஆகும்.**

ஆன்மீகம் நாம் அடிக்கடி கேட்கும் வார்த்தை தான். எம்மில் பலருக்கு ஆன்மீகம் என்றால் என்னவென்றே புரிவதில்லை. ஆனால் அடிக்கடி அந்த வார்த்தையை பாவிக்கின்றோம். எமக்கு ஏற்றவாறு விளக்கம் கொடுக்கின்றோம். ஆன்மீகம் என்பதை எப்போதும் மதத்துடன் தொடர்புபடுத்தியே பார்க்கின்றோம். ஆன்மீகம் என்றால் என்ன? ஆன்மீகத்திற்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பு, ஆன்மீகம் முற்போக்கானதா அல்லது பிற்போக்கானதா, இன்றைய விஞ்ஞான உலகிற்கு ஆன்மீகம் அவசியமா என்ற பல கேள்விகள் ஆன்மீகத்தைப் பற்றி சிந்திக்கும் பலருக்கு எழும் கேள்விகள் ஆகும். இதை அறியும் முகமாக சாது செல்லப்பாவுடனான பேட்டியை தருகிறோம்.

**ஆன்மீகம் என்றால் என்ன?**

நாம் எப்போதும் என் கை, என் உடல், என் மனம் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறுகின்றோம், உணர்கின்றோம். எனவே நான் என்றால் அது எனது உடம்பு அல்ல. எனது மனம் அல்ல அதைத் தான் ஆன்மா என்று சொல்கின்றோம். இந்த ஆன்மா பற்றிய அறிவே ஆன்மீகம் ஆகும். இவ் ஆன்மா விழிப்படைந்து சடப்பொருள் உலகிலிருந்து தன்னை உணர்வதற்குரிய வழியே ஆன்மீகம் ஆகும்.




இலங்கை பௌத்த பிக்குகள் பிரிசின் யாப்புச் சீர்திருத்தத்தை ஆதரித்து கொழும்பு நகரசபை முன் அணிவகுத்து இருக்கின்றனர்.

www.tamilarangam.net

## ஆன்மீகம்

கோயில், தேவாலயம், மசூதி செல்வது, சமய அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பது போன்றவற்றால் எல்லாம் ஒருவன் ஆன்மீகவாதியாக மாற முடியாது. தன்னை உணர்தலும், தனக்கும் தனக்குச் சூழவுள்ளவற்றுக்கும் இடையிலான தொடர்பை உணர்தலும் ஆன்மீகம் ஆகும்.



மக்களை நல்வழிப்படுத்தி அன்பை போதிக்க வேண்டிய மதங்கள் அரசியல் லாபத்தில் பங்கு பெற்ற முன் நிற்கின்றன. மதத்தை அரசியல் நலனிற் பயன்படுத்தும் பாரதிய ஜனதா கட்சி, உத்தர பிரதேசத்தில் தம் கட்சி ஆட்சி கலைக்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கிறது.

ளைக் கவிதை வடிவத்திலோ அல்லது கதை வடிவத்திலோ மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் வெளிப்படுத்தினார்கள். பிற்காலத்தில் வந்தவர்கள் அவர்கள் கூறிய ஆன்மீகக் கருத்துக்களை விட்டு விட்டு அவர்களையே பின்பற்றத் தொடங்கினார்கள். அங்கு தான் ஆன்மீகம் என்ற அறிவு மதத்தினுள் மாயையில் அடக்கம் செய்யப்பட்டது. அதன் பிறகு ஆன்மீகம் என்பது மதத்தினூடாகவும் மதத் தலைவர்கள் ஊடாகவும் அறியும் நிலை ஏற்பட்டது.

இன்று உள்ள மதங்கள் எதுவும் ஆன்மீகத்தை அறிவு சார்ந்த நிலையில் பார்க்க விடாமல் வழக்கம், பண்பாடு என்று தொன்றுதொட்டு வந்த பழக்கம் அல்லது வழக்கம் என்று மக்களை இருளில் வைத்திருக்கின்றன. சுருக்கமாகச் சொல்லின் தற்போது உள்ளமதத்திற்கும் ஆன்மீகத்திற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. அதனால் தான் எல்லா மதங்களும் ஆன்மீகம் பற்றிக் கூறினாலும், ஆன்மீகத்தை நோக்கிச் செல்வதாகக் கூறினாலும் மதங்களுக்கு இடையேயான வேறுபாடுகள், முரண்பாடுகள் என்பன அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.



**"வாக்கு காப்போர்"**

எனும் ஆண்களின் மத இயக்கம் குடும்பங்களில் ஆண் மேலாதிக்கத்தை மீள கொண்டுவருவது இறைவனதும் இயற்கையினதும் தேவை என்கின்றனர். இவர்கள் ஆண்டுதோறும் ஓர் பேரணியை நடத்துகின்றனர். 1991ல் பேரணியில் கலந்து கொண்டோர் 4200, 1997ல் கலந்து கொண்டோர் 1100000 (1.1 மில்லியன்.) அவ் ஆண்டில் அவர்கள் சேர்த்த தொகை $87 மில்லியன் ஆகும்.

***மக்கள் மத வழிபாட்டின் மூலம் தான் ஆன்மீகத்தை அடையலாம் என எண்ணுகிறார்கள் ஆன்மீகத்திற்கும் மதத்திற்கும் இடையிலான தொடர்பை சற்று விளக்குவீர்களா?***

ஆரம்ப காலத்தில் ஆன்மீகத்தைப் பற்றிய சிந்தனையுடைய அறிஞர்கள் ஆன்மீக அறிவை வளர்க்கும் முகமாக தம் சிந்தனைகள், எண்ணங்க

***இன்றைய நவீன உலகிற்கு ஆன்மீகம் அவசியமா? எவ் வகையில் அவசியம் என்பதைக் கூறுவீர்களா?***

மனிதனின் விஞ்ஞான வளர்ச்சியோடு மனிதாபிமானத்தையும் ஆன்மீகத்தையும் எடுத்து நோக்கினால் விஞ்ஞானம் (சடப்பொருளியல் - Materialism) வளரவளர மனிதர்களின் மனிதாபிமானமும் ஆன்மீகமும் மங்கிக்கொண்டு போகின்றது. மனிதாபிமானம் இல்லாமல்


**SEVEN PROMISES**

**1**

**.....honoring Jesus Christ through worship, prayer and obedience to god's word in the power of the Holy Spirit.**

www.tamilarangam.net



மனிதன் தன்னிலை இழந்து சடப்பொருளோடு சடப்பொருளாக மாறிக்கொண்டு போகின்றான். இப்படியே போனால் மனிதன் இல்லாமல் போய் விடுவான். **மனிதன் மனிதனாக இருப்பதற்கு மனிதாபிமானமானது அவசியமாகும்.** ஒருவனுக்கு மனிதாபிமானம் இருப்பதற்கு தன்னிலை சார்ந்த அறிவு அவசியமாகும். அது தான் ஆன்மீகம் ஆகும்.


**பல முற்போக்குப் புரட்சிகர சக்திகள், இடதுசாரி சக்திகள் என்பன ஆன்மீகத்தை, சமுதாயத்தைப் பீடித்துள்ள தொற்று நோய் என்றும் இது அழிக்கப்பட வேண்டியது என்றும் கூறுகின்றார்கள். அதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ஆன்மீகம் பிரபஞ்சத்தில் மனிதனின் இருப்பு, அதற்கும் மனிதனுக்கும் இடையிலான தொடர்பு, மனிதன் இறந்த பின்பு அவனின் இருப்பு போன்ற விடயங்களை அறியும் ஓர் அறிவியற் துறையாகும். அத்தோடு மட்டுமல்லாது மானிட வாழ்வின் மேன்மையையும், மனிதத்துவத்தின் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு வழிகாட்டும் ஒரு துறையாகும். ஆனால் அது மதம் என்ற புதைகுழியில் புதைக்கப்பட்டு அதன் உண்மையான தோற்றம் மறைக்கப்படுகின்றது. அதனால் ஆன்மீகத்தை மதத்துக்குள் தான் தேட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

மதத்தின் ஊடாக ஆன்மீகத்தைத் தேடும் போது முதலில் எமக்குத் தெரியவருபவை மதமும் மதத் தலைவர்களும் மதக் கோட்பாடுகளும் தான். இவை எல்லாம் எவ்வளவு தூரம் ஆன்மீகம் சம்பந்தப்பட்டவை என்பது கேள்விக்குரிய விடயமே. எனவே ஆன்மீகம் முற்போக்கானதா அல்லது பிற்போக்கானதா என்பது அது எது சார்ந்து பார்க்கப்படுகின்றதோ அதை வைத்தே தீர்மானிக்கப்படுகின்றது. ஆன்மீகம் என்னும் அறிவியற்துறை எப்போதும் முற்போக்கானது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

**ஆன்மீகம் இவ்வுலகில் அருகிக் கொண்டு வருகின்றது அதைத் தடுக்க என்ன செய்யலாம்?**

மதம் என்ற சிறைச்சாலையில் இருக்கும் ஆன்மீகம் என்ற அறிவை அச்சிறையிலிருந்து வெளிக்கொணர்ந்து தூய அறிவு சார்ந்த நிலையில் ஆன்மீகத்தைப் பார்க்க வேண்டும். ஆன்மீகத்தை அறிவு என்ற அடிப்படையில் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். □□□□□□□□□□



ஓம்

இந்து சமயத்தின் குறியீடு

படைப்பின் முதல் ஒலி என்றும், இதிலிருந்தே உயிர்கள் தோன்றியதாகவும் இந்து சமயம் கூறுகிறது.

**2**

**.....pursuing vital relationships with a few other men, understanding that he needs brothers to help him keep this promises.**

**3**

**.....practicing spiritual, moral, ethical and sexual purity.**

**4**

**.....building strong marriages and families through love, protection and biblical values.**

**5**

**.....supporting his church by honoring and praying for his pastor, and by giving his time and resources.**

**6**

**.....reaching beyond any racial and denominational barriers to demonstrate the power of biblical unity.**

**7**

**.....influencing his world, being obedience to the great commandment and the great commission.**

www.tamilarangam.net

திரை வலம்

# விழிப்புணர்வில் இருந்து அரசியல் வரை

# தமிழ் சினிமா

சினிமாக்கிளி

தமிழ் சினிமா வரலாறு பிறந்த கதை என்னவென்றால், தெருக் கூத்துக்களையும் நாடகங்களையும் நடத்தி வந்த கலைஞர்களை அடக்கி, மக்களின் நேரடி பார்வையை குறைத்து, வளர்ந்த விஞ்ஞானத்தை வைத்துக் கொண்டு, இருட்டறை என்னும் திரையரங்கை உருவாக்கி, மக்களை அதில் அமரச் செய்து, தங்களின் ஜால வித்தையை மெய்மறக்கச் செய்யும் ஒரு கனவுலக கற்பனை நிலையம் உதித்தது.

ஆரம்பத்தில் ஊமைப்படம் (பேசும் படம் அல்ல) என்று ஆரம்பித்து பேசும் படங்களை கொண்டு வந்தார்கள். முதலில் வந்த படங்கள், புராணத்தையும் சரித்திரத்தையும் ஓட்டிச் சென்றது. நடித்த நாயகர்கள், நாயகிகள் சொந்தக் குரலில் பேசி சொந்தக் குரலில் பாடி நடித்து மக்களை பரவசப்படுத்தினார்கள். பாமர மக்கள் என்ற அடைமொழியைக் கொண்ட விவசாயிகள், ஏழைப் பட்டி தொட்டி மக்களை சில பைசாக்களில் மனநிறைவு செய்ய வைத்தனர்.

எத்தனை காலம் தான் புராணங்களையும் சரித்திர நாயகர்களின் கதைகளையும் ஓட்டிச் செல்லுவது என்ற கட்டத்தில் சமூக நலன்களை மேற்காட்டி பல படங்கள் வர ஆரம்பித்தது. ஆரம்பம் ஆரோக்கியமாக தான் இருந்தது.

இதிலிருந்து தான் தமிழக அரசியலுக்கும் சனி தொற்ற ஆரம்பித்தது. சமூக நல விழிப்புணர்ச்சியின் மீது நலம் கொண்டு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் அண்ணா



வசன கர்த்தாவும் இன்றைய தமிழக முதல்வருமான மு.கருணாநிதி.

கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் சினிமா என்னும் சாதனத்தை வைத்து மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது என்பது உண்மை தான்.

அக்காலகட்டத்தில் முன்னுக்கு வர்த்துடித்துக் கொண்டிருந்த நடிகர்கள் எம்.ஜி.ஆர், சிவாஜி போன்றவர்கள், திராவிட இயக்கங்களில் உள்ள தலைவர்களுக்கு நண்பர்களாக விளங்கியதாலும் ஒருவரை ஒருவர் பயன்படுத்திக் கொண்டனர். உதாரணமாக கலைஞர் கருணாநிதி எழுதிய வசனத்தை சிவாஜி பேசினால் மெருகு கூடும். இதைப் போன்ற இலட்சிய நடிகர் என்ற பட்டத்தை பெற்ற எஸ்.எஸ்.ராஜேந்திரன் பேசினாலும் சிறப்பாக அமையும். எம்.ஜி.ஆர் நடித்தால் வீரமாக இருக்கும், என்று மக்கள் ஏற்கும் படி இவர்களின் திரைப்பயணம் வளர ஆரம்பித்தது.

இதன் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நடிகர் சிவாஜி அவர்கள் வெளியேறி காங்கிரஸில் சேர்ந்தார். நடிப்பு நேரம் போக மீதி நேரங்களில் அரசியல் பிரச்சாரம் செய்தார்.



நடிகர் திலகம் சிவாஜி கணேசன். இலங்கையின் 50 ஆண்டு சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார். இவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அழைத்திருந்தார்.

அதுபோல நடிகர் எம்.ஜி.ஆர் அவர்களும் செய்து வந்தார். பின்பு எம்.ஜி.ஆர் முழுநேர அரசியல்வாதியாகி கட்சி ஆரம்பித்து ஆட்சியும் அமைத்தார் என்பது தெரிந்ததே.

இப்பொழுது நடிகர்கள் புற்றீசல்கள் போல் அரசியலில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஜெயசித்ரா, விஜயசாந்தியில் தொடங்கி நடிகை லதா வரை அரசியல் பணியை கையில் தூக்கி கொள்கைகளை பரப்பி வருகின்றார்கள். தமிழ் நாட்டு மக்களும் ஏற்றுக்கொண்டு தான் இருக்கின்றார்கள் போல் தெரிகின்றது. இல்லாவிட்டால் ஓய்வு பெற்ற நடிகைகள் M.P, M.L.A சீட்டுக்கள் கேட்பார்களா ? கேட்டால் நடிகர்கள், நடிகைகள் அரசியலில் ஈடுபட்டால் தவறா? எங்களுக்கு உரிமை இல்லையா? என்பார்கள்.



ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அரசியலில் ஈடுபடும் சுதந்திரம் உண்டு. அதனை யாருக்கும் யாரும் மறுக்க முடியாது. பொதுவாழ்வில் சமூக நலனுக்காக தங்கள் பங்கை அளிப்பதில் தவறு இல்லை. ஆனால் தலைவர் காமராஜர் போல இளம் வயதில் இளம் இரத்தத் துடிப்புடன் நாட்டு



அரச கட்டளை படத்தில் காலம் சென்ற நடிகரான முன்னாள் முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன்.

மக்கள், மக்கள் தொண்டு என்று நற் சிந்தனையுடனும் நேர்மையாகவும் செயற்பட வேண்டும்.

ஆனால் பல கோடி பணத்தை அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய வருமான வரிப்பணத்தை ஏமாற்றி தங்களுக்கு வேண்டிய அளவு பணத்தை சேர்த்து பதுக்கிவிட்டு, வாழ்க்கையை ஜாலியாக பொழுது போக்க அரசியல் என்ற சாயத்தை பூசிக்கொண்டு, மக்கள் நலன் பெரிது என்ற வசனம் பேசிக் கொண்டு கிளம்பிவிடுகிறார்கள்.

கலைஞர்கள் என்றால் என்ன? மக்களை தனக்குள்ள கலைத் திறனால் வசப்படுத்துபவர்கள். அதுவே அவர்களுக்கு தொழிலாகும். இவர்கள் உச்சக் கட்டத்தில் இருக்கும் காலத்தில் பொழுது போக்கு என்று சொல்லக் கூடிய சினிமாக் கலையை மக்கள் இரசித்துப் பாராட்டி உற்சாகப்படுத்துகின்றார்கள். அதனால் நடிகன் நடிகையின் சம்பளம் உயர்த்தப்படுகின்றது. நட்சத்திர அந்தஸ்தும் கிடைக்கின்றது. ஆனால் அதுவே அவர்கள் அரசியலிற்குள் நுழைவதற்கான தகுதி ஆகுமா?

நேர்மையான மக்கள் நலனில் அக்கறையுள்ள எவரும அரசியலிற்கு வரலாம். வர வேண்டும். அப்படி வந்து அவர்கள் தம் சேவையை செய்யாது விடின் நாளை தமிழகம் மட்டுமல்ல முழு இந்தியாவுமே வேதனைப்பட வேண்டிய ஓர் நிலை உருவாகும்.

கலைகலைக்காகவே என்றிருந்த அன்றைய நிலை காலம் சென்றுவிட்டது. கலை என்பது பொழுதுபோக்கிற்கும் மேலாக பல இலட்சியங்களை கொண்டுள்ளது. மக்களின் வாழ்வோடு இன்று கலைகள் பின்னிப் பிணைந்துள்ளன. ஆகவே இன்று கலை என்பது மக்களுக்காக என்று கூறுவது சாலப் பொருந்தும்.

இப்படிப்பட்ட கலைகளில் ஒன்றான திரைக் கலை மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை சிந்திக்க வைக்க வேண்டும். அப்படியான திரைப் படம் காலமெல்லாம் வாழும். □□□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளையாட்டு

# சார்ஜா கிண்ணப் போட்டி முடிவுகள்



சார்ஜாவில் நடைபெற்ற சார்ஜா கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் முதன்முறையாக இங்கிலாந்து அணி வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றுள்ளது. ஒரு வார காலமாக சென்ற டிசம்பரில் நடைபெற்ற போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்திய அணிகளும் மோதிக்கொண்டன.

முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி இந்தியாவை 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. முதலில் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 49.6 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. Alex Stewart 116 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து ஆடிய இந்திய அணி சகல விக்கட்டுக்களையும் 243 ஓட்டங்களுக்கு இழந்து தோல்வியைத் தழுவிக்கொண்டது. Fleming 4 விக்கட்டுக்களை வீழ்த்திய பெருமையை பெற்றுக்கொண்டார்.

இரண்டாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணியும் பாகிஸ்தானும் மோதின. இப்போட்டியில் மேற்கிந்திய அணி பாகிஸ்தானை 43 ஓட்டங்களாலும், மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து அணி மேற்கிந்திய அணியினை 4 விக்கட்டுக்களாலும் தோற்கடித்தன.

விறுவிறுப்பான போட்டியாக அமைந்த நான்காவது போட்டியில் பரமஎதிரிகளான இந்தியாவும் பாகிஸ்தானும் மோதிக் கொண்டன. முதலில் துடுப்பாடிய இந்தியா 50 ஓவர்களில் 239 ஓட்டங்களைப் பெற்றது. Ganguly 90 ஓட்டங்களையும், Sidhu 54 ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து ஆடிய பாகிஸ்தான் அணி 47.2 ஓவர்களில் 243 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தழுவியது. Saeed Anwer 104 ஓட்டங்களையும், Moin Khan 49 ஓட்டங்களையும் சிறப்பாக விளையாடிப் பெற்றனர்.

அடுத்து நடந்த போட்டிகளில் இங்கிலாந்து அணியை எதிர்த்து விளையாடிய பாகிஸ்தான் அணி 8 ஓட்டங்களாலும் மேற்கிந்திய தீவை எதிர்த்து ஆடிய இந்தியா 49 ஓட்டங்களாலும் தோல்வியைத் தழுவிக்கொண்டன.

நடந்து முடிந்த போட்டிகளில் எல்லா ஆட்டங்களிலும் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணியும் ஒரேயொரு ஆட்டத்தில் தோல்வியைத் தழுவிய மேற்கிந்திய அணியும் இறுதி ஆட்டத்தில் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்றது. Stwart Williams 55 ஓட்டங்களையும், Chanderpaul 76 ஓட்டங்களையும், Simmons ஆட்டமிழக்காமல் 39 ஓட்டங்களையும் பெற்றனர். Kark Eatham சிறப்பாக பந்து வீசி 10 ஓவர்களில் 26 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 1 விக்கட்டையும், Fleming 8 ஓவர்களில் 42 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி 48.1 ஓவர்களில் 239 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தை தழுவிக் கொண்டது. இதில் Alex Stewart, Thrope ஆகியோர் சிறப்பாக ஆடி தலா 51, 66 ஓட்டங்களைப் பெற்றனர்.

Adam Holioalce இங்கிலாந்து அணியின் தலைமையை ஏற்றுச் சென்றிருந்தார்.

நீண்ட காலமாக தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வந்த இங்கிலாந்து அணி தாமும் விளையாடக் கூடியவர்கள் என்பதை வெளியுணர்த்தியுள்ளனர்.

பலநாட்டு அணிகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருந்த இப்போட்டியின் முன்னாள் சம்பியனான இலங்கையணி இப்போட்டித் தொடரில் விளையாடவில்லை. ரசிகர்கள் "சிங்கம் இல்லாத காட்டுக்கு நரியாரே காவலாம்" என்று கூறிக்கொள்கின்றனர்.

சி.பு.புண்ணியலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மின்னல்

**மின்னலின் நேரடித் தாக்குதலில் குறைந்தது 2000ற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்படுகின்றார்கள். அபிவிருத்தி அடைந்த நாடான ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இறக்கின்றார்கள்.**

மின்னல் இயற்கையின் எழில் கோலங்களில் ஒன்றாகும். மின்னல் மின்னும் போது நாம் இயற்கை அழகை இரசித்தாலும் கூடவே ஒருவித பயவுணர்வும் மனதில் உண்டாகின்றது. மின்னல் சக்தியை உருவகப்படுத்துவதோடு நின்று விடாமல் அபாயத்தையும் உணர்த்துகின்றது.

மின்னல் அடிக்கடி நடக்கும் நிகழ்வாகத் தெரியாத போதிலும் ஒரு செக்கனில் 100 தடவைகள் புவியின் மேற்பரப்பைத் தாக்குகின்றது. கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட 8 மில்லியன் தடவைகள் புவியைத் தாக்குகின்றது. விஞ்ஞானிகளின் கணிப்பின்படி குறிப்பிட்ட ஒரு கணத்தில் குறைந்தது 2000 இடி மின்னல்கள் புவியின் வளி மண்டலத்தில் உருவாகின்றன.

மழை முகில்களின் கீழ்ப்பரப்பில் உருவாகும் Negative Charges புவியின் மேற்பரப்பில் உள்ள Positive Charges ஆல் ஈர்க்கப்படும் போது முகிலில் இருந்து புவிக்கு Electic-Charges பாய்கின்றது. இதையே நாம் மின்னல் என்கின்றோம். இம்மின்னல் குறைந்தது 1 பில்லியன் V மின்னழுத்தத்தையும், 10,000 தொடக்கம் 20,000A மின்சாரத்தையும் கொண்டுள்ளது. சராசரி மின்னலின் நீளம் 6 மைல்கள் ஆகும்.

மின்னல் உருவாகும் போது ஏற்படும் அதி உயர் வெப்பம் தான் அதைச் சூழவுள்ள வளி ஒளிர்வதால் மின்னல் அதன் உண்மையான இரண்டு தோற்றத்தை விட அகலமான தாகத் தோன்றுகின்றது.



மின்னலின் போது அதைச் சூழவுள்ள வளி குறைந்தது 15,000°C - 50,000°C வெப்பநிலை உயர்கிறது. இவ் அதி உயர் வெப்பநிலையால் வளி வெடிப்பதால் உருவாகும் சத்தமே இடி ஆகும். மின்னல் அருகில் உருவானால் இடிச் சத்தம் பெரிதாகவும் தூரவாயின் சிறிதாகவும் கேட்கின்றது. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நேரத்தில் உருவாகும் மின்னலால் உண்டாகும் இடியே கடகடவென்று கல்பொறியும் சத்தம் மாதிரிக் கேட்கின்றது.

மின்னல் தோன்றும் தூரத்தை நாம் இருக்கும் இடத்தில் இருந்து மின்னல்-இடி முறை மூலம் கணிக்கலாம். மின்னல் தோன்றும் நேரத்திலிருந்து இடி முழங்கும் நேரத்திற்கும் இடையிலான நேரத்தை 5ல் வகுத்தால் மின்னல் நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து எவ்வளவு மைல்கள் என்று தெரியும்.

உலர் வலய ஆபிரிக்காவில் தான் மின்னல் அதிகம் தோன்றுகின்றது. வருடத்திற்கு 180 நாட்கள் மழை மேகங்கள் கூடுவதால் அதிக மின்னல் ஏற்படுகின்றது.

மின்னலின் நேரடித் தாக்குதலில் குறைந்தது 2000ற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்படுகின்றார்கள். அபிவிருத்தி அடைந்த நாடான ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இறக்கின்றார்கள். □□□□□□□□□□

திவிஷா

www.tamilarangam.net



தமிழ் மக்களிடம் உருவாக்க முனைந்து செயற்படுகின்றது. இது உண்மையில் வெற்றி அளிக்குமானால் ஈழ விடுதலைப் போராட்டம் தேக்க நிலைக்கு தள்ளப்படும். அத் தேக்கநிலையிலிருந்து அதனை மீட்கும் சக்தி இல்லாத விடத்து ஸ்ரீலங்காவின் வரலாறு ஈழ விடுதலைப் போராட்டத்தை உள்நாட்டு குழப்பமாக எழுதிக் கொள்ளும்.

தற்போது இலங்கை அரசின் தீவிர பிரச்சாரத்தாலும் ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்பவர்கள், தகவல் தொடர்பு சாதனங்களை உரிய முறையில் பயன்படுத்தாமையினாலும் இலங்கை அரசிற்கான சர்வதேச ஆதரவு பெருகியுள்ளது. ( பார்க்க - ஆய்வுக் கட்டுரை *சர்வதேச அரங்கில் விடுதலை* ) இதனால் இலங்கை அரசால் தன்னிச்சைப்படி செயற்படக் கூடியதாக உள்ளதுடன் பொருளாதாரரீதியில் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு எதிர் போராட்டத்தை இலங்கை அரசால் தக்க வைத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளது.



விடுதலைப் புலிகள்



வன்னிப் போர்க் களத்தில் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட பாலத்தை பிரதி பாதுகாப்பு அமைச்சரும் அவருடைய சகாக்களும் கார்வையிடுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடி

www.tamilarangam.net

## பாதுகாப்பு

யாழ்ப்பாண தீபகற்ப கட்டுப் பாட்டுக்கான யுத்தத்தில் இராணுவத்தினரின் மனோ நிலை முக்கியமான காரணி யாகும். யாழ் குடாநாட்டை புலிகளிடம் இருந்து கைப் பற்றியதால் தன்னம்பிக்கை யும் மனோபலமும் அதிகரித் துக் காணப்பட்ட இராணுவத் தினர்; இன்று குடாநாட்டில் புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து வரு வதால் படையினரின் மனநி லை பாதிப்படையத் தொடங் கியுள்ளது.

யாழ் குடாநாட்டை வன்னிப் பெருநிலப் பகுதியுடன் தொ டர்புபடுத்த மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக் கையான ஜெயசுக்குறு ஆரம் பித்து 9 மாதங்களாகியும் தம்முடைய இலக்கை அடை யாமல் பாரிய இழப்புக்களு டன் தடுமாறிக் கொண்டிருக் கின்றது. இது யாழ் தீபகற் பத்தில் உள்ள இராணுவத் தினரின் மனோநிலையை பெரிதும் நலிவடையச் செய் துள்ளது. இது அவர்களின் தாக்குதிறன், தன்னம்பிக்கை போன்றவற்றைக் குறைப்பது டன் தாம் அன்னிய மண் ணில் இருப்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

அரசு தமிழ் மக்களின் குறைந் தபட்சத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வை வைக்காமல் மக்க ளைத் திருப்திப்படுத்த முடி யாது. மக்களைத் திருப்திப் படுத்தாமல் மக்களிடையே ஆதரவை பெறமுடியாது. அப் படியான நிலையில் மக்கள் அரசுக்கு எதிரான போராட் டங்களில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை ஏற்படும். இதைத் தடுக்க அரசு வன்முறையை ஏதாவது சந்தர்ப்பத்தில் பா விக்க வேண்டிவரும். இது மக்களின் அதிருப்தியை மேலும் அதிகரிக்கும். இத னால் ஸ்திரத்தன்மை மேலும் நலிவடையும்.

எனவே யாழ் தீபகற்பத்தின் கட்டுப்பாடு என்பது பல காரணிகளால் பாதிப்படைகி ன்றது என்ற போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்துகின் றார்கள் என்பதைப் பொறு த்தே எதிர்காலம் அமையும்.

குறிப்பு: இச் சஞ்சிகை பதிப்பகத்திற்கு செல்கையில் கிளிநொச்சி பகுதியில் பாரிய தாக்குதல் நடந்து கொண்டிருப்பதாகவும் இருதரப்பிலும் பாரிய உயிரி ழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த 15 ஆண்டு கால உள்நாட் டுப் போரில் ஆலயங்கள், தேவால யங்கள், பள்ளிவாசல்கள், விகாரை கள் போன்ற மதவழிபாட்டு இடங் களும் மருத்துவமனைகள் பாடசா லைகள் போன்ற பொது இடங்க ளும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள எல் லாத் தரப்பினராலும் யுத்தகள மாக்கப்பட்டுள்ளமை அநாகரிகமான செயலாகும். பொது இடங்களும் வழிபாட்டு ஸ்தலங்களும் பாது காக்கப்பட வேண்டும் என்பது யுத் தத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் அறிந்ததே. அப்படியிருந்தும் இப்ப டியான பொது இடங்களை தாக்கு வதும் ஒரு கொலையை இன்னோர் கொலையால் ஈடுசெய்ய முற்படு வதும் நாகரிகமான வளர்சியடைந்த பண்பட்ட சமூகத்திற்கு அழகா ?

தாக்குதலுக்கு இலக்கான தலதா மாளிகைக்கே சுதந்திர தின கொ ண்டாட்டங்களில் கலந்து கொள்ள வரும் இளவரசர் சார்ள்ஸ் வரவி ருந்தார். குண்டு வெடிப்பை தொடர்ந்து சுதந்திர தின கொண் டாட்டம் கொழும்பிற்குள்ளேயே முடக்கப்பட்டது. இளவரசர் தன் விஜயத்தின் ஒரு பகுதியாக தலதா மாளிகைக்கு இரகசிய விஜயமொன்றை செய்யலாம் என நம்பப்படுகிறது. அப்படி ஓர் விஜயத்தின் மூலம் ஈழ விடுதலைப் போராட்டத்தை ஓர் மதவெறிப் போராட்டமக சர்வதேச சமூகத் திற்கு காட்ட இலங்கை அரசு முற்படலாம்.

### தலதா மாளிகை இலக்கு

25 ஜனவரியில் பௌத்தர்களின் புனிதஸ்தலமும் சிங்கள மக்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந் ததுமான தலதா மாளிகை தற் கொலைத் தாக்குதலுக்கு இலக்கா னது. இதில் தற்கொலையாளிகள் மூவர் உட்பட 16 பேர் பலியாகி யுள்ளனர். புலிகளே காரணம் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.



www.tamilarangam.net


# JR PRINT

## Quality, Speed & Lowest Cost

**Translation, Type Setting & Printing Services**

**Specialists in Wedding Cards**

| | | |
|---|---|---|
| Wedding Cards | Invitation Cards | Labels |
| Letter Heads | Visiting Cards | Leaflets |
| Receipt Pads | Raffle Tickets | Booklets |
| Souvenirs | Menu Cards | Invoices |
| Cake Boxes | Shorteat Bags | Fax |

**57 Boundary Road**
**Walthamstow**
**London**
**E17 8NQ**

**Tel : 0181 503 6643**
**Fax : 0181 923 6643**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

WIMAL

WIMAL photographers

WIMAL PHOTOGRAPHERS

விமல் படப் பிடிப்பாளர்கள்

Photography by experienced and qualified photographers for all occasions atcompetitive rates.

தங்கள் மங்கள கரமான வைபவங்களிற்கு
தேர்ச்சி பெற்ற அனுபவமுள்ள படப் பிடிப்பாளர்களால்
புதிய நுட்பங்கள் பயன்படுத்தி படம் பிடித்து
நியாய விலையில் தரப்படும்.

Contact : Wimal

Professional Photographer

Tel : 0181 - 472 3434

Mobile : 0956 546 978

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்